ஸ்ரீ

சிவகுகமயம்.

பெரிய திருப்புகழ்.

151-பாட்டுகள்.



இதன் விலை
அணா 4

பி. வி. ரங்கைய செட்டி
அவர்களது
S. L. N. V. Press.
MADRAS.

10—11—12

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

உ சிவமயம்

[illegible]

உ

Sivamayam

RM

Lekshumananchettys

Allanguti

உ

கணபதி துணை.

திருவண்ணாமலையில்

ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள் வரப்பிரசாதியாய்

எழுந்தருளியிருந்த

அருணகிரிநாதர்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்புகழ்.

இவை,

(யாழ்ப்பாணத்துக்கு மேலைப்புலோலி

மகாவித்வான்

நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்

மாணாக்கரிலொருவரால் பரிசோதித்து,

பி. வி. ரங்கையசெட்டியார்

அவர்களது.

சென்னை

ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்மவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

நெ-20-பள்ளியப்பன்தெரு.

௧௯௧௨.



திருப்புகழ்.

பிரபந்தச்சிறப்பு.

நேரிசை வெண்பா.

எல்லாரு ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்லெல்லா மாணிக்கக்கல்லாமோ - பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ காணமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ்செவி.

கலிவிருத்தம்.

திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவலு வாலே
ஒருத்தரை மதிப்பதிலை யுன்றனருளாலே
பொருப்பரை மிகப்பொருது வென்றுமயின் மீதே
தரித்தொரு திருத்தணிகை நின்றபெருமாளே.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியச் சந்தவிருத்தம்.

ஏறுமயி லேறிவிளையாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடுசூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொரு ணீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்தபெரு மாளே.

விநாயகர் துதி.

1. தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன—தனதான.

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகு
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை யுத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழடைவினை முற்படு கிரிதனின்
முற்பட வெழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த வச்சிவ னுறைரத
மச்சது பொடிசெய்த வதிதீர
வத்துய ரதுகொடு சுப்பிரமணிபடு
மப்புன மதனிடை யிபமாகி
யக்குற மகளுடனச்சிறு முருகனை
யக்கண மணமருள் பெருமாளே.

சுப்பிரமணியர் துதி.

2 தத்தத்தன தத்தத்தனதன
தத்தத்தன தத்தத்தனதன
தத்தத்தன தத்தத்தனதன—தனதான

முத்தைத்தரு பத்தித்திருநகை
யத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக்கொருவித்துக்குருபர னெனவோது
முக்கட்பர மற்குச்சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரு
முப்பத்துமு வர்க்கத்தமரரு மடிபேணப்

பத்துத்தலை தத்தக்கணைதொடு
மொற்றைக்கிரி மற்றைப்பொருதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியி லிரவாகப்

பத்தற்கிர தத்தைக்கடவிய
பச்சைப்புயன் மெச்சித்தருபொருள்
பட்சத்துடன் ரட்சித்தருளுவ தொருநாளே

தித்தித்திசை யொக்கப்பரிபுர
நிர்த்தம்பதம் வைத்துப்பயிரவி
திக்கொக்கந டிக்கக்கழுகொடு கழுகாடத்

திக்குப்பரி வட்டக்கலைகொடு
சித்ரப்பவு ரிக்குத்திகுதிகு
திக்குத்திகு திக்குத்ரிகடக மெனவோதுங்

கொத்துப்பறை கொட்டக்களமிசை
குக்குக்குகு குக்குக்குகுகுகு
குத்திப்புதைபுக்குப்பிடி யென முதுகூகை

கொட்புற்றெழு நட்புற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட வொற்றைப்பொரவல பெருமாளே.

திருப்பரங்கிரி.

3. தனத்தனந்தன தனதனதனதன
தனத்தனந்தன தனதனதனதன
தனத்தனந்தன தனதனதனதன—தனதான

அருக்குமங்கையர் மலரடிவருடியும்
கருத்தறிந்தபி னரைதனிலுடைதனை
யவிழ்த்துமங்குள வரசிலைதடவியு மிருதோளுற்
றணைத்துமங்கையி னடிதொறுநகமெழ
வுதட்டைமென்றுப லிடுகுறிகளுமிட
யடிக்களந்தனின் மயில்குயில்புறவென மிகவாய்விட்

டுருக்குமங்கியின் மெழுமெனவுருகிய
சிரத்தைமிஞ்சிடு மனுபவமுறுபவ
ருலக்கையின்கனி நிகரெனவிலகிய முலைமேல்வீழ்ந்
துருக்கலங்கிமெ யுருகிடவமுதரு
பெருத்தவுந்தியின் முழுகிமெயுணர்வற
வுழைத்திடுங்கன கல்வியைமகிழ்வது தவிர்வேனோ
இருக்குமந்திர மொழிவகைமுனிபெற
வுரைத்தசம்ப்ரம சரவணபவகுக
விதத்தவிங்கித மிலகியவறுமுக வெழில்வேளென்
றிலக்கணங்களு மியலிசைகளுமிக
விரிக்குமம்பல மதுரித்தகவிதனை
யியற்றுசெந்தமிழ்விதமொடுபுயமிசைபுனைவோனே
செருக்குமம்பல மிசைதனிலசைவற
நடித்தசங்கரர் வழிவழியடியவர்
திருக்குருந்தடி யருள்பெறவருளிய குருநாத
திருக்குழந்தையு மெனவவர்வழிபடு
குருக்களின்றிற மெனவருபெரியவ
திருப்பரங்கிரி யுறைபவசரவண பெருமாளே.

---

4. தனத்தனந்தன தனதனதனதன
தனத்தனந்தன தனதனதனதன
தனத்தனந்தன தனதனதனதன — தனதான.

கருக்குமஞ்சன விழியிணையயில்கொடு
நெருக்கிநெஞ்சுற வெறிதருபொழுதொரு
கனிக்குளின்சுவை யமுதுகுமொருசிறு கையாலே

கராக்கொடுங்கலி வலைகொடுவிசிறியெ
மளைக்கெழுந்திரு மெனமனமுருகவொர்
கவற்சிகொண்டிடமனைதனிலழைகொடு கொடுபோகி

கறுத்தபஞ்சணை மிசைதனின்மனமுற
வளைத்தணைக்குள வரிசைமுலையெதிரப்பொர
கசத்தழுந்திட வழுதிதழ்ப்பருகிய மிடறூடே
கழுத்தினூங்குரல் குமுகுமுகுமுவென
விசைத்துநகைகொடு மனமதுமறுகிட
கருப்புநஞ்சனை சிறுமியர்செயலற அருள்வாயே
நிறைத்தகத்தணைமுழா மொகுமொகுமொகுவெ
வுரைத்தஞ்சளி முடிகெழுகெழுவென [னெ
நிலைத்தவண்டமுகம்கொடுகடுவென வரைபோலும்
நிவர்த்ததிண்கழ லசைரமரொடு
இரக்கொடிங்குவை பலைபுரைதாவிரு
நிணக்குழம்பொடு குருதிகள்சொரிதர வடிதேர்
திறற்கருங்குழ லுமையவளருளுறு
புழைக்கைகும்மத கயமுகமிகவுள
சிவக்கொழுந்தனகணபதியுடன்வரு மிளையோனே
சினத்தொடுஞ்சம ருதைபடநிறுவிய
பரற்குளன்புறு புதல்வநன்மணியுகு
திருப்பரங்கிரி தனிலுறைசரவண பெருமாளே.

---

5. தனதந்தன தந்தனதந்தன
தனதந்தன தந்தனதந்தன
தனதந்தன தந்தனதந்தன—தனதான.

சருவும்படி வந்தனனிங்கித
மதனொன்றிடு மம்புலியுஞ்சுடு
தழல்கொண்டிடு மங்கையர்கண்களின் வசமாகி
சயிலங்கொளு மன்றல்பொருந்திய
பொழிலிற்பயில தென்றலுமொன்றிய
தடமுஞ்சுனை தூறாவெயழுந்திடு திறமான

இரவும்பக லன்றியுநின் றிடு
குயில்வந் திசை தந்தனவென் றிட
விருகண்கள் துயின் றிடவன் றியு மயலான
விவனெஞ்சுப தனபதனென் றிடு
முடல்கொண்டுவ ருந்தியவஞ்சக
னினியுன்றன்ம லர்ந்திலகும்பத மடைவேனோ
திருவென் றில் விளங்கியவண்டர்கள்
மனையின்றயி ருண்டவனெண்டிசை [ன்
திகழும்புகழ்கொண்டவன் வண்டமிழ்பயில்வோர்பி
திரிகின்றவன் மஞ்சுநிறம்புனை
பவன்மிஞ்சுதி றங்கொளவென்றடல்
செயதுங்கமு குந்தன்மகிழ்ந்தருள் மருகோனே
மருவுங்கட லுந்துமியுங்குட
முழவங்கள்குமின்குமினென்றிட
வயமொன்றிய செந்திலில்வந்தருள் முருகோனே
மதியுங்கதி ரும்புயலுந்தின
மறுகும்படி யண்டமிலங்கிட
வளர்கின்ற பரங்கிரிவந்தருள் பெருமாளே.

6. தனத்தனந் தந்ததான
தனத்தனந் தந்ததான
தனத்தனந் தந்ததான—தனதான.

வரைத்தடங் கொங்கையாலும்
வளைப்படுஞ் செங்கையாலு
மதித்திடுங் கொண்டையாலு மனைவோரும்
வடுப்படுந் தொண்டையாலும்
விளைத்திடுஞ் சண்டையாலு
மருட்டிடுஞ் சிந்தைமாதர் வசமாகி

எரிப்படும் பஞ்சுபோல
மிகக்கெடுந் தொண்டனேனு
மெனப்படுந் தொந்தவாரி கரையேற
விசைத்திடுஞ் சந்தபேத
மொலித்திடுந் தண்டைசூழு
மிணைப்பதம் புண்டரீக மருள்வாயே
சுரர்க்குலஞ் சஞ்செய்சூரன்
கிளைக்கிளைஞ் சம்மதோடு
துளக்கெழுந் தண்டகோள மளவாகத்
துரத்தியன் றிந்த்ரலோக
மழித்தவன் சம்ப்ரதாயஞ்
சுடப்படுஞ் சண்டவேலை விடுவோனே
செருக்கெழுந் தும்பர்சேனை
துளக்கவென் றண்டமூடுந்
தொனித்திடுஞ் சங்கபாணி மருகோனே
தினைப்புனஞ் சென்றுலாவு
குறத்தியின் னன்பராகுந்
திருப்பரங் குன்றமேவு பெருமாளே.

---

7. தனனதந்த தத்தத்தனந்த
தனனதந்த தத்ததனந்த
தனனதந்த தத்தத்தனந்த — தனதான.

கருவடைந்து பத்துற்றதிங்கள்
வயிறிருந்து முற்றிப்பயின்று
கடையில்வந்து தித்துக்குழந்தை வடிவாகி
கழுவியங்கெடுத்துச்சுரந்த
முலையருந்தி விக்கிக்கிடந்து
கதறியங்கை கொட்டித்தவழ்ந்து நடமாடி.

அரைவடங்கள் கட்டிச்சதங்கை
யிடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
யவையணிந்துமுற்றிக்கிளர்ந்து வயதேறி
யரியபெண்க ணட்பைப்புணர்ந்து
பிணியுழன்று சுற்றித்திரிந்த
தமியனுன்க்ருபை சித்தமென்றுபெறுவேனோ
இரவியிந்த்ரன் வெற்றிக்குரங்கி
னரசரென்று மொப்பற்றவுந்தி
யிறைவனெண் கினக்கர்த்தனென்று நெடுநீல
னெரியனும்ம ருத்துச்சிறந்த
வனுமனென்று மொப்பற்றவண்ட
ரெவருமந்தி வர்க்கத்தில்வந்து புனமேவ
அரியதன்படைக்கர்த்தனென்று
மசுரர்தன்கிளைக்கட்டையென்று
வரிமுகுந்தன்மெய்ப்பித்தபன்பின்மருகோனே
அயனையும் படைத்துச்சினந்து
வுலகமும் படைத்துப்பரிந்து
வருள்பரங்கிரிக்குட்சிறந்த பெருமாளே.

---

8. தந்தனந் தந்ததன
தந்தனந் தந்ததன
தந்தனந் தந்ததன—தனதான.

கன்றலங் கொத்துமிசை
தந்தனந் தந்தவென
வண்டினங் கண்டுதொடர் குழன்மாதர்
கண்டிடுங் கொண்டையமு
தண்டுமொண் டன்பினமிக
வம்பிடுங் கும்பகன தனமார்பின்

ஒன்றவும் பொன்றவிழி
கண்டவங் கங்குழைய
வுந்தியென் கின்றமடு விழுவேனை
யுன்சிலம் புங்கனக
தண்டையுங் கிண்கிணியு
மொண்கடம் பும்புனையு மடிசேராய்
பன்றியங் கொம்புகம
டம்புயங் கஞ்சுரர்கள்
மண்டையென பங்கமணி பவர்சேயே
பஞ்சரங் கொஞ்சுகிளி
வந்திருந் தைந்துகர
னண்டிதன் றம்பியெனும் வயலூரா
சென்றுமுன் குன்றவர்கள்
தந்தபெண் கொண்டுவளர்
சண்பகம் பைம்பொன்மலர் செறிசோலை
திங்களுஞ் செங்கதிரு
மங்குலுந் தங்குமுயர்
தென்பரங் குன்றிலுறை பெருமாளே.

திருச்செந்தில்.

9. தனனதானன தந்தனதந்தன
தனனதானன தந்தனதந்தன
தனனதானன தந்தனதந்தன—தனதான

கமலமாது மருந்ததியுந்துதி
செயவொணாதமடந்தையர்சந்தன
களபசீதள கொங்கையிலங்கையில் விருபோதே
களவுநூல்தெரி வஞ்சனையஞ்சன
விழியின்மோகித கந்தசுகந்தரு
கரியவோதியில் விந்துமுகந்தனின் மருளாதே

அமலமாகிய சிந்தையடைந்தகல்
தொலைவிலாதவ றம்பொருளின்பமு
மடையவேோதியுணர்ந்து தணிந்தபினருள்தாளை

யறியுமாறுபெறும்படியன்பினி
னினியநாதசி லம்புபுலம்பிடு
மருணவாடக கிண்கிணிதங்கிய வடிதாராய்

குமரிகாளிப யங்கரிசங்கரி
கவுரிநீலிப ரம்பரையம்பிகை
குடிலைகோகினி சண்டினிகுண்டலி யெமதாயி

குறைவிலாவுமை மந்தரியந்தரி
வெகுவிதாகடி சுந்தரிதந்தருள்
குமரமூஷிக முந்தியவைங்கர கணராயன்

மமவிநாயக னஞ்சுமிழ்கஞ்சுகி
யணிகஜானன னின்பனொரம்புவி
மவுலியாமொரு சிந்தையுகந்தரு ளிளையோனே

வளரும்வாழையு மஞ்சளுநஞ்சியு
மிடைவிடாது நெருங்கியமங்கல
மகிமைமாநகர் செந்திலில்வந்தருள்பெருமாளே.

---

10. தனதனன தந்ததந்தன
தனதனன தந்ததந்தன
தனதனன தந்ததந்தன — தனதான.

இருகுழையெ றிந்தகெண்டைக
ளொருகுமிழ டர்ந்துவந்திட*
விணைசிலை நெரிந்தெழுந்திட வணைமீதே

யிருளளக பந்திவஞ்சியி
னிருகலையுடன்குலைந்திட
விதழமுத ருந்துசிங்கியின் மனமாய

---

* (ஒருமுமிழியிடந்துலங்கிட) எனவும் பாடம்.

முருகொடு கலந்தசந்தன
மளறுபடு குங்குமங்கமழ்
முலைமுகடு கொண்டெழுந்தொறு முருகாசை

முழுமதிபு ரந்தசிந்துர
வரிவையரு டன்கலந்திடு
மறிவிலனை லம்பிறந்திட வருள்வாயே

எரிவிடநிமிர்ந்தகுஞ்சியி
லிலவொடிலவ மூழ்த்தகங்கையு
மிதழியொ டணிந்தசங்கரர் களிகூரு

மிமையமலைத ருங்கருங்குயில்
மரகதநி றந்தருங்கிளி
யுலகுயிரை யுங்கரியம்பிகை பெருவாழ்வே

அரைவடம லைப்புகிங்கிணி
பரிபுரமொ டுந்துதண்டைய
ணணிமணிச தங்கைகொஞ்சிட மயின்மீதே

யகமகிழ்வொ டநேசந்ததம
வருகுமர முன்றிலின்புற
வலைபொருத செந்திலிற்றங்கிய பெருமாளே.

---

11. தந்ததனான தானன தந்ததானன தானன
தந்ததானன தானனா — தனதான.

வெஞ்சரோருக மோகடு நஞ்சமோகய லோநெடு
வின்பசாகர மோவடு வகிரோமுன்

வெந்துபோனபு ராதன சம்பராரிபு ராரியை
வென்றசாயக மோகரு விளையோக

ளஞ்சமோம னாதுவர் நெஞ்சமோவெனு மாமட
நங்கைமாதர்ப யோதர மிகமூழ்கி

அங்கமேவிரு கூதள கந்தமாலிகை தோய்தரு
தண்டைசேர்கழ லீவது மொருநாளே

பஞ்சபாதக தாருக தண்டனீறெழ வானவர்
பண்டுபோலம ராபதி குடியேற
பங்கயாசனர் கோவ ரஞ்சலேயென மால்வரை
பங்கநீறெழ வேல்விடு மிளையோனே
செஞ்சடாடவி மீமிசை கங்கைமாதவி தாதகி
திங்கள்சூடிய நாயகர் பெருவாழ்வே
செண்பகாடவி யாகிய துங்கமாமதில் சூழ்தரு
செந்தின்மாநகர் மேவிய பெருமாளே.

12. தனனதனதன தனதனதனதன
தனனதனதன தனதனதனதன
தனனதனதன தனதனதனதன — தனதான.

களபமொழுகிய புளகிதமுலையினர்
கடுவுமமுதமு விரவியவிழியினர்
கழுவுசரியழ கொழுகியகுழையின ரெவரோடும்
கலகமிடுகய லெறிகுழைவிழியினர்
பொருளிலிளைஞரை வழிகொடுமொழிகொடு
தளரவிடுபவர் தெருவினிலெவரையு நகையாடிப்
பிளவுபெறிலதி லளவளவொழுகியர்
நடையிலுடையினி லழகொடுதிரிபவர் [வோரோடே
பெருகுபொருள்பெறி லமளியிலிதமொடு குழை
பிணமுமணைபவர் வெறிதருபுனலுணும்
வசவவனிதையர் முடுகொடுமணைபவர்
பெருமையுடைய வருறவினைவிடவருள்புரிவாயே
அளையிலுறைபுலி பெருமகவயிறதா
பசுவினிறைமுலை யமுதுணநிறைமகள்
வசுவதெனுபுலி முலையுணமலையுட னருகாகி

னாடவிதனிலுள வுலவைகள் தளிர்விட
மருளமதமொடு களிறுகள்பிடியுட [ம்
னகலவெளியுயர் பறவைகணிலமவர விரல்சேரே
தொளைகள்விடுகழை விரன்முறைதடவிய
இசைகள்பலபல தொனிதருகருமுகி [லை
கருகியுடையவ னெடியவன் மனமகிழ் மருகோ
துணைவகுணதர சரவணபவநம
முருககுருபர வறுமுககுக
துறையிலலையெறி திருக்குருடைதருபெருமாளே.

---

13. தந்ததன தான தந்ததன தான
தந்ததன தான — தன தான.

கன்றிவருநீல குங்குமபடீர
கஞ்சமலர்மேவு முலைகாட்டிக்
கங்குல்செறிகேச நின்றுகுலையாமை
கண்கள்கடைகாட்டி விலைகாட்டி

நன்றுபொருடந்து வென்றுவிலைபேசி
நம்பிவிடுமாத ருடனாட்ட

நஞ்சுபுசித்தேனை யங்கமதுவாக
நைந்துவிடுவேனுக் கருள்வாயே

குன்றிமணிபோல செங்கணுரகங்
கொண்டபடம்வீசு மணிகூர்வாய்

கொண்டமயிலேறி குன்றிடியமோதி
சென்றவடிவேலைக் கொடுபோர்செய்

மன்றல்கமழ்பூகந் தெங்குதிரள்சோலை
வண்டுபடுவாவி புடைசூழு

மந்திபடமாமுஞ்சு செந்திநகர்மேவு
மைந்தசுராகாலப் பெருமாளே.

14. தனத்தந்தானன தானனதானன
தனத்தந்தானன தானனதானன
தனத்தந்தானன தானனதானன — தனதான

அனிச்சங்கார்முகம் வீசிடமாசுணு
துவட்டஞ்சாளைதடாகம்விடாமட
வனத்தின்றாவிகுலாவியசீறடி மடமாது

அருக்கன்போலொளி வீசியமாமர
கதப்பைம்பூணணி வார்முலைமேன்முக
மழுத்தும்பாவியை யாவியீடேறிட நெறிதாராய்

வினைச்சண்டாளனை வீணனைநீணிதி
துனைக்கண்டாணவ மானநிர்மூடனை
விடக்கன்பாய்நுகர் பாழனையோர்மொழிபுகராதே

விகற்பங்கூறிடு மோகவிகாரனை
யறத்தின்பாலொழு காதமூதேவியை
விபித்துன்பாலுறை நீதரானருள் பெறுவேனோ

முனைச்சங்கோலிடு நீலமகோததி
யடைத்தஞ்சாதவி ராவணனீள்பல
முடிக்கன்றோர்கணை யேவுமிராகவன் மருகோனே

முளைக்குஞ்சீதநி லாவொடுபாய்விரி
திரைக்கங்காநதி தாதகிகூவிள
முடிக்குஞ்சேகரர் பேரருளால்வரு முருகோனே

தினைச்செங்கானக வேடுவரானவர்
திகைத்தந்தோவென வேகணியாகிய
திறற்கந்தாவளி நாயகிகாமுறு மெழில்வேலா

சிறக்குந்தாமரை யோடையின்மேடையில்
நிறக்குஞ்சூல்வளை பால்மணிவீசிய
திருச்செந்தூர்வரு சேவகனேசுரர் பெருமானே.

திருப்பழநிமலை.

15. தனனதன தானதந்த தனனதன தானதந்த
தனனதன தானதந்த—தனதான.

கருவினுரு வாகிவந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர்தங்க ளடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி
அரகரசி வாயவென்று தினமுநினை யாமனின்று
மறுசமய நீதியொன்று மறியாம
லசனமிடு வார்கடங்கள் மனைவாசல் தோறுநின்று
மனமுநிறை நாணமின்றி யழிவேனோ
உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மாளரங்க
ருலகளவு மால்மகிழ்ந்த மருகோனே
வுபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
முறைபுகலி யூரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனரு ளால்வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனைகொன்று வயலூர்நிறைபதிவெ
பழநிமலை மீதினின்ற பெருமாளே. [...]

---

16. தனதன தத்ததானன
தனதன தத்ததானன
தனதன தத்ததானன—தனதான,

கதிரையவி லக்குமாதர்கள்
புதியவி ரத்நபூஷண
கனதன வெற்புமேன்மிகு மயலான
கவலைமனத்தனாகிலு
முனதுபரா க்ரமமாகிய
கனதனமொத்தமேனியு முகமாறும்

அதிபல வச்ரவாகுவு
மயினுனி வெற்றிவேலையு
மரவுபிடித்ததோகையு முலகேழு

மதிரவ ரற்றுகோழியு
மடியர்வ ழுத்துவாழ்வுரு
மபிநவ பத்மபாதமு மறவேனே

இரவிகு லத்திராசத
மருவியெதிர்த்துவீழ்கடு
ரணமுக சுத்தவீரிய குணமான

விளையவ னுக்குநீண்முடி
யரசது பெற்றுவாழ்வுற
இரகடைத்தாரகவன் மருகோனே

பதினொரு ருத்திராதிகள்
திசைமுகனக்குமாலிகை
பரிவொடு நிற்குமீசுரர் சுரலோகம்

பரிமள கற்பகாடவி
யரியளி சுற்றுபூவுதிர்
பழநிம லைக்குள்மேவிய பெருமாளே.

---

17. தானதந்ததனத் தானதந்ததனத்
தானதந்ததனத் — தனதான.

காரணிந்தவளைப் பாரடைந்துவினைக்
காதலினெஞ்சயராத் தடுமாறி
கானரம்புதிரத் தோல்வழும்புறுபொய்க்
காயமொன்றுபொறுத் தடியேனுந்

தாரிணங்குகுழற் கூரணிந்தவிழிச்
சாபமொன்றுநுதற் கொடியார்தந்
தாள்பணிந்தவர்பொற் றோள்விரும்பிமிகத்
தான்மெலிந்துவிடக் கருதோதான்

சூர்துண்டுபடப் போர்கடந்தொழுத்
தோயமுழங்குவதப் பொருவேலா
தூய்மைகொண்டகுறத் தோகைநின்றபுனச்
சூழ்பெருங்கிரியிற் றிரிவோனே
ஆரணன்கருடத் தாரணன்புகழ்தற்
காலமுண்டவருக் கரியோனே
ஆலயப்பழமைச் சோலையின்புடைசுற்
றுவினன்குடியிற் பெருமாளே.

திருவேரகம். (சுவாமிமலை.)

18. தனதனா தனதனா தனதனா தனதனா
தனதனா தனதனா தனதனா தந்ததன
தனதனா தனதனா தனதனா தந்ததன.தனதா

குபாகுரு பரமுருக குகனேகுமரகிருபை
[illegible] [தே
குருவென [illegible] முருக

குயின்மொழிநன் மடவியர்கள் விழியாலுருக்குப
தெருவிலைவாதபனை மெனவேடப்பர்களா [வர்
கொடுமைவர்களுடைமைமனை முடனே பறிப்பவர்கள

[illegible]
முலையிலும் [illegible] கர்கள்
தனமெவியர்மனமுறியசாழுவாவழைப்பியர்கண்வலையா

சதிசெய்பவாரவர்மகிழவனைமீது ருக்கியர்கள்[லே
[illegible] யெனமாதரிட்டதொழில்
[illegible] யுனடியேவழுத்தவருடருவாயே

[illegible] படைகளமீதெதிர்த்தபொழு
தொருவிசை யிலவர்கள்படைகெடவே [illegible] த்தவரி
[illegible] ருள [illegible] திவிபொருமீ

தவனமொடு மலைகைநட மிடவீர பத்திரர்க
ளதிரநிண மொடுகுருதி குடிகாளி கொக்கரிசெய்
தசையுணவுதனின் மகிழமயிடபேய்நிரைத்திரள்கள்

திமிதமிடநரிகொடிகள் கழுகாடவத்தவெறி
வயிரவர்கள் சுழலவொருகனியாபுரத்தைவிடுவோனே
திமிரதினகரவமரர் பதிவாழ்வுபெற்றுலவு முருகேசா

திருமருவு புயனயனொடுமபிராய தக்குரிசி
லடியாரவுமழநிமலை கதிர்காம முற்றுவளர்
சிவசமயவறுமுகவ திருவேரகத்திலுறைபெருமானே

---

19. தன னனதனத்த தனனதனத்த
தனனதனத்த—தனதானா.

மருவேசெறித்த குழலார்மயக்கில்
மதனாகமத்தின் விரகாலே
மயலேயெழுப்பி யிதமாயருத்த
மலமேனா முழ்கக்கு றுநறவாகி
பெருகாதலுற்ற தமியேனைநித்தம்
பிரியாதபட்ச முடனேயென்
பிழையேபொறுத்து னிருதாளிலுற்ற
பெருவாழ்வுபற்ற வருள்வாயே
குருவாயரற்கு முபதேசம்வைத்த
குகனேகுறத்தி மணவாளா
குளிர்காமிகுத்த வளர்போதமுற்ற
குடகாவிரிக்கு வடபால்வாழ்
திருமாறனுக்கு மருகாவுமைக்கொர்
சிறுவாகரிக்கு மிளையோனே
திருவேகரத்தி லுறைவாயரக்கர்
சிரமேதுணித்த பெருமானே.

20. தானனதத்தன தத்தனதத்தன
தானனதத்தன தத்தனதத்தன
தானனதத்தன தத்தனதத்தன — தனதான.

கோமளவெற்பினை யொத்ததனக்கிரியர்
காமனையொப்பவர் சித்தமுருக்கியர் [டை
கோவையிதழ்ச்சுவை நித்தமும்விற்பவர் மயில்கா
கோகிலமட்புற வொத்திடுபுட்குர
லோசனியப்புள்வ னைக்குரல்கற்றியர்
கோலவிழிக்கடையிட்டுமருட்டியர் விரகாலே
நாமமலர்ப்பளி மெத்தைபடுப்பவ
ராரையுமெத்திம னக்குளமைப்பவர்
சோலைவனக்கிளியொத்தமொழிச்சியர் நெறிகூடா
நாகுநெகிழ்த்தரை சுற்றியுடுப்பவர்
காசுபறிக்கம றித்துமயக்கியர்
சோதகவித்தைபடித்துநடிப்பவ ருறவாமோ
மாமரமொத்துரமைக்குநெருக்கிய
சூரனைவெட்டிநி ணக்குடலைக்கொடு
வார்புவிமெச்சவ ழித்தவிலட்சண கதிர்காம
மாமலையிற்பழ நிப்பதியிற்றணி
மாகிரியிற்றணி கைக்கிரியிற்பரி
மாகிரியிற்கிரி சுற்றிவளைத்திடு மலைவாயில்
ஏமவெயிற்பெறு வெற்பினினற்பதி
ஞாலகத்தான பத்தர்கள்சித்தம
தேதுநினைக்கநமெத்தவளிக்கரு ளிளையோனே
யோகவெற்பெனு மற்புதமிக்கசு
வாமிமலைப்பதி மெய்ச்சியசற்சன
ராசத[illegible]ன வுத்தமிபெற்றருள் பெருமாளே.

குன்றுதோறாடல்.

21. தந்தனதானதான தந்தனதானதான
தந்தனதானதான—தனதான.

வஞ்சகலோபமூடர் தம்பொருளூர்கடேடி
மஞ்சரிகோவைதூது பலபாவின்
வண்புகழ்வாரிகாரியென்றிசைவாதுகூறி
வந்தியர்போலவீணி லழியாதே
செஞ்சரணாதகீத கிண்கிணிநீபமாலை
திண்டிறல்வேல்மயூர முகமாறும்
செந்தமிழ்நாளுமோதி யுய்ந்திடஞானமூறு
செங்கனிவாயிலோர்சொ லருள்வாயே
பஞ்சவனீடுகூனு மொன்றிடுதாபமோடு
பைந்தமிழ்வாதுகூறு சமண்மூகர்
பண்பறுபீலியோடு வெங்கழுவேறவோது
பண்டிதஞானநீறு தருவோனே
குஞ்சரசாலைமேவு பைம்புனமீதுலாவு
குன்றவர்சாதிகூடி வெறியாடி
கும்பிடுநாமவாழ்வு தந்தவரோடுவீறு
குன்றுதோறாடன்மேவு பெருமாளே.

தென்கடயபண்டுறை.

22. தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்-தனதான

புனைப்புனைங்கலைப புஞ்சுருப் புகத்ருஞ்
கயல்விழித்துக் கடுக்கைபொட்டுஞ் சண்டையூடுஞ் சுருசுரும்
புதுநிலைக்குருத்தியுந் துஞ்சுநஞ்சுமபொருபெறிவேலும்

பொருவெனவி கன்றதன் றந்துமிங் குஞ்சுழன்
றிடைசடைசியந் தலைஞ்சம்பொதிக் கிங்கிகம்[மோதி
புவியினைஞர் முன்பயின் றம்பொனின் கம்பிதக்குழை

குணைலெயாடு மிந்திரியஞ் சஞ்சலங் கண்டிடும்
படியமர்பு ரிக்கருஞ் சங்கடஞ் சக்கதங்[ணிரைப்பால்
கொடுமைசெய்து சங்கொடுங் சிங்கிதங் குங்கடைக்க

தலவுபல செங்கனந் தங்கதந் தின்புறுங்
திரிவிதகா ணங்கஞேந் கந்தகின் செம்பதந் [வேலை
குறுஞேர்வளைக யத்தியுஞ் சத்தியுந் தொக்கமந் றமை

துணைர்விரிக டம்பமென் றொங்கலும் பம்புறம்
புழுகுமக லம்பகுஞ் சந்தனந் தங்கமர் [நீதாநந்
தொகுகளப முந்தணைந் தென்றுதல்கொண் டுபத்தி

தொலைவிச்சண்மு கந்தஞந் தக்கமக் காக்கஞம்
பழநிமலையம்பரங் குன்றமுந் செங்கிலைக்[ாழ்வாய்
துதிசெயுமெ யன்பர்தஞ் சிந்தைதென் றன்புறப்பதி

கணைபணைபு யங்கமுங் கங்கையுந் திங்களுங்
குரவுமறு குங்குறுந் தும்பையுங் கொன்றையுந்[தா
தமழ்சடில் சம்புவுங் கும்பிடுந் தண்புடைக் குருநா

களைசுட ரின்றிறனென் றந்தருஞ் சக்காள்
குறுமுனிக மண் டலிகொண்டுமுன் கண்டிடும்[னே.
கதிசெய்கதிவக் குறக்கென் கடம்பன் றுறைப்பெருமா

திருசிராமலை.

23. தன்னதானன தானனதானன
தன்னதானன தானனதானன
தன்னதானன தானனதானன — தந்ததான.

தறையின்மானிட ராசையினுன்மட
லெழுதுமாலருண் மாதர்கள்தோதக
சரசமாய்மல ரோதியினுலிரு கொங்கையாலும்

சதிசெய்நூலிடை யாளுடையாளை
யழகினுமொழி யால்விழியான்மருள்
சவலையாயடியேன்மயல்வாடிட யங்கலாமோ

பறவையானமெய்ஞ் ஞானிகண்மோனிக
ளனுங்காணவொணாத நிபுணிராசிய
பவனபூரக ரேசகமாயைவி டுத்துநாதம்

பகவொணாதது சேரவொணாதது
நினையொணாதது வானவனாதியர்
பதியதாரசை மாகியமேனியம வந்துதாராய்

சிறைவிடாதநி சாசரசேனைகண்
மடியவேலைக லாபமதேறிய
திறல்விநோதசமேளதயாபர வம்புயாசர்

திரைகள்போலவே யோதியசீதள
குடககாவிரி நீளலைசூடிய
திரிசிராமலை மேலுறைவிரகு றிஞ்சிவாழும்

மறவர்நாயக லாதிவிநாயக
வினையர்நாயக மால்விநாயக
வடிவுநாயக வானவர்நாயக வெங்கண்மாலின்

மகிழ்நாயக தேவர்நாயக
கவுரிநாயக னார்குருநாயக
வடிவதாமலை யாவையுமேவிய தம்பிரானே.

திருப்போரூர்:

24. தனத்தா தானதந்த
தனத்தா தானதந்த
தனத்தா தானதந்த — , தானா.

உருக்கார் வாளிகண்கள்
பொருப்பார் வார்தனங்க
ளுரைத்தேன் வாலசந்த்ர நுதலா

முருச்சேர் நீண்மருங்குல்
பணைத்தோ ளோதிகொண்ட
லுவப்பாய் மேல்விழுந்து திரிவோர்கள்
அருக்கா மாதர்தங்கள்
கலைக்கே யோடுமின்ப
வலைக்கே பூணுநெஞ்ச னதிபாவி
யசட்டால் மூடுகின்ற
மசக்கால் மாயுமிந்த
வவத்தா லீனனேற்கென் றருள்வாயே
எருக்கார் தாளிதும்பை
மருச்சேர் போதுகங்கை
யிணைச்சூடாதிகம்பர் புதல்வோனே
இருக்கா லேநினைந்து
துதிப்பார் நாவினெஞ்சி
லிருப்பா யானைதங்கு மணிமார்பா
செருக்கா லேமிகுந்த
கடற்சூர் மாளவென்ற
திறற்சேர் வேல்கைகொண்ட முருகோனே
தினைக்கோர் காவல்கொண்ட
குறத்தேன் மாதுபங்க
திருப்போ ரூரமர்ந்த பெருமானே.

25. தானதானன தானன தானதானனதானன
தானதானன தானன—தனதான.

சீருலாவிய வோதிம
மானமாநடை மாமயில்
சேயசாயல்க லாமதி முகமானார்
தேனுலாவிய மாமொழி
சேருமாமலை மாமுலை
சேலுலாவிய கூர்விழி குமிணுசி

தாருலாவிய நீள்குழல்
மேவயலாவிய தோளியர்
சார்பிலேதிரி வேனைநி னருளாலே
சாமவேதியர் வானவ
ரோதிநான்மலர் தூவிய
தாளில்வீழவி னாமிக வருள்வாயே
காருலாவிய நீள்புன
வேடர்மால்வரை மீதுறை
காவல்மாதினொ டாவல்செய் தருள்வோனே
காணவாகம வேதபு
ராணநூலினி னோதிய
காரணாகரு ணாகர முருகோனே
போருலாவிய சூரனை
வாரிசேறெழ வேல்விடு
பூவைசேவக மாமயின் மிசையோனே
போதனொடாகரன் மாதுமை
பாதியர்க்கோர் முருகாவரு
போரிமையோர்கள் மேவிய பெருமானே.

திருச்செங்கோடு.

26. தந்தாதனந்த தந்தாதனந்த
தந்தாதனந்த தனதான.

பந்தாடியங்கை கொந்தார்பரிந்து
வண்டார்புனைந்த குழன்மீதே
பண்பார்சுரும்பு பண்பாடுகின்ற
பங்கேருகங்கொணை முகமீதே
மந்தாரமன்றல் சந்தாரமொன்றி
வன்பாதகஞ்செய் தனமீதே

மண்டாசைகொண்டு விண்டாவிரைந்து
மங்கைமனுன்ற னடிதாராய்
கந்தாவரன்றன் மைந்தாவிளங்கு
கன்றாமுகுந்தன் மருகோனே
கண்டோர்புகழ்ந்த நன்கார்மடந்தை
கந்தாவரம்பை மணவாளா
செந்தாரடைந்த கொந்தார்கடம்பு
திண்டோளணிப்ப வணிவோனே
திண்கோடடர்ந்த வெண்கோடுறங்கு
செங்கோடமர்ந்த பெருமாளே.

பழமுதிர்சோலை.

27. தனதன தானதான தனதன தானதான
தனதன தானதான—தனதான.

இலவிதழ் கோதிநீதி மதலைய ராரபார
விளைகை யாடவாட மிகவாதுற்
றெதிர்பொரு கோரபார மருகமத கோலகால
விணைமுலை மார்பிலேற மதராசன்
கல்வியி லோடிநீடு வெகுவித ராகபோக
கரணப்ர தாபலீலை மடமாதர்
கல்வியின் மூழ்கியாழு மிழிதொழி லேனுன்மீது
கருதிய ஞானபோத மடைவேனோ
கொலைபுரி காளிசூலி வயிரவி நீலிமோடி
குலிசகு டாரியாயி மகமாயி
குமரிவ ராகிமோகி பகவதி யாதிசோதி
குணவதி யாலமுணி யபிராமி
பலிகொள்க பாலியோகி பரமகல் யாணிலோக
பதிவ்ரதை வேதஞானி புதல்வோனே

படையொடு சூரன்மாள முடுகிய சூரதீர
பழமுதிர் சோலைமேவு பெருமாளே.

சோலைமலை.

28. தானதன தந்ததந்த தானதன தந்ததந்த
தானதன தந்ததந்த — தனதான.

வாரணமு கங்கிழிந்து
வீழவும ரும்பலர்ந்து
மால்வரைய சைந்தனங்கண் முடிசாய

வாளகிரி யண்டரண்ட
கோளமுற நின்றெழுந்து
மாதவம றந்திறந்து நிலைபோய்

பூரணகு டங்கடிந்து
சீதகள பம்புனைந்து
பூசலைவி ரும்புகொங்கை மடவார்தம்

போகசய னந்தவிர்ந்து
நாடகப தம்பணிந்து
பூசனைசெய்தொண்டனென்ப தொருநாளே

ஆரணமு ழங்குகின்ற
வாயிரம டந்தவங்க
ளாகுதியி டங்கள்பொங்கு நிறைவீதி

யாயிரமு கங்கமழ்ந்த
நூபுரமி ரங்குகங்கை
யாறமர வந்தலம்பு துறைசேரத்

தோரணம லங்குதுங்க
கோபுரநெ ருங்குகின்ற
சூழ்மணிபொன் மண்டபங்கள் ரவிபோலச்

சோதியின்மிகுந்தசெம்பொன்
மாளிகைவிளங்குகின்ற
சோலைமலைவந்துகந்த பெருமானே.

ஸ்ரீபுருடமங்கை. *

௨௯. தானதனதந்த தானதனதந்த
தானதனதந்த — தனதான.

வேனின்மதனைந்து பாணம்விடநொந்து
விதிகொளுநின்று மடவார்பால்
வேளைவெளவந்து தாளினில்விழுந்து
வேடைகெடநண்பு பலபேசி
தேனிலுமணந்த வாயமுதமுண்டு
சீதளதனங்க ளினின்மூழ்கி
தேடியதனங்கள் பாழ்படமுயன்று
தேர்கதியதின்றி யுழல்வேனோ
ஆனிரைதுரந்து மாநிலமளந்தொ
ராலிலையிலன்று துயின்மாய
னையர்மனைசென்று பாறயிரளைந்த
வாரணமுகுந்தன் மருகோனே
வானவர்புகழ்ந்து தானவர்பயங்கொள்
மாநெடுவிளங்கு மணிமார்பா
மாமறைமுழங்கு ஸ்ரீபுருடமங்கை
மாநகரமர்ந்த பெருமானே.

---

* சோலைமலை.

பழநி.

30. தனனதந்தன தந்தனதன
தனனதந்தன தந்தனதன
தனனதந்தன தந்தனதன—தந்ததான.

கனகும்பமி ரண்டுநேர்மன
யெனநெருங்கு குரும்பைமாமணி
கதிர்சிறந்துவ டங்குலாவிய மர்ந்தகூதள்

கடையினின்றுப ரந்துநாடொறு
மிளகிவிஞ்சியெ ழுந்தகோமள
களபகுங்கும கொங்கையானையை யின்பமாகி

அணைவருங் கொளு மென்றுமேல்விலை
யிடுமடந்தையர் தங்கடோதக
மதின்மருண்டுது வண்டெனுளைசயு முந்துபாய

வதிவிதங்கொளு மின்பசாகர
முழுகும்வஞ்சக நெஞ்சையேயொழி
தருபதங்கதி யெம்பிரானரு டந்திடாயோ

தனனதந்தன தந்தனதன
டிகுகுடிங்குகு டிங்குபேரிகை
தகுகுதிங்கிகு திந்தோவென வொன்றுதாளந்

தமரசஞ்சல சஞ்சலாவென
முழவுடுண்டுடு டுண்டுடுவென
தருணகிண்கிணி கிண்கிணாமு ழங்கவோதி

பணிபதங்கய வெண்டிசாமுக
கிரியடங்கலு மண்டகோளகை
பதறிநின்றிட வந்தவாடக மென்றுதோகை

பரிவுகொண்டிட மிண்டியேவரு
நிசிசரன்கிளை கொன்றவேல்கொடு
பழநியங்கிரி யின்கண்மேவிய தம்பிரானே.

திருவேங்கடம்.

31. தனதாந்தன தானன தானன
தனதாந்தன தானன தானன
தனதாந்தன தானன தானன—தனதான.

வரிசேர்ந்திடு சேல்கணை யோவெனு
மிருள்போன்றிடு வேலையு நீலமும்
வடுவாங்கிடு வேல்விழி மாதர்கள் வலையாலே

வளர்கோங்கிள மாமுலை யாகிய
தனவாஞ்சையி லேமுக மாயையில்
வளர்மாந்தளிர் போனிற மாகிய வடிவாலே

இருள்போன்றிடு கார்குழ லீழவி
ழிசைசேர்ந்திடு பாயலின் மீதுற
வினிதாங்கனி வாயமு தூறல்கள் பருகாமு

னைமதாந்தன மானவை போனபி
னைவர்வேண்டுவ ராகில மேயினி
யிவைநீங்கிட வேயிரு தாளிணை யருள்வாயே

கரிவாம்பரி தேர்திரள் சேனையு
முடனாக்குறி யோதன னாதிய
ரவர்மாண்டிட வேயொரு பாரத மதிலேகி

கனபாண்டவர் தேர்தனி லேயெழு
பரிதூண்டிய சாரதி யாகிய
கதிரோங்கிய நேமிய னரி ரகுராமன்

திரைநீண்டிரை வாரியும் வாலியு
நெடுவான்பயின் மாமர மேழொடு
தசமாஞ்சிர ராவண னார்முடி பொடியாக

சிலைவாங்கிய நாரண னார்மரு
மகனாங்குக னேபொழில் சூழ்தரு
திருவேங்கட மாமலை மேவிய பெருமானே.

திருவானைக்கா.

32 தானதத்தன தத்தனதத்தன
தானதத்தன தத்தனதத்தன
தானதத்தன தத்தனதத்தன—தனதான.

ஆலம்வைத்தவி ழிசசிகள்சிக்கச
ஞகமக்கலை கற்றசமர்த்திக
ளார்மனத்தையு மெத்திவளைப்பவர் தெருவூடே

யாரவட்டமு லைக்குவிலைப்பண
மாயிரக்கல மொட்டியளக்கினு [லாய்
மாசையைப்பொரு ளொக்கநடிப்பவ ருடன்மா

மேலிளைப்புமு சிப்புமவத்தையு
மாவெடுத்தகு லைப்பொடுபித்தமு
மேல்கொளத்தலை யிட்டவிதிப்படி யெனுமாறும்

வேள்கணைக்கிரை யிட்டுடலத்தனை
பாடுபட்டபு ழுக்கமலக்குகை
வீடுகட்டியி ருக்குமெனக்குநி னருள்தாராய்

பீலிமிக்கம யிற்றுரகத்தினி
லேறிமுட்டிவ ளைத்துவயிற்றுடல்
பீறிலக்கறும் யுத்தகவுத்தினில் மடிபாத

பேரரக்கரொ திர்த்தவரொத்தனை
பேரையுக்ரக ளப்பலியிட்டுடல்
பேய்கைகொட்டி நடித்துமணிக்கழு குடனாட

ஏலம்வைத்தபு யத்திலணைத்தொரு
வேலெடுத்தச மர்த்தையுரைப்பவர்
யாவருக்குமனத்தினினைப்பவை யருள்வோனே

ஏழிசைத்தமி ழிற்பயனுற்றவெ
ஞவலுற்றடி யிற்பயிலுத்தம
னீசன்முக்கணி ருத்ரனளித்தருள் பெருமாளே.

திருக்கற்குடி.

33. தனத்தத் தனத்தத் தனத்தத் தனத்தத
தனத்தத் தனத்தத்—தனதான.

குடத்தைத் தகர்த்துக் களிற்றைத் துரத்திக்
குவட்டைச் செகுத்துக் ககசாலக்
குலத்தைக் குமைத்துப் பகட்டிச் செருக்கிக்
குருத்தைத் துவைத்துற் றவர்சோரப்
புடைத்துப்பணைத்துப் பெருக்கக் கதித்துப்
புறப்பட் டகச்சுத் தனமாதர்
புணர்ச்சிச் சமுத்ரத் திளைப்பற் றிருக்கப்
புரித்துப் பதத்தைத் தருவாயே
கடத்துப் புனத்துக் குறத்திக் குமெத்தக்
கருத்திச் சையுற்றுப் பரிவாகக்
கனக்கப் ரியப்பட் டகப்பட் டுமைக்கட்
கடைப்பட் டுநிற்கைக் குரியோனே
நடத்துற் பவித்துச் சுவர்க்கத் தலத்தைச்
சபைப்பித் தகொற்றத் தனிவேலா
தமிழ்க்குக் கவிக்குப் புகழ்ச்செய்ப் பதிக்குத்
திருக்கற் குடிக்குட் பெருமாளே.

---

34. தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன—தனதான.

அளக பாரம லைந்துசரிந்திட
வதன மேவர்வுது லங்கிட லங்கமழ்
அதிக மோகம்வி ளைந்துகலந்துறை குயில்காடை

யளிபு ரூமயி லென்றுமெசா லுங்கால்
மிடற தாதுதி பங்கவி தஞ்செயு
மகளிர் மோதக வண்பிணி னின்றுள மறுகாதே

உளம்வி டாதுபு கழ்ந்து பணிந்திட
வறிவி லாதம னங்கொடு நின்றினி
யுலையு ருமலு வங்கெதனை நண்பொடு சிவயோகத்

துருகு ஞானப ரம்பர மந்திர
மணுகொ ணாதப தந்தரு சிந்துர
வுபய சீதள பங்கய நின்கழ லருள்வாயே

இளகி டாவகை சந்தன குங்கும
களப பூரண கொங்கைந லம்புனை
யிரதி வேள்பணி தந்தையுகந்தரு ளிளையோனே

யிணிய தாயதி ரிந்திர ரண்டரு
மரக ராசிவ சங்கர சங்கர
வெனமி காவரு நஞ்சினை யுண்டவ ரருள்பாலா

வளர்நி சாசரர் தங்கள்சி ரம்பொடி
படவி ரோதமி டுங்குல சம்ப்ரம
மகர வாரிக டைந்தநெ டும்புயல் மருகோனே

மதுர வாசக மிஞ்சிய கிஞ்சுக
விதழி மாதுமை மைந்தவி ரும்பொழில்
மயிலை மீதினில் வந்துறை யிந்திர பெருமானே

திருவருணை.

35. தனனாதனனத் தனனாதனனத்
தனனாதனனத்—தனதான.

அருமாமதனைப் பொருவாள்கயல்குத்
தயிலார்நயனக் கொடியார்த

மழகார்தனநற் புழுகார்சயிலத்
தணையாவலிகெட் டுடல்தாழ

இருமாகடைபுக் குரைபோயுணர்வற்
றிளையாவுவமுட் குயிர்சோர
எரிவாய்நரகிற் புகுதாதபடிக்
கிருபாதமெனக் கருள்வாயே
ஒருமால்வரைபட் டிருகூறிடவுற்
றொருவேறனைவிட் டெறிவோனே
உறமான்மறவக் குறமாமகளுக்
குருகாவிருபொற் புயவீரா
திருமால்கமலப் பிரமாவிழியிற்
றெரியாவரனுக் காம்யானே
செழுநீர்வயல்சுற் றிருஞுபுரியிற்
றிருவீழியினிற் பெருமானே.

பொது.

36. தனனதான தானான தனனதான தானான
தனனதான தானான — தனதான.

அதலசேட னாராட வகிலமேரு மீதாட
வபினகாளி தானாட வவளோடன்
றதிரவீசி வாதாடும் விடையிலேறு வாராட
வருகுபூத வேதாள மவையாட
மதுரவாணி தானாட மலரில்வேத னாராட
மருவுவானு ளோராட மதியாட
வனசமாமி தானாட நெடியமாம னாராட
மயிலுமாட நீயாடி வரவேணும்
கதைவிடாத தோள்வீம னெதிரியான போர்மீளி
கருதொணாத மாசேனை பொடியாகக்
கதறுகாலி போய்மீள விசயனேறு தேர்மீது
கதிர்கொள்வீறு கோடேதி யலைமோது

முதநிமீதி லேசாயு முலகமூடு சீர்பாத
வுவணவூர்தி மாமாயன் மருகோனே
யுதயதாம மார்பான ப்ரபுடதேவ மாராஜ
னுளமுமாட வாழ்தேவர் பெருமானே.

யாழ்ப்பாணம்.

37. தாத்தா தானந் தத்தன தனதன
தாத்தா தானந் தத்தன தனதன
தாத்தா தானந் தத்தன தனதன-தந்ததான.

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுங்மன் விடுதூதும்

போற்றார் காணுங் கைப்பொரு ளுடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை விழியின ரமுதூறல்

வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நோற்றே நூலின் சிற்றிடை யிடைபட
வாட்டாய் வீசுங் கர்ப்புர மிர்கமத மகிலாரு

மாப்பூ ணாரங் கச்சணி முலையினர்
வேட்பூ ணாகங்கெட்டன னுனதுமெய்
வாக்கான ஞானம் பெற்றினி வழிபட வருளாயோ

ஆத்தாள் மால்தங் கச்சிக னியையுமை
கூத்தா டானந் தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி திரிலோக

மாக்கா யாவும் யற்றிய பரிபுரை
நோக்கா டேதுஞ் செற்றன டிருவிளை
யாட்டா ளீசன் பக்கய துறைபவள் பெறுசேயே

ஏத்தா காளுந் தர்ப்பண செபமொடு
நீற்றார் ஞானம் பற்றிய குருபர
பார்ப்பா ராயுஞ் சொற்றமி ழருடரு முருகோனே

வேற்போர் தாங்கும் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்ப்ரகார நெடுமதில்
யாழ்ப்பாணயன் பட்டினமருவிய பெருமாளே.

பொது.

38. தனனதன தனனதன தானான தானன
தனனதன தனனதன தானான தானன
தனனதன தனனதன தானான தானன - தனதான.

உறவின்முறை கதறியழ வூரார் மாசையழ
பறைதிமிலை முழவினிசை யாகாச மீதுமுற
அறுசிலை பலரிசி வாய்மீதி லெரிசெயப்புகக்காணி

ஒழுகுமுக கருணைமல மோபாது பாதிருகை
திரண்டுபுழு [illegible] மவர்கள் [illegible]
முப்பட்ட [illegible] நாபுரமு மாதமைப்ப

மறையவர [illegible] பூமாரி [illegible]
மதியொருகு [illegible] தாலுமோரு[[illegible]
மயில்மிசை [illegible] தாளாவுன் [illegible]

மறவியற [illegible]
[illegible]
மதலையொரு குதலையடி [illegible]
டாயோ

பிறையெயிறு முரணசூர் பேரோடு பாலவிழ
வதிரவெழு புவிபுலக மீதேழு மோலமிட [நாகம்
பிடிகளிறு வரிதிரைகள் பாழாக வேதிசையினின்ற

பெரியமொகு மலைபிடிய மாவாரி தூளியெழ
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு
பிணநிண முழுவதுஞ்செய்துப்பேயொடுமாடல்செயவெ
ன்றதீரா

குறமறவர் கொடியடிகள் கூசாது போயருகு
[illegible] கிளிகடிய வாராத காதன்மிகு
குளிர்கனியி னிமையதேயா கிரிடியுயர்குன்றுலாவி

கொடியதொரு முயலகனின் மீதாடு வாருடைய
வொருபுறம துறவளநமாதா பெறுவருள்செய்[னே
குமாகுரு பாவமரர் வாஞுடர் பேணவருள்தம்பிரா

திருப்பழுதிமலை.

39. தனதத் தனதத் தனதத் தனதத்
தனதத் தனதத் தனதத் தனதத்
தனதத் தனதத் தனதத் தனதத்—தனதானா.

கடலைச் சிறைவைத் துமலர்ப் பொழிலிற்
ப்ரமாத் தையுடற் பொறியிட்டுமிக
கமலத் தைமலர்த் திவிடத் தையிடப் பவனூரைக்

கருதிச் சருவிக் கயிலைக் கயமுட்
படவித் துழையைக் கவனத் தடைசிக்
கணையைக் கடவித் தவுடக் கயிலைப் பிணிமேவி

அடலைச் செயல்சத் திவையைக் கிளியிற்
புகுவித் துயமப் ப்ரபுவைத் துவைவித்
தரிகட்கமெமித் துவ்திர்த் துமெதிர் தசகோர

மலறப் பணிரத் தரணிக் [illegible]
சிறு [illegible]
டிறமுற றவொழுச் சியர்கட் கடைய்ற் படுவேனே

சடிலத் தவனிட் டவிசிட் டருளத்
தொருசெட் டியிடத் தினுதித் தருள்வித்
தசருத் ரஜனப் பெயர்செப் பியிடப் பரிவாலே

சனகற் குமகஸ்த் யபுலஸ்த் யசனற்
குமரார்க் குமனுக் ரகமெய்ப் பலகைச்
சதுபத் துகவைப் புலவர்க் குநிவர்த் தியின்ஞான

ப்டலத் துறிலக் கணலக் கியசொற்
றமிழிற் ப்ரியமுற் றிலகப் பொருளைப்
பழுதற் றுணர்வித் தருள்வித் தகசற் குருநாதா

டவளக் கொடிசுற் றிடபொற் சமுகிற்
றலையிற குலைமுத் துதிர்செய்க் கழனிப்
பழநிப் பதிவெற் பினிற்குமர   பெருமாளே.

---

40. தத்தத்தத் தத்தத்தத்தன
தத்தத்தத் தத்தத்தத்தன
தத்தத்தத் தத்தத்தத்தன — தனதான.

முத்துக்குச் சிட்டுக்குப்பிமு
டித்துச்சுக் கைப்பிற்சுற்றியு
முற்பக்கத் திற்பொற்புற்றிட   றதன்மீதே
முக்யப்பச் சைப்பொட்டிட்டணி
ரத்நச்சுட் டிப்பொற்பட்டிவை
முச்சட்டைச் சித்ரக்கட்டழ   கெழிலாடத்
தித்திக்கச் சொற்சொற்றுப்பிசழ்
கச்சுக்கட் கற்புச்சொக்கியர்
செப்புக்கொக் கக்கசுப்பெறு   தனமேறு
திட்டத்தைப் பற்றிப்பற்பல
லச்சைக்குட் பட்டுத்தொட்டுயிர்
சிக்சிச்சொக் கிக்கெட்டிப்படி   யுழல்வேனோ
மெத்தத்தக் கத்தைத்தித்தியி
னிச்சித்தத் திற்பத்தத்தொடு
மெச்சிசர்சொர்க் கத்திற்சிற்ப   யருள்வாயே
வித்தைக்குக் கர்த்தத்தற்பர
முக்கட்சித் தற்குப்புத்திர
வக்ரித்ரச் செச்சைக்க[illegible]   புனைவோனே
சித்தச்சற் பத்திற்சித்தர்க
[illegible]
கிட்டைக்கற் பத்துப்பத்தர்க   ளமரோரும்

கெட்டுங்குப் புட்பத்தைக்கொடு
முற்றதறற் றர்ச்சிக்கப்பழ
நிக்குப்பட் டத்துக்குத்துரை பெருமாளே.

---

41. தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன—தனதான.

கடலைபொ ரியவரை பலகனி கழைநுகர்
கடினகுடவுதர விபரீத
கரடத டமுமத களிநசி றுநயன
கருணைமு கவாது துணைவோனே
வடவரை யின்முகடு வதிரவொ ருகொடியில்
வலம்வரு மரகத மயில்வீரா
மகபதி தருசுதை குறமினொ டிருவரு
மருவுச ரசவித மணவாளா
அடலசு ரர்கள்குல முழுதுமடியவுய
ரமரர்சிறையைவிட வெழின்மீது
மருணகி ரணவொளி யொளிருமயிலைவிடு
மரகர சரவண பவலோலா
படலவுடுபதியை யிதழிய ணிசடில
பசுபதி வரநதி யழகாண
பழநிம லையருள்செய் மழலைமொ ழிமதலை
பழநிமலையில்வரு பெருமாளே.

---

42. தனதத் தனதன தனதன தந்தத்
தனதத் தனதன தனதன தந்தத்
தனதத் தனதன தனதன தந்தத்—தனதான.

புடவிக் கணிதுகி லெனவள ரந்தக்
கடலெட் டையுமற குடிமுனி யின்கட்
பினிதச் சதகளநிலைகொள் சயம்புச் சதுர்வேதன்

புரமட் டெரியெழ விழிகனல் சிந்திக்
கடினத் தொடுசில சிறுநகை கொண்டுற்
புதகர்த் தரகர பரசிவ னந்தத் தன்மூலை
யிடமிக் கழுதிறை யருளிய வம்பொற்
செவியுட் பிரணவ மொழிபவ னென்புற [தா
றிடவுற் பனமொழி புகல்செய் குழந்தைக் குருநா
வெகுருற் றசுரர்கள் படைகொடு சண்டைக்
கடமையுத் திடவெரு குலமுழு தும்பட்
டிடவுக் கிரமொடு வெகுளிகள் பொங்கக் கிரரமும்
பொடிபட மற்றவும் விரிவுற வண்டச்
சுவர்விட் டதிரவு முடுகித் திந்தப்
புறமப் பரவெளி யிடிகிடெ னுஞ்சத் தமுமாக
பொருதிக் கையிலுள வயிலினை முன்கைக்
குருதிப் புனலெழ கடலினு மிஞ்சப்
புரவிக் கனமயி லடலிடும விந்தைக் குமரேசா
படியிற் பெருமைக டகவுயர் செம்பொற்
கிரியைத் தனிவலம் வரவரு ளத்தப்
பலனைக் கரிமுகன் வசமருளும்பொற் பதினாலே
பான்வெட் கிடவுள மிகவும் வெருண்டக்
கனியைத் தரவிலை யெனவரு செந்தப்
பழனிச் சிவகிரி தனிலுறை கந்தப் பெருமாளே,

---

௪௩. தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன—தனதான.

மலரணி கொண்டைச் சொருக்கி லேயவள்
[illegible] யினபச் செருக்கிலே கொடு
[illegible]புடர் நெஞ்சத் திருக்கிலே முக மதியாலே

மருவுகி தம்பத் தடத்தி லேநிறை
பரிமள கொங்கைக் குடத்தி லேமிக
வலியவுங் கெந்தொத் திடத்தி லேவிழி வளையாலே

நிலவெறி யங்கக் குலுக்கி லேயெழில்
வளைபுனை செங்கைக் கிலுக்கி லேகன
நிதிபறி யந்தப் பிலுக்கி லேசெயு மொயிலாலே

நிருமிய லுந்தூர்க் குணத்தி லேபர
வசமுட னன்புற் றிணக்கி லேயொரு
நிமிஷமி ணங்கிக் கணத்தி லேவெகு மதிகேடாய்

அலையநி னைந்துற் பனத்தி லேமறு
தினமிகு மென்சொற் பனத்தி லேவர
வறிவும ழிந்துற் பனத்தி லேதிரு முடிவேனோ

வெகுடனை வஞ்சச் சமர்த்த னாகிய
சடலனை புன்சிறு கடைக்க ணாடியு [ராய்
மலர்கொடு நின்பொற் பதத்தை யேதொழ வருடா

பலபல பைம்பொற் பதக்க மாரமு
மடிமைசொ லுஞ்சொற் றமிழ்ப்ப னீரொடு
பரிமள மிஞ்சக் கடப்ப மாலையு மணிவோனே

பதியினின் மங்கைக் கதித்த மாமலை
யொடுசில குன்றிற் றரித்து வாழ்வுயர்
பழநியி லன்புற் றிருக்கும் வானவர் பெருமானே.

திருச்செந்தில்.

44. தந்தந்தந் தந்தன தானன
தந்தந்தந் தந்தன தானன
தந்தந்தந் தந்தன தானன—தனதான.

வஞ்சங்கொண் டுந்திட ராவண
னும்பந்தென் திண்பரி தேர்கரி
மஞ்சின்பண் புஞ்சரி யாமென வெகுசேனை

வந்தம்பும் பொங்கிய தாகவெ
திர்ந்துந்தன் சம்பிர தாயமும்
வம்புற்றும் புப்பல பேசியு மெதிரோசை

மிஞ்சென் றஞ் சண்டைசெய் போதாது
றங்குந் துஞ் சங்கனல் போலவெ
துண்டின்றன் றங்கலை வாரியு மதில்வீசி

மிண்டுந் துங் கங்களி னைலக
கர்ந்தங் கங்கா யர்பொடி
மென்சக் குஞ் சிந்திச் சாகரர் வகைமேர

வெஞ்சண் டன்றெ றுற்றிசை நாழுவி
மூர்க்கங் குஞ் செஞ்செம தூக்க
றுந்துக் றும் துசா றிட மேவுமை வினையூனே

புண்டொக்கை நெஞ்சில கூவிகள்
டையுண் டுங் நந்தித்தி மீ டவு
மாக்கப்புங் கொண்டுவல மாதவன் மருகோனே

தஞ்சந்தஞ் சஞ்சிறி யேன்மதி
கொஞ்சங்கொஞ் சந்தனை யேயருள்
தந்தென்றின் பந்தருவீடது தருவாயே

சங்கங்கஞ் சங்கயல் சூழ்தட
மெங்கெங்கும் பொங்கம காபுனி
தந்தங்குஞ் செந்தியில் வாழ்வுயர் பெருமாளே.

பொது.

45. தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன-தனதான.

நெடிய வடகுவ டிடியவு மெழுகிரி
நெறுநெ றெனவெரி யவுமுது பணபதி
நெடுமுடி யிழியவு மதிரவும் விளையாடும்

நிகரில் கலையு மாவுமிழ் துவசமும்
நினது கருணையு மறைதரு பெருமையும்
நிறமு மிளமையும் வளமையு மிருசர ணமுமீப

முடியு மபிநவ வனசார் கொடியிடை
துளா வளாவண மிருகமத பரிமள
குழுன புளகித தனகிரி தழுவிய கிரமொடாரும்

மோகமோ கெனமது காமுறால், குரவணி
முருக னறுமுக னெனவரு வலவெபா [னே
முழுது மியல்கொடு பழகு மொழிவது மொருநா

கொடிய படிகொலை நிசிசர ருரமொடு
குமுத மொனவிசை யுடனிசை பெருமபு
குருதி யருவிய கதிபொங் குதிகொள விதியோடக்

குமிறு கடல்சுடல் கிழிபட வடிமா
மொளமொ ளொளவடி யொடலைறி விழவுயிர்
குருகுபெரியவெவ்வரை தொளைபடவிடுசுடர்வேலா

இடையில் முனைமலிகுலிசமு மிலகிட
கவள தவளவி கடதட கனக
விபமுமிரணிய தரணியுமுடையதொர் தனியானைக்

இறைவ குருபர சரவண வெகுமுக
ககன புனிதையும் வனிதைய ராறுவரு
மெமது மகவென வுமைதருமிமையவர்பெருமாளே.

திருத்தணிகை.

46 தனன தந்த தத்த தனன தந்த தத்த
தன்ன தந்த தத்த—தனதான.

எனையடைந்த குட்ட வினைமிகுந்த பித்த
மெரிவ ழங்குவெப்பு வலிபேசா

திகலி நின்றலைக்கு முயல கன்குலைப்பொ
டிரும லின்றி ரைக்கு மிவைமேவா

மனைகள் பெண்டிர் மக்கள் தமை மறந்து சுற்ற
மதிமயங்கி விட்டு மடியாதே
மருவி வந்தெனக்கு பரகதஞ் சிறக்க
மயிலில் வந்து முத்தி தரவேணும்
நினைவ ணைந்து பத்தர் வினைவருந் தழைக்க
நினைவில் வந்துதித்த கதிர்வேலா
நிலைபெறுந் திருத்தணியில் விளங்கு சித்ர
நெடிய குன்றில் நிற்கு முருகோனே
இனைவ ணங்கலுற்ற புளவிளங்கு சத்தி
செயலறிந்தணைத்த மணிமார்பா
இசைமுகன் றிகைக்க வசுரன் றடைத்த
சிறைதிறந்து விட்ட பெருமாளே

திருச்செந்தில்.

47. தந்தன தந்தனத் தந்தன தந்தனத்
தந்தன தந்தனத் — தனதான.

பங்கமே வும்பிறப் பந்தகா ரந்தனிற்
பந்தபா சந்தனிற் றடுமாறிப்
பஞ்சபா ணம்படப் புண்படா வஞ்சகப்
பண்பிலா டம்பரம் பொதுமாதர்
தங்களா லிங்கனக் கொங்கையா கம்படச்
சங்கைமால் கொண்டினைத் தயராதே
தண்டைசூழ் கிண்கிணிப் புண்டரீ கந்தனைத்
தந்துநீ யன்புவைத் தருள்வாயே
அங்கைவேல் கொண்டரக் கன்ப்ரதா பங்கெடுத்
தண்டவே தண்டமுட் படவேதா
அஞ்சவே தண்டிறற் கொண்டலா கண்டலற்
கண்டலோ கங்கொடுத் தருள்வோனே

திங்களார் கொன்றைமத் தந்துழாய் துன்றுபொற்
செஞ்சடா சங்கரற் குறுமோதகை
சிந்தையே தென்றிசைத் தென்றல் வீசப்பொழிற்
செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமானே.

குமரகோட்டம்

48. தனனதாத் தத்ததந்த தனனதாத் தத்ததந்த
தனனதாத் தத்ததந்த—தனதான.

அறிவிலாப் பித்தருன்ற
னடிதொழாக் கெட்டவஞ்ச
ரசடர்பேய்க் கத்தர்நன்றி யறியாத

வவலர்மேற் சொற்கள்கொண்டு
கவிகளாக் கிப்புகழ்ந்து
வவரைவாழ்த் தித்திரிந்து பொருள்தேடிச்

சிறிதுகூட் டிக்கொணர்ந்து
தெருவுலா வித்திரிந்து
தெரிவைமார்க் குச்சொரிந்து வவமேயான்

றிரியுமாக் கத்துசிந்தை
யதனைமாற் றிச்சிறந்த
தெளிவுமாட் சதைதயென்று பெறுவேனோ

உரையுமாற் றற்றசெம்பொ
னிடமும்வேற் றுப்பிரிந்து
வருளின்மேற் பச்சிவந்த வுமையாடன்

னிருளைநீக் கித்தவஞ்செய்
தருளைநோக் கிக்குழைந்த
விமலர்கேட் கத்தகுஞ்சொ லுடையோனே

குறவர்கூட் டத்தில்வந்து
சவலனாய்ப் புக்குநின்று
குருவியோட் டித்திரிந்த குறமானைக்

முணமதாக் கிச்சிறந்த
வழுமுகாட் டிப்புணர்ந்த
முமரகோட் டத்தமர்ந்த பெருமாளே

சோலைமலை.

49. தனனதந்த தத்தான தனனதந்த தத்தான
தனனதந்த தத்தான—தனதான.

களவுகொண்டு கைக்காசி னளவறிந்து கற்பூர
களபதுங்க வித்தார முலைமீதே
கலவியின்பம் வித்தார லவயவங்க ளைப்பாடுங்
கவிதெரிந்து கற்பார்கள் சிலர்தாமின்
னுளநெகிழ்ந்த யத்தான வுரைபிறழ்ந்து சத்தான
வுமையுணர்ந் தரித்தான மணநாறு
முபயபங்க யத்தாளி லபயமென்று னைப்பாடி
முனமறிதெரிந்து கற்றேறி விழிவாமோ
அளவிலகள விச்சேனை பரவநின்ற சுக்ரீப
வரசடங்க டற்றாளி யெழுவேபோ
கடலிலங்கை சுட்டாட டிசைநாற்ற சுக்ரீவ
னரவொராம்பு தொட்டார்தம் மருகோனே
வளருமங்க [illegible]
[illegible] பொருவேட
வடிவுகொண்டு பித்தாகி யுருகிவெந்த மற்காளி
மறவர்குன்றி னிற்பேண பெருமாளே.

பொது.

50. தத்த தனனதன தான தானதன
தத்த தனனதன தான தானதன
தத்த தனனதன தான தானதன—தனதான.

எத்தி யிருகுழையை மோதி மீனமதி
முட்டி யிடறியமு தூறுமோலமுகி
வெட்டி மகரமென வாளேவேன் முனையை எதிர்சீறி

எத்திசையினும்வரு காமாசன்மிக
வொத்திடசுரர்களை யாள விசியட்
டெற்று மிளைஞருயிர் கோலு நீலவிழி மடமாதர்

வித்தை தனிலுருகி யாசை யாகியவர்
கைக்குண் மருவுபொருளாக வாகுமலர்
மெத்தை தனிலுருகி மோக மாகிவிழ வதன்மேலே

வெச்ச மிகுமிடவு மேகு மேகுமினி
மாற வினையலைவு மாறுமோவெனமுன்
விட்டபடி திகடமேசகாளகெட வருள்வாயே

ஒத்தி விரிகமுகு வாளை தாவுபுன
லெற்றி கமாமா சாரு வானிருளை
யொக்கு நிழலுமுனி லாமல் பாருபல நிலைகூர

வுற்ற தருமண்டல விமான மேல்விசயன்
வெற்றி கருவசமாகேசர் தேர்தனிலு
மொத்து முதுகிரிவிடு பாகன் வாளயி லசுரேசன்

பத்து முடிகடிக தாக வாகுவிரு
பத்து மொருகணையில வீழ மோதுமுனோர்
பட்டமுடியவமர் மோதுகாளமுகில் மருகோனே

பச்சை மயில்வருவீர வேலமுருக
துட்ட நிருதர்குல கால வானவர்கள்
பத்தி யுடனடியில் வீழவாழ்வுதவு பெருமானே

பொது.

51. தனத்தனன தனத்தனன
தனத்தனன தனத்தனன
தனத்தனன தனத்தனன — தனதான.

குறிப்பறிய குழற்குமதி
நுதற்புருவ விலுக்குமிரு
குழைக்குவடு விழிக்குமெழு குழலாலும்

கொடிப்பவள விதழ்க்குமிரு
சுடர்த்தரள நகைக்குமமு
தினுக்குமிக வுறத்தழுவு குறியாலும்
அறப்பெரிய தனத்துமனை
நடைக்குமினி னிடைக்குமல
ரடிக்குமிள நகைக்குமுள மயராதே
அகத்தியனொ டுரைத்தபொரு
ளளித்தருளி யரிப்பிரம
னெப்பரிய ப்ரத்யக்ஷமைய மருள்வாயே
கழுத்தடரு மரக்கரணி
கருக் குழைய நெருக்கிவரு
கணத்திலவர் நிணக்குடர்கள் கதிர்வேலாற்
கழுத்தருளி யலக்கணுறு
சுரக்கவர்கள் பதிக்குரிமை
யளித்திடவை யமுக்தருளு மயில்வீரா
செறித்துவரு கரித்திரள்கள்
திமித்திடடன் மருப்பையரி
சிதைத்திடுடு பரித்தமர்செய் பெருகானிற்
செலக்கருதி யுறக்கிலொடு
சிலைக்குறவர் கொடுத்தனது
சிறந்தனமு முறத்தழுவு பெருமானே.

வேளூர். *

52 தனந்த தத்தன தானன தானன
தனந்த தத்தன தானன தானன
தனந்த தத்தன தானன தானன—தந்ததான.

நிறைந்த துப்பிதழ் தேனூறல் நேரென
சிறந்த ரித்தக ளாலால மேரென
நெகிழ்ந்து ரிக்குழல் சிமுத நேரென விஞ்சிமேலே

---

* வைதீசுரன்கோயில்.

நெருங்கு பொற்றன மாமேரு நேரென
மருங்கு லிட்கள வாகாச நேரென
நிதம்ப நற்பணி தானாகு மேயென வெந்தநாளும்

குறைந்த புத்தியில வாதாடி யாதர
வழிந்து மெதஙைதயின் மேல்வீழ மால்கொடு [வன்
ருமணடை யிட்டிடை சோர்வேளை யாகமு லேந்துவி

குறைந்தி ளைப்புற மகமாயை வாழ்வருள்
மடந்தை யர்க்கொரு கோமாள மாகிய [வஞ்
கொங்க சத்திடை மூழ்காம லேபத மென்றுசேர

மறைந்த சுக்ரிபர் போராட லேயொளி
யிருந்து நற்றய வாய்மீள வேயவன்
மணங்க ளிந்திட மாமேரு நேரெனு நெஞ்சவாலி

மதஞ்செ குத்திட வீரான தோர்கணை
வளைந்த வ்ாசர மீதல வானரம
வளர்ந்து சுறறினு மெய்யாடி யாடவ ணங்கிமேவ

அறந்த ழைத்தநு மானோடு மாகடல்
வரம்ப டைத்ததின மேலெறி ராவண [னா
னரண குலைதமைத்திர போராடு நாரணன் மைந்தனு

விரங்கன் மைத்துன வேளேக லாமயில்
விளங்கு செயப்பதி வேலாயு தாழ [மேன
கணிந்த பொறபெரு மேலோரின் பேவிய தம்பிரா

திருவருணை.

53. தான தத்த தந்த தான தத்த தந்த
தான தத்த தந்த—தனதான.

தோத கப்பெரும்ப யோத ரத்தியங்கு
தோகையர்க்கு நெஞ்ச மழியாதே

சூலை வெப்படர்ந்த வாத பித்த மென்று
சூழ்பி ணிக்கு ணங்க ளணுகாதே

பாதகச்ச மன்றன் மேதியிற்புகுந்து
பாசம் விட்டெறிந்து பிடியாதே
பாவலர்க்கிரங்கி நாவினுக்கி சைந்த
பாடன் மிக்க செஞ்சொ றாயேனும்
வேத மிக்க விந்து நாதமெய்க்கடம்ப
வீர பத்ர கந்த முருகோனே
மேரு வைப்பிளந்து சூரனைக்கடிந்து
வேலை யிற்றுளைந்த கதிர்வேலா
கோலதை பொற்குறிஞ்சி மாது சச்சணிந்த
கோமளக் குறும்பை புணர்வோனே
கோல முற்றுயர்ந்த சோணவெற்பிலங்கு
கோபுரத்த மர்ந்த பெருமாளே.

சோலைமலை.

54. தானதனத் தானதனத் தானதனத் தானதனத்
தானதனத் தானதனத்—தனதான.

சேலையடர்த் தாலமிகுத்
தேகணையைச் சீறிவிதத்
தூறுசிவம் பேறுவிழிக் கடையாலே
தேனிரதத் தேமுழுகிப்
பாகுநிகர்க் காரமுதத்
தேறலெனக் கூறுமொழிச் செயலாலே
ஆலிலையைப் போலுமவயிற்
றாலளகத் தாலதரத்
தாரிரதத் தாலுமலைப் பிடுவோர்மே
லாசையினைத் தூரவிடுத்
தேபுகழிட் டேக்ருபைநற்
றாளிணையைச் சேரவெனக் கருள்வாயே

காலனைமெய்ப் பாதமெடுத்
தேயுதையிட் டேமதனைக்
காயவெரித் தேவிழியிற் றலைபூடே

காசினியிற் கூனவிரப்
போன்மதியைச் சூடியெருத்
தேரிவிரித் தாறுதிரைக் கடன்மீதில்

ஆலமிடற் றானைகரித்
தோலையுடுத் தீமமிசைத்
தாடியிடத் தேயுமைவைத் தான்வாழ்வே

யாழியினைச் சூரனைவெற்
பேழுயில்கொட் டாவிதுனித்
தாதிதிருச் சோலைமலைப் பெருமானே.

பொது.

55. தனதனன தத்ததந்த தனதனன தத்ததந்த
தனதனன தத்ததந்த—தனதான.

பழுதறவோ திக்கடந்து
பகர்வனதீ ரத்துறந்து
பலபலயோ கத்திருந்து மதராசன்

பரிமளபா ணத்தயர்ந்து
பணைமடலூர் தற்கிசைந்து
பரிதவியா மெத்தநொந்து மயல்கூர

அழுதழுதா சைப்படுங்க
ணபிநவமா தர்க்கிரங்கி
யவர்பிரமா ணத்துநெஞ்ச மறைபோய்நின்

றழிவதுநான் முற்பயந்த
விதிவசமோ மற்றையுன்ற
னருள்வசமோ விபரமந்த ரிக்கலேனே

எழுதருவே தத்துமன்றி
முழுதினுமாய் நிற்குமெந்தை
யெனவொருஞா னக்குருந்த ருளமேவு

மிருவுருவா கித்துலங்கி
யொருநகனா ணிபிற்பிறந்து
விரணியன்மார் பைப்பிளந்த தனியாண்மை

பொழுதிசையா விக்ரமன்றன்
மருகபுரா ரிக்குமைந்த
புளகபடா கக்குரும்பை யுடன்மேவும்

புயகிரிவா மச்சிலம்பின்
வனசரமா னுக்குகந்து
புனமிசையோ டிப்புகுந்த பெருமாளே.

பெரும்பற்றப்புலியூர். *

56. தனந்தத் தத்தன தானன தானன
தனந்தத் தத்தன தானன தானன
தனந்தத் தத்தன தானன தானன—தனதான

விடுங்கைக் கொத்தொடு டாவுடை யாளிடை
யடைந்திக் கச்சிறை யானவ னேமுகம்
விழுங்கப் பட்டற வேயுடல்போய்கரு கிடமேலே

விலம்பத் தக்கன ஞானமு மானமும்
விரும்பத் தக்கனபோகமு மோகமும்
விடுஞ்சுத் தக்கவ மாவெளி யாயுயிர் விடுநாளில்

இடுங்கட் டைக்கிரை யாவடியேனுட
லிருந்திட் டுத்தம ரானவர்கோவென
விடங்கட் டிச்சுடு காடுபு காமுன மனதாலே

யிருந்திட்டுப்பெற வேமதி யாயினு
மிரந்திட் டுப்பெற வேவிதி யாயினு
மிரண்டிற் றக்கதொருகிய மானவை யிசைவாயே

* சிதம்பரம்.

கொடுங்கைப் பட்டம ராமர மேழுட
னொடுங்கச் சுக்ரிப னோடம ராடிசு
ராங்கைச் செற்றுமகோத தூளெழ வருநேயன்

குலுங்கப் பட்டநி சாசரர் கோவென
விலங்கைக் குட்டழ லோனெழ நீடி-
சூழண்டைக் குத்திர ராவண னார்முடி யடியூடே

பிடுங்கித் தொட்டச ராசர நாரணர்
ப்ரியங்கிட் டக்கன மாமரு காவயன்
ப்ரபஞ்சத் துக்கொரு பாவல னென்ன விருதூதும்

ப்ரசண்டச் சொற்சிவ வேதசி காமணி
ப்ரபஞ்சத் துக்குள வாளாசு தாசிம்
பெரும்பற்றபுலி யூர்தனில் மேவிய பெருமாளே.

பொது.

57. தனத்த தானன தானன தந்தன
தனத்த தானன தானன தந்தன
தனத்த தானன தானன தந்தன—தனதான.

கறுத்த நீர்விடு கூர்வேல னுங்கடை
சிவத்து நீடிய வாய்மீள வண்குழை
கடக்க வோடிய லாலால நஞ்சென வஞ்சநீகெ

கயற்க ணார்கனி வாயூற லுண்டவர்
சழுர்ந்து மாகமு மேகீக பங்கொடு
கலக்க மார்பொடு பாடீர குங்கும குன்றமூழ்கி

உறுத்த மார்புமுத் தார்தாவ டங்களு
மறுத்து நேரிய கூர்வாண கம்பட
வுடுத்த வாடையும் வேறாயு ழன்றுக ழன்றுவீழு

முறுக்கு நாபியில் மூழ்காம ருங்கிடை
செருக்கு மாதர்தம் வாரார் தனங்களை [சேர்வேன்
யொழித்த தோர்களை காணாதநின்க்ருபையென்று

நிறுத்த நூபுர பாதார விந்தமு
முடித்த மாலையும் வாரார் தனங்களு
கிறந்தி லேபடு வேலான கண்களும் வண்டுபொடி
நெறித்த வோதியு நாயேன் மனம்பரி
தவிக்க மாலவ ரோமோக வந்திட [ர்வாய்
நினைக்கலாகென வேல்வேடர் கொம்புட னண்புகூ
மறுத்து வாரிதி நோகேசரவெ னும்படி
வெறுத்தி ராவணன் வாணுளை யம்பினில்
வதைத்த மாமனு மேவாபுரங்களு மண்டமேவ
வளர்த்த தாதையு மாறுனை குன்றமு
மனைந்து பீனாகமும் வேதாக மங்களு
மதிக்கு சேவக வானுளு மும்பர்கள் தம்பிரானே.

---

58. தனத்தன தத்தன தத்தன
தனத்தன தத்தன தத்தன
தனத்தன தத்தன தத்தன — தனதான.

புருவச் சிலைக் குறித்து விழிக்கயல்
பயிலிட்டுவெ ருட்டி மதித்திரு
புதுவட்டமை யுக்கியளிக்குல மிசைபாடும்
புயல்சற்றுவி ரித்து நிரைத்தொளி
வளையிட்டக ரத்தைதரைத் தகில்
புனைமெத்தையி டத்தபளிக்கறை தனிலேறி
சரசத்தைவி ளைத்து முலைக்கிரி
புளகக்கவ னைத்துநகக்குறி
தனைவைத்து முகத்தைமுகத்துட னொன்றிமேவித்
தனிவித்திர தத்தகாத்துமி
தழுதத்தைய ளித்துயிருக்கியல்
தருபித்தைய கற்றியுனைத்தொழ முயல்வேனே.

பாதத்தைய டக்கிடப்பவர்
த்ரிபுரத்தையெ ரிக்கநகைப்பவர்
பரவைக்குள்வி டத்தைமிடற்றிடு பவிநீடு

கரகப்பறை யுற்றுமிகப்பலி
ரதியுற்றசி ரத்தைநிரத்துய
ரவத்தையொ ருப்பவிருப்பவ ருமையாளர்

சுரர்சுத்தர்ம னத்துறைவித்தகர்
பணிபத்தர்ப வத்தையறுப்பவர்
சுடலைப்பொடி யைப்பரிசிப்பவர் விடையேறுர்

துணையொத்தப தத்தவரெற்றிடு
மதனைக்கடி முத்தர்கருத்தமர்
தலைவற்றக்கரு ணைச்சுதனுதித்தருள் பெருமாளே.

பழநி.

59. தனனதனதன தனனதனதன
தானதானன—தனதான.

குவளையொருகிரு குழையையுமுடுகிய
கோலவேல்விழி மடவார்தங்

கொடியம்ருகமத புளகதனகிரி
கூடிநாடொறு மயலாகி

துவளுருகிய சரசவிதமதில்
சோரவாரிதி யலையூடே

சுழலுமெனதுயி ரழியுமுனமுயர்
தோகைமீதினில் வரவேணும்

கவளகாதல கடகவிகடக
போலபூதர முகமான

கடவுள்கணபதி பிறகுவருமொரு
காரணாகதிர் வடிவேலா

பவளமரகத கனகவயிரக
பாடகோபுரம் ரவிதேரும்
பரியுமிடறிய பழநிமலைவரு
பாவலோர்புகழ் பெருமாளே.

சிதம்பரம்.

60. தனதந்த தத்ததந்த தானதந்த தத்ததந்த
தனதந்த தத்ததந்த—தனதான.

மதிவெங்க ரிக்கிரண்டு
வலுகொம்பெ னத்திரண்டு
வளருந்த னத்தணிந்த மணியாரம்
வளர்செங்க திர்க்குவிந்து
வெளிகண்டெ னத்துலங்கி
காருந்தி கைத்திரங்க தருமானர்
இதமிங்கி தப்ரியங்கொ
ணகைகொஞ்ச நற்குணங்க
ளிணையின்றெ னக்கலங்கி விளையாடி
யிடுசங்கை யற்றுணர்ந்து
வலம்வந்து னைப்புகழ்ந்து
தொழவின்று பொறப்தங்க டாவெனும்
கதியுந்தி ருக்காந்தை
மதியுஞ்ச டைக்கணிந்த
நடநயப ருற்றிருந்த கயிலாய
நவநக்கை யைப்பிடிந்து
மசுரன்சி ரத்தொடங்கை
நலத்துங்க வெறறிமுந்து திரடோனுஞ்
நிறைதும்ப டிக்கொரப்பு
வனைமுன்றெறு டுத்தகொண்டல்
வளர்செங்க ணச்சுதன்றன் மருகோனே

தினமுழக்க ருத்துணர்ந்து
சுரர்நின்று னேப்பணிந்த
திருவம்ப லத்தமர்ந்த பெருமாளே.

---

61. தானனா தந்தனந் தானனா தந்தனந்
தானனா தந்தனந்—தனதான.

காதன்மோ கந்தருங் கோதைமார் கொங்கையிங்
காரநா தஞ்செழுங் கனிவாயகண்
காளகூ டங்கொடுங் காலரூ பம்பொருங்
காமபா ணஞ்சுரும் பிணம்வாழும்
ஓதிகார் செஞ்சொன்மென் பாகுதே னென்றயர்ந்
தோகமோ கந்தவென் றுரையாதே
யூசலா டும்புலன் றூரியே சென்றுநின்
றோயுமா றென்றையுங் கருதாதே
தாதகீ சண்பகம் பூகமார் சந்தமந்
தாரவா சந்திசந் தனநீடுஞ்
சாமவே தண்டவெங் கோபகோ தண்டசந்
தானமா தெங்கள்பைம் புனமேவும்
தீதிலா வஞ்சியின் பாதமே கொண்டிடுஞ்
சேகரா தென்குடந் தையின்வாழ்வே
தேவிபா கம்பொருந் தாதிநா தன்றொழுந்
தேசிகா வும்பர்தம் பெருமாளே.

---

62. தானதாத்த தனதன தானதாத்த தனதன
தானதாத்த தனதன—தனதான.

ஆலமேற்ற விழியினர் காலைநீட்டி யழுதழு
தாகமாய்த்து முறைமுறை பலறமோத
வாடல்பார்க்க நிலையெழு பாடைகூட்டி விரையம
யானமேற்றி யுறவின ரயலாகக்

காலமாச்சு வருகென வோலைகாட்டி யமபடர்
காவலாக்கி யுயிரது கொடுபோகக்
காமயாக்கை பொடிபடு நாளில்வாய்த்த கழலிணை
காதலாற்க ருதுமுணர் தருவாயே
வேலகீர்த்தி விதரண சீலபார்த்தி பகனக
வியாழகோத்ர மருவிய முருகோனே
வேதனாட்டில் விளைவுள வேனல்காத்த சிறுமியை
வேடனாட்டில் வழிபடு மிளையோனே
ஞாலமேத்த வழிபடு மாறுபேர்க்கு மகவென
நாணல்பூத்த படுகையில் வருவோனே
நாதபோற்றி யெனமுது தாதைகேட்ப வநுபவ
ஞானவார்த்தை யருளிய பெருமாளே

சோணசலம்.

63. தனதன தானதன தனதன தானதன
தனதன தானதன — தனதான.

விடமவ வேள்வாளியின் விசைபெறு கோலாகல
விழிகொடு போவாவென வுரையாடும்
விரகுட னூறாயிர மனமுடை மாபாவிகள்
மிர்கமத கோலாகல முலைதோய
அடையவு மாசாபா வசமுறு கோமாளியை
யவனியு மாகாசமும் வசைகூற
மசடனை னசாரனை யவலனை யாபாசனை
யடியவ ரோடாள்வது மொருநாளே
இடகுல கோபாலர்த மொருபதி னாறாயிரம்
வனிதையர் தோடாய்தரு மபிராம
மரகத நாராயணன் மருமக சோணசல
வதிபச தாகாலமு மிளையோனே

யுபேதி சாயாபதி சுரர்பதி வாழ்வேபெற
வுயர்மயின் மேலேறியெ வரிதாக
வுயரிய மாநாகமும் நிருதனு நீரும்விழ
வொருதனிவேலேவிய பெருமாளே.

---

64. தனனத்தன தானன தனனத்தன தானன
தனனத்தன தானன—தனதான.

இடருக்கிட ராகிய கொடுமைக்கணை மேல்வரு
மிருதிச்சிறு கால்வரு மதனாலே
யியலைக்கரு கானக முயலைத்தரு மேனியி
லெரியத்தரு மாமதி நிலவாலே
தொடரக்கொடு வாகையி லடையக்கரை மேலலை
தொலையத்தனி வீசிய கடலாலே
துணையற்றளி பூமல ரணையிற்றனி யேயுயிர்
துளைத்தகு மோதுயா தொலையாதே
வடவெற்பொரு மேருவின் முடிகிற்பொரு சூரனை
மடியப்படை யேவிய வடிவேலா
மறவக்குல மாமொரு குறமெய்த்திரு மாமகள்
மகிழ்ப்புண மேவிய மயில்வீரா
அடர்பட்டிறு சோதி படையிற்றழை சேர்வய
லருணைத்திரு வீதியி லுறைவோனே
கவனித்திரு மாலொடு சிவனுக்கிளை யாவிழி
யமரர்க்கர சாகிய பெருமாளே.

சுவாமிமலை.

65. தானதன தன தானதன தன
தானதனன-தனதான.

பாதிமதிநதி போதும்அணிசடை
காதனருளிய குமரேசா

பாகுகனிமொழி மாதுகுறமகள்
பாதம்வருடிய மணாளா
காதுமொருவிழி காகமுறவருள்
மாயனரிதிரு மருகோனே
காலனெனையணு காமலுனதிரு
காலில்வழிபட வருள்வாயே
ஆதியயனொடு தேவர்சுரருல
காளும்வகைதரு சிறைமீளா
ஆடுமயிலினி லேறியமரர்கள்
சூழவரவரு மிளையோனே
சூதமிகவளர் சோலைமருவுசு
வாமிமலைதனி லுறைவோனே
சூரனுடலற வாரிசுவறிட
வேலைவிடவல பெருமாளே.

திருத்தணிகை.

66 தனதந் தனதந் தனதந் தனதந்
தனதந் தனதந் — தனதான.

குயிலொன் றுமொழிக் குயிலின் றலையக்
கொலையின் பமலர்க் கணையாலே
குளிருங் கவளக் குலசந் த்ரவொளிக்
கொடிகொங் கையின்முத் தனலாலே
புயல்வந் தெறியக் கடலின் றலறப்
பொருமங் கையருக் கலராலே
புயமொன் றமிகத் தளர்கின் றதனிப்
புயம்வந் தணையக் கிடையாதோ
சயிலங் குலையத் தடமுந் தசுரச்
சமரின் றலையப் பொரும்வீரா

தருமங் கைவனக் குயமங் கையர்மெய்த்
தனமொன் றுமணித் திருமார்பா

பயிலுங் ககனப் பிறைதண் பொழிலிற்
பணியுந் தணிகைப் பதிவாழ்வே

பரமன் பணியப்பொருளன் றருளப்
பகர்செங் கழனிப் பெருமாளே.

பொது.

67. தந்த தானன தந்த தானன
தந்ததானன—தனதான.

கண்டு போல்மொழி வண்டு சேர்குழல்
கண்கள் சேல்மதி முகம்வேய்தோள்

கண்டு பாவனை கொண்டதோள்களி
லொன்று காதலி விருகோடு

மண்டி மார்பினில் விண்டதாமென
வுந்து கூர்முலை மடவார்தம்

வஞ்ச மாமதில் நெஞ்சு போய்மடி
கின்ற மாயம தொழியாதோ

கொண்ட லார்குழல் கெண்டைபோல்விழி
கொண்டு கோகில மொழிகூறுங்

கொங்கையாள்குற மங்கைவாழ்தரு
குன்றின் மால்கொடு குணிராகம்

விண்டு மாமன வண்டு சூர்கடல்
வெம்ப மேதினி தனின்மீளா

வென்றி யாவையு மின்றி வேலையும்
வென்று மேவிய பெருமாளே.

குருகிரி. *

68 தனதன தத்தத தத்தன தத்தத்
தனதன தத்தத் தத்தன தத்தத்
தனதன தத்தத் தத்தன தத்தத் — தனதான.

தலைமயிர் கொக்குக் கொக்கந ரைத்துக்
கலகலெ னப்பற் கட்டது விட்டுத்
தளர்நடை பட்டுத் தத்தடி யிட்டுத் தடுமாறித்

தடிகொடு தத்திக் கக்கலெ ருத்திட்
டசனமும் விக்கிச் சத்திவெ டித்துச்
சளியுமி ழுத்துப் பித்தமு முற்றிப் பலகாலுஞ்

சிலதயி லத்திட் டுக்கவெ ரிக்கத்
திரிபலை சுக்குத் திப்பிலி யிட்டுத்
தெளியவ டித்துத் துய்யட லுற்றிட் டுயிர்போமுன்

சிலபுகழ் கற்றுச் சொற்கள் பயிற்றித்
திருவடி யைப்பற் றித்தொழு துற்றுச்
செனனம றுக்கைக் குப்பர முத்திக் கருள்வாயே

கலினவி சித்துப் பற்கறை யிட்டுப்
புரவிசெ லுத்திக் கற்கொடு வெற்பைப்
பகைவு டைத்திட் டெனவெட்டிப் பொருசூரன்

கனபடை கெட்டுத் தட்டற விட்டுக்
குரைகடல் குக்குக் குக்கிட வெற்றிக்
களிமயி லைச்சித் ரத்தின டத்திப் பொருகோவே

குலிசன்ம கட்குப் பொற்புய முற்றுக்
குறவர்ம கட்குச் சித்தமு முற்றுக்
குளிர்புன முற்றுத் தத்துபு னத்திற் றிரிவோனே

கொடியபொ ருப்பைக் குத்திமு றித்துச்
சமரஞ்செ யித்துத் தற்பர முற்றுக்
குருகிரி யிற்புக் கத்தாக் குச்சொற் பெருமாளே.

* சுவாமிமலை.

69. தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன — தனதான.

அளகநிரை குலையவிழி குவியவளை கலகலென
வமுதமொழி பதறியெழ வணியார

மழகொழுகு புளகமுலை குழையவிடை துவளமிக
வமுதநிலை யருள்பரவ வதிமோகம்

உளமுருக வருகலவி தருமகளிர் கலவிதனி
லுழலுமது சுவடுமதி யொழியாதோ

யுலகடைய மயிலின்மிசை நொடியளவும் வருமளவி
லுனதுமட மலரடியை யருள்வாயே

வளையுமலை கடல்சுவற விடுமாழி வரதனருள்
மருதினொடு பொருதருளு மபிராம

அரியரவின் மிசைதுயிலும் வரதசய மகள்கொடுமை
யழுகியமர் முடுகிவிடு நிருதேசன்

தளமுறிய வரைதகர வசுரருடல் தலைசிதற
தகனமெழ முடுகவிடு வடிவேலா

தரளமணி வடமிலகு குறவர்திரு மகள்கணவ
சகலகலை முழுதுவல பெருமாளே.

திருவாரூர்.

70. தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன — தனதான

காமு முளரியின் மலர்முக மதிகுழல்
கனம தெனுமொழி கனிகதி ரிளநகை
கலக மிடுவிழி கடலென விடமென மனதூடே

கருதி யனநடை கொடியிடை யியல்மயில்
கமழு மகிலுட னிளகிய மிருகமத
களப புளகித கிரியினு மயல்கொடு திரிவேனை

இரவுபகலற பவமற வினையற
வியனுமயல்தர விழியினில் விழிவற
விசைய முழுகிய வொருகள பதமுற மடலூடே

எழுத வரியவள் குறமக ளிருதன
கிரியில் விழுதினை யிளையவ னெனுமுறை
யினிமைபெறுவது மிருபதமடைவது மொருநாளே

சுரபிமகவினை யெழுபொருள் வினவிட
மநுவி னெறிமணி யசைவுற விசைமிகு
துயரில் செவியினி லடிபட வினவுபி னதிநீதா

துணிவி லிதுபிழை பெரிதென வுருமனு
வுருகி யரகர சிவசிவ வெனுமதொர்
சுரபி யலம்வர விழுபுனல் பெருகிட நடுவாகப்

பரவி யதனொடு துயர்கொடு நடவிய
பழுதின் மதலையை யுடனிரு பிளவொடு
படிய விரதமு னடவிட் மொழிபய னருளாருந்

பதியி லறுமுக சிவசுத கணபதி
குமர குருபர நிருபதி சரவண
பரவைமுறையிட மயிலைகொடுநடவிய பெருமாளே.

பழநிமலை.

71. தனத்தனத் தனத்தனத்
தனத்தனத் தனத்தனத்
தனத்தனத் தனத்தனத் — தனதானா.

குறித்தமணிப் பணித்துகிலைத்
திருத்தியுடுத் திருட்குழலைக்
குலைத்துமுடித் திலைச்சுருளைப் பிளவோடே

குதட்டியிதழ்க் கடித்ததவிக்
கயற்கடையிட் டழைத்துமருட்
கொதித்துலவர்வைக்கொடுத்துநகக் குறிமேலே

பொறித்ததனத் தனைத்தாமலச்
செருக்கினர்கைப் பொருட்கவரப்
புணர்ச்சிதனைப் பிணிப்படுவித் திடுமாதர்

புலத்தலையிற் செலுத்தாமனப்
ப்ரமத்தையறப் பரிச்கமுறப்
பிரித்தருளிற் றிருக்கழலைத் தருவாயே

பழித்தகலைத் திருட்டமனக்
குருக்களைசட் டிருக்கருடைப்
புழுக்களுகக் கழுக்கள்புகத் திருநீறு

டாப்புமனத் திருப்பதிகக்
கனற்புனலிற் கனத்தசொலைப்
படைத்தருளித் திரட்டுபுகழ்க் கவிராச

தெறித்திருள்கிக் கதிர்த்துயிலுந்
துகப்பொனைத் தகப்பணிலத்
திறக்கவுரைத் தருட்கருணைப் பெருவாழ்வே

திலகக்கருணைப் பதிக்குள்ளினத்
தடித்தடைப் பரித்திடருட்
மருப்பழகிப் பதிக்குமரப் பெருமாளே.

திருப்பிரமபுரம்.

72 தனதனதந்தன தந்தன தந்தன
தனதனதந்தன தந்தன தந்தன
தனதனதந்தன தந்தன தந்தன — தனதான.

கருவிலெனிற்றும றண்டுவெருண்டுட
லமையமுமின்றலெ னின்றவரும்படி
தவழ்வருகின்றுக லங்கிவிரும்பிய தமிழ்க்கூறுந்

சனிசையுதன்றியும் வெள்ளியுமங்கள
பொருள்மைகளுந்தவ முன்குணமும்பயில்
சரவணமும்பொறை யும்புகழுந்திகழ் தனிவேலும்

விருதா தலங்குறி கண்டியுமண்டரு
முருகிலணங்கிய ரும்பதழும்பல
விதரணை முன்றிற முக்கமுன்றினை புணமானும்

மருகமதருக்கும கொங்கையுகொந்தடி
வருடிமனைக் குடி யவர்க்குதவுக்பல
விசடமுமன்பி லொழிக்குமெமர்த்தியல்புகல்வேனே

கருதியிலைக்கைய ழிக்குவிடும்படி
மயுணாடங்கர திக்குவிழும்படி
கதிரவனிக்குவி ளக்கிவரும்படி விடுமாயன்

கடவிமருஞ்சிர கெவ்விமுறிக்கிட
படுகிரிவலைக் கதவுப்புபடக்கரன்
கருவிணை முருக்கவ ரங்கவருஞ்சக டமிமாதி

மருகதுரங்கம லங்கமணிக்கிடி
வரதனையன்பு னைக்கருகுக்குமன்
வடிவகிவிங்கடல் மங்கலைசம்புகை தொடுமீனி

மருகபுரந்தர னுக்கமொன்றிய
பிரமபுரந்தனி லுங்குகனெனபவர்
மனமதிலும்பரி லொன்றியமர்ந்தருள் பெருமானே.

---

73. தனதனதனதன தந்ததானன
தனதனதனதன தந்ததானன
தனதனதனதன தந்ததானன — தந்ததான.

கனைகடல்வயி றுரு ழும்பிவாய்விட
வடதுமணியகிரி கம்பமாய்நட
சரணபணவிகடித தொந்தகாளபு யங்காசன்

கரிதிறனவமரர ணந்தகோடியு
முறைமுறைமுழுதுக டைந்தகாளொரு
உததியிலுலகைவி ழுங்குமேகமொ ழுங்குபோல

விளைமதகரிகளு மெண்டிசாமுக
கிரிகளும்வெருவிட வண்டகோளகை
வெடிபடவெவ்வரையும் விஞ்சிமேலிடு   கஞ்சபோசன

விடுகுழையளவும ளந்தகாமுக
ருயிர்பலிகவர்வுறு பஞ்சபாதக
விழிவலைமகளிரொ டன்புகூர்வதொ ழிந்திடாதோ

முனைபெறவலயம ணிந்தமோகர
சிகரர்கடகமு றிந்துதூளெழ
முகிலினம்வெருவவி ருண்டதாரக   னஞ்சமீன

முழுகியதிமிரத ரங்கசாகர
முறையிடவிமையவர் தங்களூர்புக
முதுகிரியுருவமு னிந்தசேவக   செம்பொன்மேரு

அனையகனகவிப வங்கொள்கோபுர
வருணையிலுறையும ருந்துணைமுலை
யபிநவவனிதைத ருங்குமாரவி   லங்குமார்ப

வடவியில்வடிவுக ரந்துபோயொரு
குறமகள்குறகுதி ரித்தகாமுக
வரிகரபிரமபு ரந்தராதிபர்   தம்பிரானே.

பொது.

74. தையதனதானத்—தனதான.

துள்ளுமதவேள்கைக்   கணையாலே
தொல்லைநெடுநீலக்   கடலாலே

மெள்ளவருசோலைக்   குயிலாலே
மெய்யுருகுமானைத்   தழுவாயே

தெள்ளுதமிழ்பாடத்   தெளிவோனே
செய்யகுமரேசத்   திறலோனே

வள்ளல்தொழுஞானக்   கழலோனே
வள்ளிமணவாளப்   பெருமாளே.

நிம்பபுரம்.

75\. தந்ததனதான தந்ததனதான
தந்ததனதான—தனதான.

அஞ்சுவிதபூத முங்கரணநாலு
மந்திபகல்யாது   மறியாத
வந்தவெளி யொன்றுமிலதான
வந்ததொருவீடு   பெறுமாறு
மஞ்சுதவழ்சார லஞ்சயிலவேடர்
மங்கைதனைநாடி   வனமீது
வந்தசரணார விந்தமதுபாட
வண்டமிழ்விநோத   மருள்வாயே
குஞ்சரகலாப வஞ்சியபிராமி
குங்குமபடீர   வதிரேக
கும்பதடமீது சென்றணையுமாறு
குன்றுதடுமாற   விகல்கோப
வெஞ்சமரசூர னெஞ்சுபகைதீர
வென்றிவடிவேலை   விடுவோனே
விம்பமதில்சூழு நிம்பபுரவாண
விண்டலமகீபர்   பெருமாளே.

76\. தன்னதனதனத்தத் தனந்தனந்தன
தன்னதனத்தத் தனந்தனந்தன
தன்னதனத்தத் தனந்தனந்தன—தந்ததான.

முகமினுக்கிப் பெருங்கருங்குழல்
முகிலையவிழ்த்துச் செருந்திசண்பக
முடியையவிழ்த்துப் புறம்புவந்தடி   முன்பினாக
முலையையசைத்துத் திரிந்துமுன்றிலி
லுடையைநெகிழ்த்துப் புனைந்துவஞ்சக   [டே
முறுவல்விளைத்துத் துணிந்துதந்தொரு முன்றிலூ

மகளிர்விருப்பிற் சிறந்தபந்தியின்
மதனனுநிற்கக் கொழுந்துவெண்பிறை
வடவையெரிக்கத் திரண்டுபண்டனை வண்டுபாட
மலயநிலத்துக் கரந்ததென்றலு
நிலைகுலையத்தொட் டெம்புபுண்செய்து
மயலையளிக்கக் குழைந்துசிந்தைம லங்கலாமோ
பகலவன்மகட்கப் புகுந்துகந்தர
ககனமுகட்டைப் பிளந்துமந்தர
பருவரையொக்கச் சுழன்றுபின்புப றந்துபோக
பணமணிபட்சத துரங்கமுன்றனி
முடுகிநடத்தக் கழிந்துவிந்தழு
பரவையரற்றப் ப்ரபஞ்சநின்றுப யந்துபாடக்
குகனெனமுக்கட் சயம்புவும்ப்ரிய
மிகவசுரர்க்குக் குரம்பைவந்திட [ளே
விகலமறுத்திப் பொருங்கொடும்படை வென்றவே
குழையணியொப்பற் றிருந்தசங்கரி
கவுரியெடுத்துப் பரிந்துகொங்கையி [ள
லமுதையளிக்கத் தெளிந்துகொண்டருள் தம்பிரா

திருவருணை.

77. தனதனத் தானனத் தனதனத் தானனத்
தனதனத் தானனத் — தனதான.

கயல்விழித் தேனெனச் செயலொழித் தாயெனக்
கணவகெட் டேனெனப் — பெருமாதர்
கருதுபுத் ராவெனப் புதல்வரப் பாவெனக்
கதறிடப் பாடையிற் — றலைமீதே
பயில்குலத் தாரழப் பறையடிப் பாரழப்
பறைகள்கொட் டாடவச் — சமனாரும்

பரியகைப் பாசம்விட் டெறியுமப் போதெனைப்
　　பரிகரித் தாடையைத் தரவேணும்
அயிலிடைச் சேவல்கைப் பரிதரத் தோகையுற்
　　றருணையிற் கோபுரத் துறைவோனே
யமரரத் தாசிறைக் குமரிகட் பாகனத்
　　தரியசொற் பாவலர்க் கெளியோனே
புயலிளைப் பாறுபொற் சயிலமெய்ச் சாரலிற்
　　புனமறப் பாவையைப் புணர்வோனே
பொடிபடப் பூதரத் தொடுகடற் சூரனைப்
　　பொருமுழுச் சேவகப் பெருமாளே.

---

78. தானதன தானத்த தானதன தானத்த
　　தானதன தானத்த—தனதான.

ஆலுமயில் போலொத்த தோகையர்க ளேமெத்த
　　வாரவட மேயிட்ட முலைமீதே
யானதுகி லேயிட்டு வீதிதனி லேநிற்கு
　　மாலைமகடை யாரிக்கு மொழியார்பால்
மாலொடவர் போகத்தி லேசுலவி யேநித்தம்
　　வாழ்மெனை நீசித்த மகிழ்வாகி
மாகமுக டாருக்ர வேகமயி லேயுற்று
　　வாழ்வுபெற வேமுத்தி தருவாயே
நாலுமுகவேதற்கு மாவிலையின் மாயற்கு
　　காடவரி யார்பெற்ற வொருபாலா
நாகமுடி மீதுற்ற ஞாலமதி லேபத்தர்
　　ஞானமுனி வோர்கட்கு மிறைவோனே
வேலைவிழி வேடிச்சி யோடமரர் மாதோக்க
　　சீரருணை மால்வெற்பி லுறைவோனே
வீரமுட னேயுற்ற சூர்கிளை விழ்விக்க
　　வேலையிக வேவிட்ட பெருமாளே.

79. தானதனதானத் தானதனதானத்
தானதனதானத்—தந்ததானு.

ஆலவிழிநீலத் தாலதரபானத்
தாலளகபாரக் கொண்டலாலே
யாரகைையால்விற் போலுநுதலால்வித்
தாரநடையால்வற் கொங்கையாலே
காலமயலாகிக் காலதிரிசூலத்
தாலிறுகுபாசத் தும்பினாலே
தாழ்விலுயிர்பாழ்பட் டேழ்வினைவிடாமற்
சாருமுனைநினைவற் கொண்டிடாதோ
சோலைதருகானிற் கோலமறமானைத்
தோளிலுறவாகக் கொண்டவாழ்வே
சோதிமுருகாநித் தாபழயஞானச்
சோணகிரிவீதிக் கந்தவேளே
பாலககலாபக் கோமளமயூரப்
பாகவுமைபாகத் தன்குமாரா
பாதமலர்மீதிற் போதமலர்தூவிப்
பாடுமவர்தோழந் தம்பிரானே.

பொது.

80. தானந்தனதன தானந்தனதன
தானந்தனதன—தனதான.

தீயும்பவனமு நீருந்தரணியும்
வானுஞ்செறிதரு பசுபாசத்
தேகந்தனைநிலை யேயென்றிருவினை
தீருந்திறவினை யறியாதே
ஐயும்படியறு நூறும்பதுமுதல்
நூறும்பதினிரு பதினாறு

மோடுஞ்சிறுவுயிர் மீளும்படி நல
யோகம்புரிவது கிடையாதே
வேயுங்கணியும்வி ளாவும்படி புன
மேவுஞ்சிறுமிதன் மணவாளா
மீனம்படுகட லேழுந்தழலெழ
வேதங்கதறிட வொருநாளும்
வாயுஞ்சுலகிரி மாவுந்தொளைபட
மாசுக்ரமதில் மறைசூரன்
மார்புந்துணையுறு தோளுந்துணிபட
வாள்கொண்டமர்செய்த பெருமாளே.

---

81. தனன தாத்தன தனன தாத்தன
தனன தாத்தன—தந்ததான,

பொருதாய்த்தனி முதலதாய்ப்பக
விரவதாய்ப்புகல் கின்றவேதப்
பொருளதாய்ப்பொருள் முடிவதாய்ப்பரு
வெளியதாய்ப்புனை வின்றிஞான
கதியதாய்க்கரு தரியதாய்ப்பரு
கமுதமாய்ப்புல னைந்துமாயக்
கரணமாய்த்தெனை மரணமாற்றிய
கருணைவார்த்தையை யென்றுசேர்வேன்
உததிதீப்பட நிருதரார்ப்பெழ
வுலகுபோற்றிட வெங்கலாப
வொருபரக்ரம துரகமோட்டிய
வாகர்போற்றிய கண்பவானோர்
முதல்வபார்ப்பதி புதல்வகார்த்திகை
முலைகள்தேக்கிட வுண்டவாழ்வே

முளரிபாற்கடல் சயிலமேற்பயில்
முதியமூர்த்திகள் தம்பிரானே

---

82 தனத்தத் தந்தனந் தனத்தத் தந்தனந்
தனத்தத் தந்தனந்—தனதான.

தடக்கைப் பங்கயங் கொடைக்குக் கொண்டறண்
டமிழ்க்குத் தஞ்சமென் றுலகோரைத்
தவித்துச் சென்றிரந் துளத்திற் புண்படுந்
தளர்ச்சிப் பம்பரந் தனையூசற்
கடத்தைத் துன்பமண் சடத்தைத் துஞ்சிடுங்
கலத்தைப் பஞ்சவிந் த்ரியவாழ்வைக்
கணத்திற் சென்றிடத் திருத்தித் தண்டையங்
கழற்கீழ்த் தொண்டுகொண் டருள்வாயே
படைக்கப் பங்கயன் றுடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சமன் பணியாகப்
பணித்துத் தம்பயந் தணித்துச் சந்ததம்
பரத்தைக் கொண்டிடுந் தனிவேலா
குடக்குத் தென்பரம் பொருப்பிற் றங்குங்
குலத்திற் கங்கைதன் சிறியோனே
குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமாளே.

திருவருணை.

83. தனனதன தானதத்த தனனதன தானதத்த
தனனதன தானதத்த—தனதான.

முழுகிவட வாமுகத்தி லெழுகனலி லேபிறக்கு
முழுமதிநி லாவினிற்கும் வசையாலும்
மொழியுமட மாதருக்கு மினியதனி வேயிசைக்கு
முதியமத ராசனுக்கு மழியாதே

புழுகுதிகழ் கோட்டத்தி லுழக்கியரு காலிரைத்த
  புதுமையினி னாவிப்பட்டு புயமீதே
புணருமைந்தை யாரிரைக்க அணையுமையல் மாதுசெத்த
  பெருமையினி லோர்த்திருக்கம் வருவேனும்
எழுமகர வாரிசுற்று பொழிலருணை மாநகர்க்கு
  ளெழுகரிய கோபுரத்தி லுறைவோனே
யிடைதுவள வேம்பவெளி பயனவித மேறுமப்ப
  விளமுலைவி டாதசித்ர மணிமார்ப
செழுமறைய நாவிமாய்த்த வொழுதுபுனல் வேணி
  யைக்க, சிவனுமுத லோதுவைத குருநாதா
திசைமுகன்மு ராரிமற்று மரிபல தேவருற்ற
  சிறையடைய மீளவிட்ட பெருமாளே.

விராலிமலை.

௮௧. தானனத் தனதான தானனத் தனதான
  தானனத் தனதான — தனதான.

நீள்புயற் குழலாகர் பேரினிற் குழையாமல்
  நேசமுற் றடியேனு நெறிகேடாய்
நேமியிற் பொருளாடு போடியேயத் தலைமாறி
  நீதியிற் பிழையாமை நினையாதே
பாழினுக் கிரையாகி யாவையுந் தெருவோடி
  பாடலுற் றிடவோசெய் திரிமோச
பாவியப் படிவாழு தேவர்கட் குளதான
  பார்வைசற் றருள்வேறு பணியாயோ
ஆழியிற் றுயில்வோனு மாமலர்ப் பிரமாவு
  மாசறப் பெருவானு மறைவோரு
மாலைமட் டருவோடு நாளுமுற் றியல்வோரு
  மாயிரத் திருநாமு மறையோரும்

வாழுமெய்த் தவர்சூழ்வி ராலிவெற் பினின்மேவு
வாகுசித் திரதோகை மயிலேறி

மாறெனப் பொருசூரா வீறெழப் பொரும்வேல
மான்மகட் குளனான பெருமாளே.

திருவேரகம்.

85. தனனதன தானதத்த தனனதன தானதத்த
தனனதன தானதத்த—தனதான.

சரணகம லாலயத்தை யரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம்வைக்க வறியாத

சடகசட மூடமட்டி பலவினையி லேசனித்த
தமியன்மிடி யான்மயக்க முறுவேனோ

கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே

கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே

தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு

தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா

அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
வரியதமிழ் தானளித்த மயில்வீரா

வதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
வழகதிரு வேரகத்தின் முருகோனே.

கதிர்காமம்.

86. தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா—தனதான.

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
 சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
 தகர்த்தா யுடற்றா னிருகூறாய்ச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
 செகுத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சேவல் பெற்றா யலக்கான் மிகுத்தாய்
 திருத்தா மரைத்தா ளருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
 பொரத்தா னெதிர்த்தே வருபோது
பொருத்தார் பரித்தார் சிரித்தா ரெரித்தார்
 பொரித்தார் நுதற்பார் வையிலேயின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
 கருத்தார் மருத்தூர் மதனாரைக்
கரிக்கோ லமிட்டார் கணுக்கா னமுதே
 கதிர்க்கா மமுற்றார் முருகோனே.

திருப்புலியூர்.

87. தனன தனதன தனன தனதன
தனன தனதன தனன தனதன
தத்தத் தத்தன தத்தத தத்தன
தத்தத் தத்தன தத்தத் தத்தன-தனதான.

மருவு கடன்முகி லனைய குழன்மதி
வதன மிருகயலை மழைய தெனும்விழி
மஞ்சுப் பொற்கிளை முக்குப் பொற்குமி
ழொப்பக தத்தரி யொத்திட் டச்செவி

குமுத மலரித ழமுத மொழிநிறை
தரள மெனுநகை மிடறு கமுகென
வைத்துப் பொற்புய பச்சைத் தட்டைபொ
டொப்பிட் டுக்கம லக்கைப் பொற்றுகி
ரணையவிர லொடு கிளிகண் முகநக
மெனவு மிகவிய குவடு மிணையுமு
செப்புத் தக்கம ருப்புச் சக்கரம்
வைத்தப் பொற்குட மொத்திட் டுத்திகழ்
முலைமேவும்,

வடமு நிரை நிரை தரள பவளமெ
டசைய பழுமா விலைவ யிறுமயி
ரொப்புச் சிற்றெறு ம்பொப்புத் தொப்புளு,
மைப்புக் கட்செவி பொத்துப் பொற்கொடி
அசைவி லுளவிடை யுமிலை யெனும
மலியு கடிதட வமுது கமழ்தரு
மட்டுப் பொற்கம லக்கொற் சக்கிரி
யுத்திப் பைக்கொரு முக்குப் பட்டுடை
யழகு தொடையிணை கதலி பரவென
மொழியு முழவொடு கமட நிகருறு
வட்டப் புறகை மொக்குப் பொற்சர
ணத்திற் பொற்புற மெத்தத் தத்தைகள்
மயில்போல,

தெருவில் முலைவிலை புரைசெய் தவரவர்
மனைகொ டணைவர மருள்செய் தெழில்கொடு
தெட்டிப் பொற்பல சொக்கிட் டிப்பொருள்
பற்றிக் கட்டில ணைக்கொப் பிப்புணர்
இலவ மழிபட விழிகள் சுழலிட
மலர்க ளிணைகுழ லிடைகொள் துயில்பட
இத்தித் தப்பிதம் வைத்துக் கைக்கொடு
கட்டிக் குத்துமு லைக்குட் டைப்பட

திரையி லமுதென கழையி ரசமென
பலவில் சுளையென வருக பிணிபல
திக்குப் பட்டிடல் கட்டிச் சிர்தழும்
வெட்டித் தூர்கழ மொழுத்துக் கொக்கென

கரைமேலி,

செவியொ டொளிர்விழி மறைய மலசல
மொழிகள் பலவுரை குழற தடியொடு
திரத்தில் பித்தமு முற்றித் தற்செய
லற்றுச் செக்கெடு மாத்துக் கப்பட
இலர்கள் முகவுடல் விளைவு பொழுதினி
அவர்கி செழுமூட மமது முயிர்கொள
செப்பற் பூரிண மொப்பிச் சுற்றவ
சிட்டப் பொருளை கொட்டச் செப்பிடு
தொளைய புதுவென வழுதா முதங்கை
மலரி மலையுய பெடிடன் அடவியில்
செற்றிச் சிக்கறை சிட்டிட் டிப்படி
சித்தக் தக்கமெ டுத்திட் டுச்சட

முழமலேனே,

குருவி லுகுமென வருள்செய் தறையினில்
குதிரை கொள்ளுரு நிறைத வசிதமே
சொத்தப் பொற்பதம் வைத்திட் டற்புத
வெற்றிப் பொற்பொரு விட்டுக் கைக்கொளு
முதல்வ னினசலை மதியு மடைசடை
மருளை வசல மழுவு முறைழயணி
கொட்டத் தூப்பூரர் கெட்டுப் பொட்டெழ
பிட்டத் திக்கனை தக்கற் கற்புத
குமர வெனவிரு தொலியு முரசொடு
வளையு மொழுகட லதிர்வின் முழவொடு
தட்டத் தக்கவா வெட்டிக் தட்கட
செப்பத் திக்குமெ டுத்தாத் தத்திட

வமர்மேலி,

குருது கொடிசிலை குடைகள் மிடைபட
மலைகள் பொடிபட வுடைக ளுதிரிட
கொத்துச் சக்கிரி பற்றிப் பொற்கிரி
யெட்டுத் திக்குமெ டுத்திட் டுக்குரல்
குமர குருபர குமர குருபர
குமர குருபர வெனவெவா தமரர்கள்
கொட்டப் புட்பமி றைத்துப் பொற்சர
ணத்திற் கைச்சிரம் வைத்துப் புட்குரல்
குலவ நரிசிறை கழுகு கொடிபல
கருட னடமிட குருதி பருகிட
கொத்தப் பத்திர மிடுப் பொற்கக
ணத்தைச் சித்தனு ரக்ஷித் துக்கொளு
மயில்வீரா,

சிரமொ டிரணிய னுடல்கிழியவொரு
யொழுகி னுகிர்கொடு வரிய கடமிடு
சிற்பத் திப்பதம் வைத்துச் சக்கர
வர்த்திக் குச்சிறை யிட்டுச் சுக்கிர
னரிய விழிகெட வொருப தமுடிய
மழிய நெடியவர் திருவு மழகியர்
தெற்குத் திக்கில ரக்கற் குச்சின
முற்றுப் பொற்றசர் தற்குப் புத்திர
செயமு மனவலி சிலைகை கொடுகர
மிருப துடைகிரி சிரமொர் பதும்விழ
திக்கெட் டைக்கக னத்தர்க் குந்தொழ
பச்சைப் பொற்புய லுக்குச் சித்திர
மருகோனே,

திலக மதிமுக வழகி மரகத
வடிவி பரிபுர கடனி மலர்பத
சித்தர்க் குக்குறி வைத்திட் டுத்தன
முத்துப் பொற்கிரி யொத்துச் சித்திர

சிவகொள் திருசர சுவதி வெகுவித
சொரூபி முதலிய கிழவி யியல்கொடு
கொட்டிக் கிச்சுக முத்தாக தத்துவ
சித்திற் சிற்பதம் வைத்துக் கற்புறு
கிளாயி லமுமிதன மொழிசெய் கவுரியி
ணரிய மகவென புகழ்பு லிககரில்
செட்டிப் பொற்றன முற்றுப் பொற்குற
தத்தைக் குப்புள சித்தட் டொப்பிய
பெருமாளே.

பொது.

88 தத்தன தானன தத்தன தானன
தத்தன தானன—தனதான.

சுட்டது போலாசை விட்டுல காசார
துக்கமி லாஞான சுகமேவி
சொற்கரு ணாதீத கற்பனை யூடாடு
சுத்தநி ராதார வெளிகாண
மொட்டலர் வாரிச சக்ரச டாதார
முட்டவு மீதேறி மதிமீதாய்
முப்பது மாறாறு முப்பது மாறான
முத்திரை யாமோன மடைவேனோ
எட்டவொ ணாவேத னத்தனி கோகோவெ
னப்பெரு மானோல வரைசாய
வெற்பிபிளவாய் வற்றிட மாறாத
வெற்றிவே லோனே யசுரேசர்
பட்டொரு வோர்டாமல் விக்ரம வேலேவு
பத்திர தோள்வீர தினைகாவல்
பத்தினி தோள்தோயு முத்தம மாறாத
பத்திசெய் வாருடை பெருமாளே

திருக்குரட்டி.

89. தானதன தத்ததான தானதன தத்ததான
தானதன தத்ததான — தனதான.

நீரிழிவு குட்டமீளை வாதமொடு பித்தமூல
நீள்குளிர்வெ துப்புவேறு முளநோய்கள்
நேருறுபு ழுக்கள்கூடு நான்முகனெ டுத்தவீடு
நீடியவி ரத்தமூளை தசைதோல்சீ
பாரியந வத்துவார நாறுமுட லத்தில்வாழு
பாயலணியி லுற்றுபாவை யர்க்காசைபெய்
பாமெருகெ ழுக்கள்கூடை தாமிலையபு கிப்பதான
பாழுடலை விடத்தனின் ழுழல்வேனோ
நாரணிய றத்திநாரி யாறுசம யத்திபூத
நாயகிந டத்திகாயி மகமாயி
நாடகந டத்திகோல நீலவரு ணத்திவேத
நாயகியு மைச்சிநீலி திரிசூலி
வாரணிமு லைச்சிஞான பூரணிக லைச்சிநாக
வாணுதலி சித்ரவீர மயில்வீரா
மாடமதின் முத்துமேடை கோபுரம ணத்தசோலை
வாகுளகு ரட்டிமேவு பெருமாளே.

பொது.

90. தனதன தானத்தானன தனதன தானத்தானன
தனதன தானத்தானன — தனதான.

முருகமயூரச்சேவக
குறமகளாவற்பூதர
முதுளப டாக்கோமள முலைமீத
முழுகிய காதற்காமுக
பசுபதி பாதத்தாய்வினை
முதியபு ராரிக்கோதிய குருவேயென்

றுருகியு மாடிப்பாடியு
பிருகமு றுடிக்குடியு
மூணர்வி ழுந்தாடிக்கூடியும் வழிபாடுற்

றுலகிலிலா தாசைப்பாடற
நிலைபெறு ஞானத்தாவினி
யுனதடி யாரைச்சேர்வது மொருநாளே

பருகவினை ஞமருஞ்சூழ்கொலை
கருதிய மாமப்பாதகன்
வரவிடு மாயப்பேய்முலை டருதாமுன்

வருகரி யானைக்கோடவை
திருகிவி ளாவிற்காய்கனி
மதுகைக்கு விழச்சாடிய விதமார்புட்

பொருதிருள் சோரப்பாரிய
மருதிடை போயப்போதொரு
சகடதை யாமப்போர்செய்து விளையாடி

பொதுவியர் சேரிக்கேவளர்
புயல்மரு காவச்சாயுத
புதிரவ பாபுக்கேளிர்கள் பெருமாளே.

திருவாலங்காடு.

91. தனதன தானந்தாத்த தனதன தானந்தாத்த
தனதன தானந்தாத்த—தனதானா.

வடிவது நீலங்காட்டி
முடிவிடு காலங்காட்டி
வரவிடு தூதங்கோட்டி பாச

மகவொடு மாமன்பாட்டி
முதலுற வோருங்கேட்டு
அழுதரா மாயந்திட்டி யுயிர்போலே

படிமிசை நாளுங்காட்டி
யுடலுறு நோய்பண்டேற்று
பழவினை பாவந்தீர்த்து ணடியேனைப்

பரிவொடு நாளும்பார்த்து
விரிதமி ழாளுங்கூத்தர்
பார்புகழ் பாடினருட்கொண் டருள்வாயே

முடிமிசை சோமன்சூட்டி
வடிவுள வாலங்காட்டி
முதிர்நட மாடுங்கூத்தர் புதல்வோனே

முருகலர் தாமஞ்சூட்டி
யொருதனி வேழங்காக்க
வருதிரு மாலுங்கோற்க வசைகூறி

இடியென மேகங்கூட்டி
நெடிதரு சூலந்தீட்டி
யெதிர்பொரு சூரன்றாக்க வரவோடி

யிலகிய வேல்கொண்டேற்ற
வுடலிரு கூறன்றாக்கி
யிமையவர் பேதந்தீர்த்த பெருமாளே. ௪

திருப்பழநிமலை.

92. தனன தனன தனன தனன
தனன தனன—தனதான.

தமருமணையு மாசுமினிய
தனமுநிலையு மிவைபோகத்
தறுகண்மறலி முறுகுகயிறு
தலையைவளைய வெறியாதே
கமலவமல நடனவுபய
கனகமணிகொ ளிருபாதங்
கருதவருளி யெனதுதனிமை
கழியவறிவு தரவேணும்

குமரசமர புரியின்முருக
குலவுபழநி மலையோனே
கொடியகிரியை முடியமுடுகு
குறவர்சிறுமி மணவாளா
வமரரிடரு மவுணருடலு
மடியவமர்செய் தருள்வோனே
யறமுநிறமு மயிலுமியலு
மழகுமுடைய பெருமானே.

திருக்குரவடி.

93. தனத்த தானன தனதன — தனதான.

மருக்கு லாவிய மலரணை கொளாதே
வளர்த்த தாய்தமர் வசையது மொழியாதே
அருக்கு லாவிய வயலவர் பழியாதே
கடப்ப மாலையை யினிவர விடவேணும்
தருக்கு லாவிய கொடியிடை மணவாளா
சமர்த்த னேமணி மரகத மயில்வீரா
திருக்கு ராவடி நிழறனி லுறைவோனே
திருக்கை வேல்வடி வழகிய பெருமாளே.

பொது.

94. தனதன தந்ததத்த தனதன தந்ததத்த
தனதன தந்ததத்த — தனதான.

மொழியநி றங்கறுத்து மகரவி னங்கலக்கி
முடியவ ளர்ந்துரைத்த கடலாலே
முதிர்வி டம்பரப்பி லடைவுமு கந்தழற்றுணை
முழுகியெ ழுந்திருக்கு நிலவாலே
பழையன கந்திரிந்த கொடியிடை வஞ்சியுற்ற
மடவிலம னங்கிளைத்து விடலாமோ
மரகத துங்கவெற்பில் கிடுகிட டங்கொள்சித்ர
மயிலினு லங்கரித்தும் வரவேணும்
அழகிய துங்குமக புழுகியல் சந்தனத்தி
லழுந்தன வம்புதைத்த திருமார்பா

வருணைவ ளம்பதிக்கு மழகிய செந்திலுக்கு
மமரர்த லங்களுக்கு மிறையோனே
எழுபுவ னம்பிழைக்க வசுரர்சி ரந்தறித்த
வெழுசயி லந்தொளைத்த கதிர்வேலா
விரவியொ டந்தரத்த ராகரி பங்கயத்த
ரிவர்கள்ப யந்தவிர்த்த பெருமாளே.

திருவருணை.

95. தனன தனதன தனன தனதன
தனன தனதன—தனதான.

இறுகு மணிமுலை மருவு தாளமு
மெரியு மெழுமதி நிலவாலே
யிரவி லெனதுயிர் கவர வருதுயி
லிசையு முறுகட லலையாலே
தறுக ணதிபதி மதனன் விடுகொடு
சரமு மினிமெயினை யணுகாதே
தருண மணிபொழி லருணை நகருறை
சயில மிசையினில் வரவேணும்
முருகு திரிபுர மெரிய நகைகொளு
முதல்வ னுடையவர் குருநாதா
முடுகு கொடுமுடி யசுரர் பொடிபட
முடுகு மரகத மயில்வீரா
சுறவ மடமக ளமிர்த கனதன
குவடு படிமொரு திருமார்பா
கொடிய சுடரிலை தனையு மெழுகடல்
குறுக விடவல பெருமாளே.

---

96. தனன தத்தத் தத்தத் தத்தத் தனதன
தனன தத்தத் தத்தத் தத்தத் தனதன
தனன தத்தத் தத்தத் தத்தத் தனதன—தனதான

கமலமொட்டைக் கட்டழித்துக் குமிழிணை
நிலைகுலைத்துப் பொற்குடத்தைத் தமனிய
சவர்க்கத் தைத்தகர்த்துத் தலையற விளநீரைக்

கருவிவட்டைப் பிற்றாத்திப் பொருதவ
சயம்விளைத் துச் செப்படிப்பித் துலவிய
கரியருப்பைப்புக்கொடித்துத் திரன்மதனைபிஷேகம்
அமலர்நெற்றிக் கட்டழற்சுட் பொடிசெய்து
வதிகசக்ரப் புட்பரக்கக் கொடுமையி
னடனமிட்டச் சப்படுத்திச சுபதமொ டிருதாளி
மறைகல்கற்பித் துப்பொருப்பைக் குலவிய
இறகறுப்பித் துக்கதித்துப் புடைபடு
மழிகவச்சித் ரத்தனத்துத் திருடிக ளுறவாமோ
தமரர்க்குற் றுக்கலக்கப் பலபறை
தொகுதொகுத்தொக் குத்தொகுக்கத்தொகுதொகு
த்ரிகிடதத்தத் தத்தரிக்கத் தரிகிட வெனமோதி
சடவுடற்பக் கப்பழுத்துப் புகையெழு
விழிகளுட்செக் கசசிவத்துக் குறளிகள்
தசைகள்பட்சித் துக்களித்துக் கழுகொடு கழுகாட
அமரில்மெத்தக் கொக்கரித்துப் பொருதிடு
மசுரரத்தத் திற்குளித்துத் திமியென
வடிகடித்திட் டுக்கைகொட்டிச் சமர்செயு மயிலாண
வழுகுமிக்குச் சித்திரப்பொற் புரவியி
னுலவுநிர்த்தக கொற்றசித்துக் குருபா [மானே
வருணையிற்சித் தத்தெனக்குத் தெளிவருள் பெரு

பொது.

97. தனத்தத் தானத்—தனதான.

கருப்பத் தூறிப் பிறவாதே
கணக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றாருக் குரியோனே
பரத்தைப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேலற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே.

திருவிடைமருதூர்.

98. தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானனா தானதானனா
தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானனா தானதானனா
தனனதன தனனதன தனனதன
தானதானனா தானதானனா—தனதனதன தானா.

அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெருகியொரு
வாகுமாகியோர் பாலரூபமா
யருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
வாயிதாதையர மாயமோகமா
யருமையினி லருமையிட மொருமொளென வுடல்
வாருமாருமாய் வாலரூபமா [வனா
யவனொரு பெரியோரா,
யழகுபெற நடையுடைய கிறுதுபட மொழிபழகி
யாவியாயவோர் தேவிமாருமாய்
விழிசுழ வரிவையர்கள் படுகுழியை நிலைமையென
வீடுவாசலாய் மாடகூடமா
யணுவளவு தவிடுமிகள பிதிராவிட மனமிருகி
யாசையாளரா யூசிவாகியா
யவிகிற சுடர்போலே,
வெறுமிடியனென்றுதவசி யமுதுபடையெனுமளவில்
மேலவீடுகேள் கீழைவீடுகேள்
திடுதிடென நுழைவதனமு னெதிர்முடுகி யவர்க
சீறிஞாளிபோ லேறிவீழ்வதாய் [ளொடு
விரவிநோய்வருபொருள்கள் சுவரிபடவனுக்கெனு
விளியாசொலே மேலதாயிடா
விதிதனை நினையாதே,
மினுகுமினு கெனுமுடல மறமுறுகி யிறுகிவா
வீணர்சேவையா நூலுபாவிடாய
மறுமையுள தெனுமவரை விடுமவிழல பதர்கள்வரு
வார்கள்போவெனு காணுமோவெனு

விடுதுறவு பெரியவரை மறையவரைவெடுவெடென
வேளைமேசொலி ஞாளிவாயராய்
மிடையுறு வருநாளில்,

வறுமைகளு முடுகிவர வுறுபொருளு மழிவுசில
வாதமூதுகார மாலைசோகைநோய்
பெருவயிறு வயிறுவலி படுவன்வர விருவிழிகள்
பீளைசாறிடா வீளைமேலிடா
வழவழென வுமிழுமது கொழுகொழென வொழுகிவிழ
வாடிநூலைவா நாடிபேதமாய்
மனையவள் மனம்வேறாய்,

மறுகுமறு கெனுமனையி லனுதினமு மனையுமொரு
மாதர்சீயெனு வாலர்சீயெனு
கனவுகனி விரதவிமாடு துரைவர வெடியசுடு
காடுவாவெனு வீடுபோவெனு
லலதழிய சிரகழிய வுரைகுழறி விழிசொருகி
வாயுமேலிடா வாவிபோகுநாள்
மனிதர்கள் பலபேச,

இறுதியிதொ டறுதியென வுறவின்முறைகதறியழ
வேழைமாதரார் மோதிமேல்விழா
வெனதுடைமை யெனதடிமை யெனுமறிவுசிறிதும [ற
விழுலோவெனு வாயையாவெனு
விடுபறை சிறுபறைகள் திமிலையொடு முவிலறைய
வெரிதனி லிடும்வாழ்வே,

வினையடிகள் பரவுமன தடியவர்கள் மிகவுமனை
யேசிடார்களோ பாசநானே
யிருவினையு மலமுமற விறவியொடு பிறவியற
வேகபோகமாய் நீயுநானுமா
யிறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதி
லேகநாயகா லோகநாயகா
விமையவர் பெருமாளே.

திருக்கரபுரம்.

99. தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்-தனதான

ஒருவரைத் தனிமனைச் சயனமெத் தையினில்வைத்
தொருவரைத் தமதலைக் கடையினிற் சுழலவிட்
டொருவரைப் பரபரப் பொடுதெருத் திரியவிட்
டினிதாக,

ஒருவரைத் தமதணைக் கருகுறப் புணரவிட்
டொருவரைப் பரவசப் படவுடற் றழுவலுற்
றுயிர்பிழைப் பதுகழுத் தளவுமுப் பசமெனச்
செயுமானார்,

தருமயற் ப்ரமைதனிற் றவநெறிக் கயலெனச்
சரியையிற் கிரியையிற் றவமுமற் றெனதுகைத்
தனையவத் தினிலிறைத் தெவருமுற் றிகழ்
திரிவேனைச்,

சகலதுர்க் குணமறச் சகலசற் குணமுறத்
தரணியிற் புகழ்பெறக் கருணையுற் றனதுபொற்
சரணமெப் பொழுதுநட் பொடுநினைத் திடவருட்
டருவாயே,

குருமொழித் தவமுடைப் புலவரைச் சிறையில்வை
தறவுமுக் கிரம்விளைத் திடுமரக் கரைமுழுக் [த்
கொடியதுர்க் குணவயத் தவமுதற் றுரிசறுத்
திடும்வேலா,

குயில்மொழிக் கயல்விழித் துவரிதழ்ச் சிலைநுதற்
சசிமுகத் திளநகைக் கனகுழற் றனகிரிக்
கொடியிடைப் பிடிநடைக் குறமகட் டிருவினைப்
புணர்வோனே,

கருதுகட் சமயர்கட் கணியறக் கவையுடைப்
பறிதலைச் சமணரைக் குலமுதற் பொடிபடக்
கலகமிட் டுடலுயிர்க் கழுவினுச் சியினில்வைத்
திடுவோனே,

கமுகினிற் குலையறக் கதலியிற் கனியுகக்
கழையின்முத் தமுதிரக் கயல்குதித் துலவுநற்
கனவெயிற் றிகழ்திருக் காபுரத் தறுமுகப்
பெருமாளே.

விநாயகமலை.

100. தனதன தானனதானன
தனதன தானனதானன
தனதன தானனதானன—தனதான.

சரவண சாதாநமோநம கருணைய தேவாநமோநம
சதுரன பாதாநமோநம வபிராம
தருணசகாயாநமோநம கிருபநல் வீராநமோநம
சமதன ஆராநமோநம சகதீசா
பரமசொரூபாநமோநம சுரபதி பூபாநமோநம
பரிமள நீபாநமோநம வுமைகாளி
பகவதி பாலாநமோநம விகடர மூலாநமோநம
பவுருஷ சீலாநமோநம வருடாராய்
இரவியு மாகசபூமியு மதியமும வாழ்வாகவானவ
ரெவர்களுமீடேறவேழ்கடன் முறையோவென்
றிடர்பட மாமேருபூதர மடிபடவேதாநிசாசர
ரிகல்கெட மாசேனைமேலயில் விடுவோனே
மரகத வாகாரவாயனு மிரணிய வாகாரமேவனும்
வசுவெனு மாகாரவீசனு மடிபேண
மயிலுறைவாழ்வேவிநாயக மலையுறைவேலாமகாரத
வசுர ராதாரமாகிய பெருமாளே.

திருத்தணிகை.

101. தனன தானதந் தனன தானதந்
தனன தானதந்—தனதானா.

பகவி ராவெனுங் கருவி யான்மனம்
பதறி மால்கள்கொண் டுடல்பேணிப்
பழய வேதமும் புதிய நூல்களும்
பலபு ராணமுஞ் சிலவோதி

யகல நீளமொன் றளவு கூறரும்
பொருளி லேயமர்ந் தடைவோரை
யசடர் மூடரென் றவல மேபொழிந்
தறிவி லேனழிந் திடலாமோ
சகல வேதமும் புகலு நாடொறுஞ்
சருகி லாதசெங் கழுநீருந்
தவள நீபமும் புனையு நீபமுந்
தணியில் மேவுசெங் கழுநீருஞ்
சிகர பூதரந் தகர நான்முகன்
சிறுக வாசவன் சிறைமீளத்
திமிர சாகரங் கதற மாமரஞ்
சிதற வேல்விடும் பெருமாளே.

---

102. தத்ததத்த தந்ததத்த தத்ததத்த தத்ததத்த
தத்ததத்த தத்ததத்த—தனதான.

பொற்பதத்தி னைத்துதித்து
நற்புதத்தி லுற்றபத்தர்
பொற்புரைத்து நெக்குருக்க வறியாதே
பொய்த்தகப்பி தத்தைவிட்டு
மெய்த்தகத்து னைத்துதித்த
புத்தியுட்க லக்கமுற்று நினைவாலே
முற்படத்த லத்துதித்த
விற்படைத்த குற்றமுற்று
முற்பவத்தி லுற்பவித்து முயலாதே
முட்டவிக்க டைப்பிறப்பி
னுட்கிடப்ப தைத்தவிர்த்து
முத்திசற்றெ னக்களிப்ப தொருநாளே
வெம்பளித்த தற்பரைக்கி
டப்புறத்த ளித்தநித்தர்
வித்தகத்த கொற்றமுற்ற மயில்வீர

வித்தைகற்று முத்தமிழ்ச்சொல்
அத்தசத்தம் வித்தரிக்க [ணே
மெய்த்தணிந்தி ருப்பொருப்பி லுறைவோ

கற்பகப்பு னக்கொடிச்சி
கச்சடர்த்த சித்திபத்த
கற்புரந்தி ருத்தனத்தி லணைவோனே

சைத்ராக்கர் கொத்தழுத்த
வச்சிரத்த னுக்களித்த
சைத்தொழுத்த றுத்துவிட்ட பெருமாளே.

---

103. தனதனனந் தனதனனந்
தனதனனந் — தனதான.

கனமடவார்தஞ் சிலையதனாலுங்
கனவினையாலுங் கரைமேலே

கருதியகாயம் பெருகியநோயங்
கருதிலையாலுஞ் சிலையாலும்

கொலைதருகாமன் லகணையாலுங்
கொடியிடையார்நின் நலையாதே

குரவணிநீடும் பாவணிநீடுங்
குளிர்பதநீதந் தருள்வாயே

சிலைமகனாயன் கலைமகனாயன்
திருமகனாயன் தொழுவேலா

தினைவனமாலுங் கனவனமானுஞ்
செறிவுடன்மேவுந் திருமார்பா

தலைமலைமீதெண் புலவருலாவுந்
தணிபினில்வாழ்செங் கழுநீரே

தரியவர்கூறுந் தனிகெடகாறுந்
தணிமயிலேறும் பெருமாளே.

---

104. தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்த—தனதான.

வெற்றிசெய வுற்றகழை விற்குறிவ ளைத்தமதன்
விட்டகணை பட்ட கணையாலே
வெட்டவெளி யிற்றெருவி லட்டவணை யிற்கனல்வி
ழித்தொளிப ரப்பு மதியாலே
பற்றியிசை கற்றகடல் தத்தையர்த மக்குமிசை
பட்டதிகி ரிக்கு மணியாதே
பத்திமையெ னக்கருளி முத்தியைய ளித்துமலர்
பச்சைமயி லுற்று வரவேணும்
நெற்றிவிழி பட்டெரிய நட்டமிடு மத்தர்பர
நித்தர்மன மொத்த கழல்வீரா
நெய்க்கமலமொய்க்குமிசை மெய்க்குறவியிச்சையுற
நித்தமிரு குற்ற மணிமார்பா
வெற்றியதி ருச்சலதி சுற்றியதி ருத்தணியி
லெப்பொழுது நிற்கு முருகோனே
மெட்டசல மெட்டணிலு மெட்டசுர ரிட்டசிறை
வெட்டிவிடு வித்த பெருமானே.

---

105. தனத்தனத் தனத்தனத்
தனத்தனத் தனத்தனத்
தனத்தனத் தனத்தனத்—தனதான

அருக்கிமெய்த் தனைச்சிரித்
துருக்கியிட் டுளக்கருத்
தழித்தறக் கறுத்தகட் பயிலாலே
வழைத்தகப் படுத்தியொட்
டறப்பொருட் பறித்தவர்க்
கடுத்துவத் தமற்றுவித் தகர்போலத்
தருக்குமத் தருக்குமெய்க்
கதித்துவப் பரிசுறியெத்
தலத்துமற் றிலைப்பிறர்க் கெனுஞானந்

சழுத்துரைத் திமைப்பினிற்
சடக்கனற் படிப்பறத்
தடுக்குமிப் பிறப்பினைத் தவிரேனோ

பொருப்படைத் திரைக்கடற்
பரப்பரக்கர் பட்டபொற்
பொருப்பெனக் குவித்ததிற் பலபேய்கள்

பொசிப்பெனக் குதித்திடப்
படைத்தகற் பகப்புரிக்
கிரக்கம்வைத்த பொற்பரைக் கதிர்வேலா

திருத்தமுத் தமிழ்க்கவிக்
கொருத்தமைச் சிழுக்கியைத்
தினைப்புனக் கிரித்தலத் திடைதோயுந்

திறத்தகுக் கிடக்கொடிச்
செருக்கவுற் பலச்சுனைச்
சிறப்புடைத் திருத்தணிப் பெருமாளே.

---

106. தன்ன தான தானான தன்ன தான தானான
தன்ன தான தானான—தனதானா.

உடலினூடு போய்மீளு முயிரினூடு மாயாத
உணர்வினூடும் வானூடு முதுநீரு

மூலமையூடு தீயூடு புவியினூடும் யாதூடு
மொருவரோடு மோவாத தனியான

சுடரினூடு நால்வேத முடிவினூடு மூடாடு
துரியவாகு லாதீத சிவரூபந்

தொடரொணாத மாமாயை துரிசறாத பேதை
தொடமுபாய மேதேது புகல்வாயே

மடலறாத வாரீச வடலவசாய மாறாத
வரிவிரால்கு திபாய வமராடி

மதகுசாடி மீதோடி யுழவராய்விடாதோடி
மடையைமோதி யாறூடு தடமாகக்

கடல்புகாம ராமீன முடுகுவாளை தான்மேவு
கமலவாவி போய்மீளு மொருவாவி
கடவுணீல மாறுத தணியல்காவல் வேல்வீர
கருணைமேரு வேதேவர் பெருமானே.

---

107. தானதத்தன தத்தன தத்தன
தானதத்தன தத்தன தத்தன
தானதத்தன தத்தன தத்தன—தனதான.

ஓலையிட்டகு ழைச்சிகள் சித்திர
ரூபமொத்தநி றத்திகள் விற்கணை
யோடிணைத்தவிழிச்சிகள்சர்க்கரை யமுதாடே
ஊறியொத்தமொ ழிச்சிகள் புட்குரல்
வேறுவைத்தவெ ருட்டிந டைச்சிகள் [சும்
ஓசைபெற்றது டிக்குளி டைச்சிகள் பணம்வி
மாலையிட்டகு ழற்சிகள் முத்தணி
வாருழைத்தமு லைச்சிகள் குத்திர
மால்விளைத்தம னத்திகள் மருட்டிடு மடமாதர்
மார்பசைத்தம ருட்டியி ருட்டறை
வாவெனப்பொருள் பற்றிம யக்கிடு
மாதருக்குள்வ ருத்தமி ருப்பது தணியாதோ
வேலைவற்றிட நற்சினை தொட்டலை
மீதறுத்தத னிப்படை விட்டுற
வீறரக்கர்மு டித்தலை பத்தையும் மலைபோலே
வேருறுத்துநி லத்தில டித்துறை
வேதலட்சுமி யைச்சிறை விட்டருள்
வீரவச்சுத னுக்குந லற்புத மருகோனே
நீலநற்கணி மூக்கணி ணிர்க்குணி
டாலவுத்தம பத்தினி நிட்களி [னே
நீண்மலைக்கொடி சத்திய ளித்தருள் முருகோ
நீறிட்டுநி னைப்பவர் புத்திலய
நேயமெத்தவ ளித்தருள் சற்குரு
நீவளாத்திரு த்தணிவெற்புறை பெருமானே

108. தனனதன தனதந்த தனனதன தனதந்த
தனனதன தனதந்த—தனதானா.

முலைபுளக மெழவங்கை மருவுசிறு வளைகொஞ்ச
முகிலளக மகில்பொங்க வழகான
மொழிபதற வருமந்த விழிகுவிய மதிகொண்ட
முகம்வெயர்வு வரமன்ற லணைமீதே
கலைநெகிழ வளர்வஞ்சி யிடைதுவள வுடலொன்றி
கனிவிரவு விதயங்கள் குழைவாகக்
கலவிதனி லுருமின்ப வலையிலலை படுகின்ற
கவலைகெட நினதன்பு பெறுவேனோ
அலைசெறியு மெழுசண்ட வுததிவயி றழன்மண்ட
வதிர்வெடிப டவண்ட மிதுமேலோ
ரபயமென நடுகின்ற விமையவருளி யடியுண்ட
வசுரர்பட வுடனின்று பொரும்வேலா
தலையரவு மதிதும்பை யிரநிலவு கமழ்கொன்றை
சடைமுடியி லணிகின்ற பெருமானார்
தருமுருக சுரர்வந்து சரணமலர் தொழுகின்ற
தணிகைமலை யுறைகின்ற பெருமாளே.

---

109. தனத்த தத்தன தனதன தனதன
தனத்த தத்தன தனதன தனதன
தனத்த தத்தன தனதன தனதன—தனதானா.

செனித்த தெத்தனை சிறுமண லளவுடல்
செறித்த தெத்தனை கடலென வுயிர்செய்த [தா
செயித்த தெத்தனை திரைகயலெனபல வதுபோ
செமித்த தெத்தனை மலசுனை யுடல்கிடை
செறித்த தெத்தனை சிறுதன மயல்கொடு [தான்
கெடுத்த தெத்தனைகளுமுயிர்கொடுபோனதனவோ
மனத்தி தெத்தனை யிதுகப டுகள்குடி
இடித்த தெத்தனை யிர்கமத மெனபல [ல்
வடுத்த தெத்தனை யளவில்லதிகர மொழியாம

வருத்த தெத்தனை மசகனை புலையனை
மடைக்கு லத்தனை மதியழி விரகனை
மலர்ப்ப தத்தினி லுருகவு மிணையடி தருவாயே
தனத்த னத்தன தனதன தனதன
திமித்தி மித்திமி திமிதிமி திமிதிமி
தகுக்கு குக்குகு குகுகுகு குகுகுகு தகுதீதோ
தரித்த ரித்தரி ரிரிரிரி ரிரிரிரி
தடுட்டு டுட்டுடு டுடுடுடு டுடுடுடு [டு
டியித்த மத்தள தமருக விருதொலி கடல்போல
சினத்த மர்க்கள செருகளி திருகிய
திறழ்த்தி டக்கரி யசுரர்கள் பரிசேல [வ
தெரித்தி டக்கழு கரிதின நிணமிசை பெருமாவே
செழித்த வுத்தமர் சிவசிவ சரணென
வொழித்த வற்புத மலர்கொடு பணிய
திருத்த ணிப்பதி குறமகள் மருவிய பெருமாளே.

---

110. தனதனத்தன தனதனத்தன
தனதனத்தன — தனதான.

மலைமுலைச்சியர் கயல்விழிச்சியர்
மதிமுகத்தியர் அழகான
மயிலனடைச்சியர் குயின்மொழிச்சியர்
மனதுருக்கியர் அணைமீதே
கலைநெகிழ்த்திய லுறவணைத்திடு
கல்வியுற்றவர் பிணிதீரக்
கபடனைக்குண வசடனைப்புகல்
கதியில்வைப்பது பொருளாலே
குலகிரிக்குல முருவவிட்டமர்
குலவுசித்திர முனைவேலா
சுரர்பெற்றிடு சிறுமியைப்புணர்
குமரசற்குண மயில்வீரா

கலமதிற்புகழ் அமரருக்கிடர்
  களைபகுற்றிய வருளாளா
கருதிரைக்கெழு மலர்மிகுத்திடு
  கணிமலைக்குயர் பெருமானே.

---

111 தனன தானன தனதன தனதன
  தனன தானன தனதன தனதன
  தனன தானன தனதன தனதன — தனதான.

கிரிபிளேர்வளர் முலைவிலை பகிவிடு
  கபடநாடக முயல்பவ ரசடிகள்
  கெடுதியாளர்க ளிடமுடை யுடலினர் விரகாலே
கிளரேவசைச யணைபிசை தழுவிகள்
  அமுதநாறிய வெளிதுமென் வசனிகள் [லே
  கிடையின்மேன் மனமுருக்கிபடிறுகள்பொருளா
பரிவிலாமயல் கொடுசமர் புரிபவர்
  அதிகமாயொரு பொருள்தரு பவரொடு
  பழையபேரென விதமுற வணைபவர் விழியாலே
பகழ்போல்விடு வினைகவர் திருடிகள்
  தலைமெயுறுவகை புருகதி பெறும்வகை
  பகரமாமயின் மிசைவர நினைவது மொருநாளே
அரியராதியர் மலரய னிமையவர்
  நிலைபெறுதிடர் படவுடன் முழுகிய
  வசுரர்தாவிற வயில்விடு மறுமுக விளையோனே
அரிபகானக முறைகுற மாளது
  கணவனுகிய வறிவுள விதரண
  வமரர்நாயக சரவண பவதிற லுடையோனே
தருமநீதியர் சதுர்வித மறையுளர்
  தருவுருக்கிலை பெறுதவ முடையவர்
  தளர்விலாமன முடையவ ரறிவினர் பராசச்
சகலலோகமு முடையவர் நினைபவர்
  பரவுதாமரை மலரடி யினிதுறு
  தணிகைமாமலை மணிமுடி யழகிய பெருமானே.

112. தனதத்தந்தனதத் தனதத்தந்தனதத்
தனதத்தந்தனதத்—தனதான.

பொருவிக்கந்தொடரச் செருவிக்கந்தொடுமிப்
புதுமைப்புண்டரிகக் கணையாலே
புளகக்கொங்கையிடத் திளகிக்கொங்கையனற்
பொழியத்தென்றனல்கக் குதலாலே
தெருவிற்பெண்கள்மிசைச் சருவிச்சலலடயிடத்
திரியத்திங்களில்தீப் புனலாலே
செயலற் றிங்கணையற் பியலற்றஞ்சிமிகத்
தெரிவைக்குன்குரவைத் தரவேணும்
அருவிக்குன்றடையப் பரவிச்செந்தினைவித்
தருமைக்குன்றவருக் கெளியோனே
அசுரர்க்கங்கியிலிட் டமரர்க்கண்டமளித்
தயில்கைக்கொண்டதிறற் குமரேசா
தருவைக்கும்பதியிற் றிருவைச்சென்றணுகித்
தழுவிக்கொண்டபுயத் திருமார்பா
தரளச்சங்குலயற் றிரளத்தங்குதிருத்
தணிகைச்செங்கழனிப் பெருமாளே.

---

113. தனதத்ததனத் தனதத்ததனத்
தனதத்ததனத்—தனதான.

தகைமைத்தனியிற் பகைகற்றதுகைத்
தனுமுட்டவளைப் பதறாலே
தரளத்திரளிற் புரளக்கரளத்
தமரத்திமிரக் கடலாலே
யுகைமுற்றிகைமுற் றிதெனப்பகல்புக்
கொளிமட்குமிமைப் பொழுதாலே
யுரையற்றுணர்வற் றுயிரெய்த்தகொடிக்
குழையுற்றணையத் தாவேணும்
திகைபற்றுமுகக் கமலத்தனைமுற்
சிறையிட்டபதத் திறல்வீரா

திகழ்கற்பகமிட் டவனுக்ககனத்
திருவுக்குருகிக் குழைமார்பா
பகல்கக்கிரணப் பருணைச்சடிலப்
பரமர்க்கொருசொற் பகர்வோனே
பழனப்பொழில்சுற் றுதிருத்தணிகைப்
பதியிற்குமரப் பெருமாளே.

---

114. தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத்—தனதான.

கிரிமொழிக் கிறுதரைப் பொறிவழிச் செறிஞராக்
செகிகிறப் புறவிழிக் கிறபார்வைக்
கெடிமடைக் குருடரைக் கிருடரைச் சமயிகர்க்
கிடையவத் தெரிதரற் றறிவது
மதிதலற் றறைகலர் றமர்தலுற் றயுறதற்
றரவெனக் கிழிதருக் கடலூடே
மயிர்க்குலர் றமர்தலுஞ் றழ்தலுற் றழிதலுற்
றடியிணைக் கணுகிடப் பெறுவேனோ
வெற்றிவிடைச் செழியன்வெப்பொழி தரப்பொடியி
னிட், பொரிதலைச் சமணரைத் தனைபெரும்
பொடிபடச் சிவமணப் பொடிபரப் பியதிருப்
புகலியிற் கவுணியப் புலவோனே
தரிவனைக் குறைகைப் பொறியெழப் புரமெரித்
தவர்திருப் புதல்வநற் சுனைமேவுந்
தனிமனைக் குவளைநிக் கமலாக் கருசெருத்
தணிமலைச் சரவணப் பெருமாளே.

---

115. தனத்தனத் தனத்தனத்
தனத்தனத் தனத்தனத்
தனத்தனத் தனத்தனத்—தனதான.

தனத்திறப் பணைத்தபொற் குழைப்புயத் தனைக்கிரிக்
கனத்தையத் தியொத்துமொய்த் தமைக் குழலார்தங்

கருத்தமைக்கயற்கணிற் கருத்துவைத்தெனுற்றனைக்
கடப்பநிக் கடுத்துநிற் கறியாதே
யினிப்பிணக்கணைத்துமெய்த் திருப்பெனத்துருத்தி
கைத், திசைத்தசுக் கிலப்பசுத் தசைதோலி
லெடுத்தபொய்ச்சடத்தினைப்பொருக்குமிப்பிறப்பறு
த், தெனக்குநித் தமுத்தியைத் தாவேனும்
பணைத்தறச் சினத்திபத் தினைத்துரத் தாக்கனைப்
பயத்தினிற் படப்படப் பொருமேலா
பருப்பதச் செருக்கறுத் துளைக்குமுட் பதத்தினைப்
படைத்தகுக் கிடக்கொடிக குமரேசா
தினைப்புனப்பொருப்பகத்தினிற் குறக்கருத்திடைச்
செருக்குறத் திருப்பயத் தனைவோனே
திருப்புறப் புறத்தியிற் றிருக்கசற் றுநித்திலத்
திருத்திசைத் திருத்தணிப் பெருமானே.

---

116. தனதனன தான தனதனன தான
தனதனன தான — தனதான.

உடையவர்களேவ ரெவர்களெனநாடி
யுளநெகிழவாசு கவிபாடி
வுமதுபுகழ்மேரு கிரியளவுமான
தெனவரமுமான மொழிபேசி
நடைபழகிமீள்வ ரினியவர்கள்நாளை
நடவுமெனநாடி முகம்வேறாய்
நலமையுளுமேன்மை யருணவொளிவீசும்
நளினவிருபாத மருள்வாயே
விடைகொளுவுபாகர் விமலர்திரிசூலர்
விகிர்தர்பரயோகர் நிலவுடே
விளவுசிறுபூளை நகுதலையொடாறு
விடவரவுசூழு மதியாச்

சடையிறைவர்காண வுமைமகிழஞான
தளர்நடையிடாமுன் வருவோனே
தடமலருநீல மலர்சுனையனாதி
தணிகைமலைமேவு பெருமானே.

---

117. தாந்தனதந்த தனத்த தனத்தன
தாந்தனதந்த தனத்த தனத்தன
தாந்தனதந்த தனத்த தனத்தன — தனதான

கூந்தலவிழ்த்து முடிக்கு மினுக்கிகள்
பாய்ந்தவிழிக்குழை யிட்டு மிரட்டிகள்
கோரணைபடைத்தபொழிச்சி பாத்தையர் புடமிதே
கோங்குபடைத்த தனத்தை யழுத்தியர்
வாஞ்சையுறத்தழு விச்சிலு கிட்டவர்
கூன்பிறையொத்த நகக்குறி வைப்பவர் பலகாலும்

ஈந்தபொருட்பெற விச்சை யுரைப்பவர்
ஆந்துணையுற்றழு கைக்குர லிட்டவர்
ஈங்கிசையற்ற வலக்குண மட்டையர் பொருள்திரில்

ஏங்கியிடைக்கடை யிற்றனி வைப்பவர்
பாங்ககலக்கரு ணைக்கழல் பெற்றிட
ஈந்திலையெப்படி நற்கதி யுற்றிட வருள்வாயே

காந்தண்மலர்த்தொடை யிட்டெதிர்விட்டொரு
வேந்துகுராக்கர ணத்தொடு மத்திரள்
காண்டிபவச்சுத னுத்தம சற்குணன் மருகோனே

சாங்குதமிக்கம தக்கொடி வெற்றியில்
வாங்கியமுக்கனி சர்க்கரை முற்றிய
காண்கனிபொக்கும தக்கரி மெச்சிய விளையோனே

தேங்குதிவித்தென குற்றடி வெற்றிலை
வேங்கைமரத்தொழி லைக்கொடு நிற்பவ
தேன்கொசிலைப்புண ரப்புனமுற்றுறை வரவானத்

நீண்டுகொழுந்திர ளூற்றறது ஆற்றிடு
வேங்கைதனிற்குவ ளேச்சுனை சுற்றலர் [னே
சேர்ந்ததிருத்தணி கைப்பதி வெற்புறை பெருமா

திருச்செந்தூர்.

118. தனனதனந் தனத்த தனனதனந் தனத்த
தனனதனந் தனத்த—தனதான.

மொழியமுதங் கறுத்து மகாவினங் கலக்கு
முடியலைநீங் காற்று கடலாலே
முதிரவிடம் பரப்பி வடவைமுகந் தெறிக்கு
முழுவியெழுந் திருக்கு நிலவாலே
மழையளகந் தரித்த கொடியமதன் சினத்து
பரணிசெங்கை பற்றி யழியாமுன்
மரகததுரங்க வெற்றி விகடவுதங்கள் சித்ர
மயிலினில்வந்து முகந் தருவாயே
மழகியெனுங் குறத்தி புழுகமர்சிந் தாக்கி
மருந்தனம் புணர்தக திருமார்பா
அழகியசெந் திலுக்கு மதுரைவளம் பதிக்கு
மமரர்புரந் தனக்கு மிறையோனே
எழுபுவனம் பிழைக்க வசுரர்கிளைந் தெறிசுக
விருசயிலைத் தொளைந்த கதிர்வேலா
இரவிகலந் தரத்த ரரியமர்பங் கயத்த
ரிமையபயந் தவிர்த்த பெருமானே.

---

119. தானத்தானன தானத்தானன
தானத்தானன—தந்ததான.

சேமக்கோமள பாதத்தாமரை
சேர்தற்கோதும வந்தவேதா
நீதத்தேயவி ரோதத்தேகுண
சீலத்தேமிக வன்புறுதே

காமக்ரோதமு லோபத்தேசவி
காரத்தேயழி கின்றமாய
காயத்தேபசு பாசத்தேசிலர்
காமுற்றேயும தெல்கொலோதா
ஷேமிச்சூவொடு மேருத்தூளெழ
நீளக்காளபு யங்கால
நீலக்ரீபக லாபத்தேர்விடு
நீபச்சேவக செந்தில்வேலே
டோமத்திவழு வார்கட்கோர்சிவ
லோகத்தேவரு மங்கைபாகி
ரோகத்தாருப தேசத்தேசிக
வூமைத்தேவர்க டம்பிரானே.

---

120. தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத்—தனதான.

அந்தகன் வருந்தினம் பிறகிடச்
சந்தத முவந்துசென் றரிவையர்க்
கன்புரு மசங்கதந் தவிரமுக் குணமாள
வந்திபக லென்றிரண் டையுமொழித்
திந்திரி யசஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்
செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத் தணியாத
சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர வென்றுநின் றரிசனைப் படுவேனோ
கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெறவரக் கருமாள

குன்றிடி யவம்பொனின் றிருவரைக்
கிங்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்துகன் குழைகளிற் ப்ரபைவீசத்
தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான
சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருந்தொறுந் தனிநடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே.

---

121. தனத்தந்தக் தனத்தந்தக்
தனத்தந்தக் தனத்தந்தக்
தனத்தந்தந் தனத்தந்தந்—தனதான.

கருப்பந்தங் கிரத்தம்பொங்
கரைப்புண்கொண் டுறுக்கும்பெண்
களைக்கண்கொண் டழைக்குஞ்சென் றலரோடே
அலைப்புண்டுஞ் சிலுப்புண்டும்
பிணிப்புண்டுந் துவக்குண்டுங்
களிப்புண்டுந் தியக்குண்டுந் தடுமாறிச்
செருத்தண்டந் தரித்தண்டம்
புயத்தண்டங் களைக்கொண்டுஞ்
செயிர்த்தஞ்சுஞ் செகத்தஞ்சுங் கொடுமாயத்
தியக்கங்கொண் டயக்கொண்டன்
புகழ்ப்பங்கம் பிறப்பங்கஞ்
சிதைத்துந்தன் பதத்தின்பந் தருவாயே
யருக்கன்சஞ் சரிக்குந்தெண்
டிரைக்கண்சென் றரக்கன்பண்
டணைத்தும்பொன் றிடக்கன்றுங் கதிர்வேலா

வரிக்குஞ்சங் களிக்குஞ்சன்
பகக்கொம்பென் டிசைக்குங்கொங்
களிக்குஞ்செந் திவிற்றங்குங் குமரேசா

புரக்குஞ்சங் கரிக்குஞ்சங்
கரக்குஞ்சம் புவுக்கும்பின்
புவிக்குந்தாண் டனைத்தந்தஞ் சமராஜ

புனக்குன்றந் தினைக்குஞ்செச்
சினைப்பைம்பொன் புனக்கொம்பின்
புயத்தின்கொங் கையிற்றங்கும் பெருமாளே.

---

122 தானதான தனந்தன தந்தன
தானதான தனந்தன தந்தன
தானதான தனந்தன தந்தன — தனதான

மாயவாடை திமிர்த்திடு கொங்கையின்
மூடுசேலை திறந்தது மழுங்கிகள்
வாசல்தோறு நடக்கிறுங்கிகள் பழையோர்மேல்
வாலநேச நினைந்தழு வம்பிக
ளாசைநோய்கொள மருந்திடு சண்டிகள்
வாரபேர்பொருள் கண்டு விரும்பிக ளெவரோடும்
நேயமேகவி கொண்டுசொல் மிண்டிகள்
காசிலாதவர் தங்களை யன்புற
நீதிபோல நெகிழ்த்த பாவிக ளவர்தாய்மார்
நீசர்கூட முயங்கிய முண்டைகள்
பாரிலூழக ருண்டிடு தொண்டிகள்
நீசரோடு பிணங்கு கடம்பிக ளுறவாமோ
பாயுமாமத தந்தி முகங்கொடு
மாதிபாரத மென்ற பெருங்கதை
பாரமேருவி னன்று வரைந்தவ னிளையோனே

பாவினேர்மொழி வஞ்சி யிளம்பிடி
தேவயானை பெருந்தன குங்கும
பாரமான்மத சந்தன முங்கிய மணிமார்ப

சீயமாயுரு வங்கொடு வந்தசு
ரேசன்மார்பை யிடந்து பசுங்குடர்
சேரவாரி யணிந்த நெடும்புயன் மருகோனே

தேனுலாவு கடம்ப மணிந்தகி
ரீடசேகர சந்திரர் மைந்தசொல்
தேவர்நாயக செந்திலு வந்தருள் பெருமாளே.

---

123. தனனதந்ததந்த தனனதந்ததந்த
தனனதந்ததந்த—தனதான.

முலைமுகந்திமிர்ந்த கலவையுந்துலங்கு
முறுவலுங்கனிந்த கனிவாயு

முருகவிழ்ந்துதிர்ந்த குவளையுஞ்சரிந்த
முகிலுமின்பசிங்கி விழிவேலுஞ்

சிலைமுகங்கலந்த திலதமுங்குளிர்ந்த
திருமுகந்ததும்பு குறுவேர்வுந்

தெரியவந்துநின்ற மகளிர்பின்சுழன்று
செயலழிந்துழன்று விடுவேனோ

மலைமுகஞ்சுமந்த புலவர்செஞ்சொல்கண்டு
வழிதிறந்தசெங்கை வடிவேலா

வளர்புனம்பலன்ற குறமடந்தைகொங்கை
மணிவடம்புதைந்த புயவேளே

உலைமுகந்துவந்த சினைமுதிர்ந்தசங்கை
யலறிநொந்துகஞ்ச மலர்மீதே

யளிகலந்திரங்கி யிசையுடன்றுயின்ற
வரியசெந்தில்வந்த பெருமாளே.

---

124. தனதன தனன தனந்தந்தத்
தனதன தனன தனந்தந்தத்
தனதன தனன தனந்தந்தத்—தனதான

பரிமளகளப சுகந்தச்சந்தத் தனமானார்
படையமர்படையென வஞ்சிக்குங்கட் கடையாலே
வரியளிநிரைமுரல் கொங்குக்கங்குற் குழலாலே
மருவிடுமருளனை யின்புற்றன்புற் றருள்வாயே
வரிசிறுமருக கடம்பத்துங்கத் திருமார்பா
வலிதிகுதிகுவென வெம்பிக்கண்டித் தெறிவேலா
திரிபுரதகனரும் வந்திக்குஞ்சற் குருநாதா
செயசெயசெயசெய செந்திற்கந்தப் பெருமானே.

---

125. தந்தத்தன தன தந்தத்தன தன
தந்தத்தன தன—தனதான.

வஞ்சத்துடனொரு நெஞ்சிற்பலநினை
வஞ்சிக்கொடியிடை மடவாரும்
வந்திப்புதல்வரும் வந்திக்கிளையுடன்
மன்றற்குதவிய வகைகூடா
வஞ்சக்கலிபடு பஞ்சிப்பழுவுட
லங்கிக்கிறையென வடன்மேவா
வன்றிப்பவமுறும் வென்றிச்சமன்வரு
மன்றைக்குனதடி தரவேணும்
அஞ்சப்பிரமனை யஞ்சத்துயர்செய்து
களறைச்சிறையிடு மயில்வீரா
அண்டத்தொளிவிட மண்டர்க்கருளிய
கந்தப்புளகித முருகோனே
செஞ்சொற்புலவர்க ளின்சொற்பகர்வல
சிந்தைக்குதவிய குமரேசா
செம்பொற்கொடிமுடி குன்றப்பொடிசெய்து
செந்திற்பதிவரு பெருமாளே.

---

126. தந்ததன தந்ததந்த தந்ததன தந்ததந்த
தந்ததன தந்ததந்த—தனதானா.

கண்டுமொழி கொம்புகொங்கை
வஞ்சியிடை யம்புநஞ்சு
கண்கள்குழல் கொண்டலென்று பலகாலுங்
கண்டுளம் வருந்திநின்று
மங்கையர் வசம்புரிந்து
கங்குல்பக லென்றிரண்டு பொழுதாலே
பண்டைவினை கொன்றுழன்று
வெந்துவிழு கின்றனண்டு
பங்கய பதங்கள்தந்து புகழோதும்
பண்புடைய சிந்தையன்பர்
தங்களி னுடன்கலந்து
பண்புபெற அஞ்சலஞ்ச லெனவாராய்
வண்டுபடு கின்றதொங்கல்
கொண்டற நெருங்கியிண்டை
வம்பினை யடர்ந்துசந்தின் மிகமூழ்கி
வஞ்சிலை முனிந்துகொங்கை
மென்குற மடந்தைசெங்கை
வந்தழ குடன்கலந்த மணிமார்பா
திண்டிறல் புனைந்தவண்டர்
தங்களப யங்கள்கண்டு
செஞ்சர மணிந்ததுங்க மயின்மீதே
சென்றசுர ரஞ்சவென்று
குன்றினின் மணம்புணர்ந்து
செந்திநகர் வந்திருந்த பெருமாளே.

127. தானதனதான தானதனதந்த
தானதனதான தானதனதந்த
தானதனதான தானதனதந்த—தனதானா.

மூளும்வினைசேர மேல்கொண்டிடாவைந்து
பூதம்மொடுங்காத மாயங்கடாநெஞ்சின்
மோடெகிறியெழு மோகமிஞ்சியேவந்து மதிபாவ
மோகவன்னஞான போதஞ்செய்தேயண்டர்
தேடவரிதாய தேயங்களாகின்ற
மூலபரயோக மேல்கொண்டிடாநின்ற தளதாகி
காளும்தியோக சால்கொண்டுமாவண்ட
வாதியனலூடு போய்வென்றிவாகின்க
றுமமதின்மீதிலூருங்கலாவின்ப வமுதூறல்
சோரும்பதம்பீது போய்நின்றவானந்த
மேல்வெளியேறி நானென்றிநீயன்றி
நாடியவன்வேறுதானின்றிவாழ்கின்ற தொருநாளே
காளவிடமூணி மாதங்கிவேதஞ்சொல்
பேதைநெடுநீலி பாதங்களால்வந்த
காலன்விழமோது சாமுண்டிபாரம்பொ டனல்வாயு
காதிமுதிர்வான மேதங்கிவாழ்பஞ்சி
யாடல்விடையேறி பாகங்குலாமங்கை
காளிநடமாடி காளன்பர்தாம்வந்து தொழுமாது
வாளமுழுதாளு வேரதண்டுமாய்தங்கு
சோதிமணிமார்ப மாலின்மிருளின்சொல் [னே
வாழுமுமைமாதராள்மைந்தனே யெந்தையினையோ
மாதலடியார்கள் வாழ்கின்றவூர்சென்று
தேடிவிளையாடி யேங்கிநின்று
வாழுமயில்வீரனே செந்தில்வாழ்கின்ற பெருமாளே.

---

128. தந்தன தானன தானன தந்தன தானன தானன
தந்தன தானன தானன—தனதான.

தோம்பனை யார்கூறுமோ திரு
கண்களி லாமோது சீதள
குங்கும பாடீரபூஷணை கேமேவு

கொங்கையி னீராவிமேல்வளர்
    செங்கழு நீர்மாலைசூடிய
    கொண்டையி லாதாரசோலையில் மருளாதே
யும்பர்சு வாமீநமோநம
    வெம்பெரு மானேநமோவிய
    வொண்கொடி மோகாநமோநம வெனநாளு
முன்புகழ் வாய்பாடிநானினி
    யன்புட னாசாரபூசைசெய்
    துய்ந்திட வீணாள்படாதருள் புரிவாயே
பம்பர மேபோலவாடிய
    சங்கரி வேதாளநாயகி
    பங்கய சீபாதநூபுரி காருணி
பங்கமி லாநீலிமோடிப
    யங்கரி மாகாளியோகினி
    பண்டுசு ராபானசூரனொ டெதிர்போர்கள்
டெம்புதல் வாவாழிவாழியெ
    னும்படி வீறானவேல்தர
    வென்றுமு ளானேமநோகர வயலூரா
வின்சொல் விசாகாக்ருபாகர
    செந்திலில் வாழ்வாகியேயடி
    யென்றனை யீடேறவாழ்வருள் பெருமானே.

---

129. தந்ததானன தனதன தனதன
    தந்ததானன தனதன தனதன
    தந்ததானன தனதன தனதன—தனதான.

    பஞ்சபாதக முறுபிறை யெயிறெரி
குஞ்சிகூர்விட மதர்விழி பலமிகு
பங்கவாண்முக முடுகிய நெடுகிய திரிசூலம்
    பஞ்சபாசமு மருவிய காதல
மிஞ்சிநீடிய கருமுகி லுருவொடு
பண்பிலாதொரு பகடது முதுகினில் எமராசன்

அஞ்சவேவரு மவசர மதிலொரு
நெஞ்சமாயிவன் வழிவழி யருள்பெறு
மன்பினனுனை நாடிபுக முடிமைத னெதிரேநீ
வண்டகோளகை வெடிபட விடிபட
வெண்டிசாமுக மிடிதர நடமிடு
மந்தமாருத மயில்மிசை நொடியினில் வருவாயே
மஞ்சுபோல்வள ரளகமு மிளகிய
ரஞ்சிதாம்ருத வசனமு நிலவென
வக்த்ராம்புய முறுவலு மிருகுழை யவனோடு
மன்றநீலமு மழகிய நெடிகிய
குன்றவேடுவர் மடமக ளிளமுலை
மந்தராசல மிசைதுயி லழகிய மணவாளா
செஞ்சொல்மாதிசை வடதிசை குடதிசை
விஞ்சுகீழ்திசை சகலமு மிகல்செய்து
திங்கள்வேணிய ரடியிணை தொழுதுயர் மகமேரு
சென்றுமோதினை வாசரு ளதிபதி
தொண்டனாகியும் வழிவழி நெறிபெறு
செந்தின்மாநக ரினிதுறை யமரர்கள் பெருமாளே.

---

130. தந்தனதனனதன தத்தான
தந்தனதனனதன தத்தான
தந்தனதனனதன தத்தான—தனதானு.

சந்தனசவாதுநிறை கர்ப்பூர
குங்குமபடீரவிரை கஸ்தூரி
தண்புழுகு மாவுகள பச்சீத வெகுவாகச்
சண்பககலாரவகு ளத்தாம
அம்புதுகிலாரவயி ரக்கோவை
தாங்கியகிராதர விஸ்தார பரிதான
மந்த்ரமதனாதன மிக்காசை
கொண்டுபொருடேடுமதி நிஷ்டூர
வஞ்சகவிசாரவித யப்பூவை யனையார்கள்

வந்துதருமாயவிர கப்பார்வை
யம்பிலுளம்வாடுமேறி வற்றேனை
வந்தடிமையாளவினி யெப்போது நினைவாயோ
யிந்த்ரபுரிகாவலனமுதன் மைக்கார
சம்ப்ரமமயூரதுர கக்கார
வென்றுமகலாதவிளை மைக்கார குறமாதி
னின்பவனுபோகசர சக்கார
வந்தவசுரேசர்கல கக்கார
வெங்களுமைசேவிணரு மைக்கார மிருபாவின்
செந்தமிழ்ச்சொல்கானுகவி தைக்கார
குன்றெறியும்வேலின்வலி மைக்கார
செஞ்சொலடியார்களெளி மைக்கார வெழின்மேவு
திங்கண்முடிநாதர்சமை யக்கார
மந்த்ரவுபதேசமகி மைக்கார
செந்திநகர்வாழுமரு மைத்தேவர் பெருமானே.

131. தந்ததனதான தானத்தான
தந்ததனதான தானத்தான
தந்ததனதான தானத்தான — தனதான.

முந்துதமிழ்மாலை கூடக்கோடி
சந்தமொடுநீடு பாடிப்பாடி
மொய்ம்பர்மனைவாசல் தேடித்தேடி யுழையாதே
முந்துவினையேவ ராமற்போக
மங்கையர்கள்காதல் தூரத்தேக
முந்தடிமையேனை யாளத்தானென் முனமீதே
திந்திமிதிதோதி தீதித்தீதி
தந்ததனதான தானத்தான
செஞ்செணகுசேகு தாளத்தோடு நடமாடுஞ்
செஞ்சிறியகால்வி சாலத்தோகை
துங்கவனுகூல பார்வைத்தீர
செம்பொன்மயின்மீதி லேயெப்போது வருவாயே

பந்தமறைவேள்வி காவற்கார
செந்தமிழ்சொல்பாவின் மாலைக்கார
வண்டருபகார சேவற்கார முடிமேலே
அஞ்சலிசெய்வோர்கள் நேயக்கார
குன்றுருவ வேவும் வேலைக்கார
அந்தம்வெகுவான ரூபக்கார எழிலான
சிந்துரமின்மேவு போகக்கார
விந்தைகுறமாது வேளைக்கார
செஞ்சொலடியார்கள் வாரக்கார எதிரான
செஞ்சமரைமாயு மாயக்கார
துங்கரணசூரர் சூறைக்கார
செந்திநகர்வாழு மாண்மைக்காரப் பெருமாளே.

132, தனதனன தாந்தனந்தத்
தனதனன தாந்தனந்தத்
தனதனன தாந்தனந்தத் — தனதான.

தகரவிரை பூண்டவிழ்ந்தக்
குழலியர்கள் தோய்ந்தவின்பத்
தனருமிடை யேந்துதங்கத் தனமாதர்
தமையமளிதில் வாஞ்சைபொங்கக்
கலவியொடு சேர்ந்துமந்த்ரச்
சமயசில நீங்கியிந்தப் படிகாணும்
புகலரிய தாந்திரிசங்கத்
தமிழ்ப்பனுவ லாய்ந்துகொஞ்சிப்
புலவுதனில் வாழ்ந்தவஞ்சத் துளமூடர்
புனிதமிலி மாந்தர்தங்கட்
புகழுமொளி யென்றனுன்பொற்
புளகமலர்பூண்டுவந்தித் திடுவேனோ
தகுடதகு தாந்திமிந்தத்
திகுடதிகு தீந்திமிந்தித்
திகுகனக தாங்கணங்கத் தனதான

தனதனன தாந்தனந்தத்
தெனநடன மான்றதுங்கத்
தனிமயிலை யூர்ந்தசந்தத் திருமார்பா
சிகையசுரர் மாண்டழுங்கத்
திறயியிலை வாங்குசங்கத்
திமையவரை யீன்றமங்கைக் கொருபாலா
திகழ்வயிர மேந்துகொங்கைக்
குறவனிதை காந்தசந்த்ராச்
சிகரமுகி லோங்குசெந்திற் பெருமாளே.

133. தானதந்தன தானதானன
தானதந்தன தானதானன
தானதந்தன தானதானன—தனதானா

தோடுமென்குழை யூடேபோரிடு
வாணெடுங்கயல் போலேயாருயிர்
சூறைகொண்டிடு வேல்போலேதொடர் விழிமாதர்
சூதகந்தனி லேமாலாயவர்
ஏதமென்றறி யாதேயூழ்வினை
சூழும்வெந்துய ராலேதானுயிர் சுழலாதே
யாடும்வெம்பண மார்நீள்கார
ஆறுகண்டிட மேல்வீழ்தேர்கையி
லாரும்வன்கும ரேசாவாருறி புயவேளே
யாருமின்னரு ளாலேதாடொழ
வாண்மைதந்தருள் வாழ்வேதாழ்வற
வாதிதந்தவ னாயேன்வாழ்வுற வருள்வாயே
யோடும்வெங்கதி ரோடேசோமனும்
ஊழியண்டமு லோகாலோகமை
யூருமிந்திர னாதேவரு மடிபேண
ஆழிடம்புயன் வேலாவாலய
மூடுதங்கிய மாலாயாரண
வேதவெண்டிசை சூர்மார்பூடற விடும்வேலா

வேடுகொண்டுள வேடாவேடைய
வேழம்வெம்புலி போலேவேடர்கள்
மேவுதண்புன மீதேமாலொடு மிதண்மேவி
மேகமென்குழ லாய்நீவாவென
மேவுகந்தசு வாமீமாதமிழ்
வீறுசெந்திலின் மீதேமேவிய பெருமாளே.

---

134. தந்ததனன தனனா தனனதன
தந்ததனன தனனா தனனதன
தந்ததனன தனனா தனனதன — தனதான

தொந்திசரிய மயிரே வெளிறநிரை
தந்தமசைய வுடலே வளைவிதனொடு
தொங்கவொருகை தடிமேல் வரமகளிர் நகையாடி
தொண்டுகிழவ னிவனா ரெனவிருமல்
கிண்கிணெனமு னுரையே குழறவிழி
துஞ்சுகுருடு படவே செவிடுபடு செவியாகி
வந்தபிணியு மதிலே மிடையுமொரு
பண்டிதனுமெ யுறுவே தனையுமிள
மைந்தருடைமை கடனே தெனமுடுகு துயர்மேவி
மங்கையழுது விழவே யமபடர்கள்
நின்றுசருவ மலமே யொழுகவுயிர்
மங்குபொழுது கடிதே மயிலின்மிசை வருவாயே
எந்தைவருக ரகுநா யகவருக
மைந்தவருக மகனே யினிவருக
என்கண்வருக வெனதா ருயிர்வருக வபிராம
இங்குவருக வரசே வருகமுலை
யுண்கவருக மலர்சூ டுகவருக
என்றுபரிவி னொடுகோ சலைபுகல வருமாயன்
சிந்தைமகிழு மருகா குறவரிள
வஞ்சிமருவு மழகா வமரர்சிறை
சிந்தவசுரர் கிளைவே ரொடுமடிய வடுதீர

திங்களரவு நதிசூ டியபரமர்
தந்தகுமா வலியே கரைபொருத
செந்திநகரி லினிதே மருவிவளா பெருமானே.

---

135. தனத்தந்தத் தனத்தந்தத்
தனத்தந்தத் தனத்தந்தத்
தனத்தந்தத் தனத்தந்தத் — தனதான.

பருத்தந்தத் தினைத்தந்திட்
டிருங்குங்கச் சடர்த்துந்திப்
பரிக்கும்பொற் ப்ரபைக்குன்றத் தனமாதர்
பரிக்குந்தும் சரக்கொங்கத்
தினைத்தங்குற் பலப்பண்ணைப்
பறக்குஞ்சக் கரித்தஞ்சத் திலையேருக்
தூரச்செங்கட் கடைக்கொன்றிப்
பெருத்தன்புற் றினித்தங்குத்
துணிக்கும்புத் திமைச்சங்கித் தறியேனைத்
துணைச்செம்பொற் பதத்தின்புற்
றெணக்கென்றப் பொருட்டங்கத்
தொடுக்குஞ்சொற் றமிழ்த்தந்தப் படியாள்வாய்
தருத்தங்கிப் பலத்தண்டத்
தினைக்கொண்டச் சுரர்க்கஞ்சத்
தடர்த்துன்பத் தினைத்தந்திட் டெதிர்சூரன்
சமர்க்கெஞ்சிப் படித்துஞ்சக்
கதிர்த்துங்கத் தயிற்கொண்டெடத்
தலத்தும்பொற் பதிக்கன்புற் றருள்வோனே
திருக்கஞ்சத் திலைக்கண்டித்
துராக்குங்கட் டகட்டுஞ்சிற்
சிவக்கன்றப் பொருட்கொஞ்சிப் பகர்வோனே
செயத்துங்கக் கொடைத்துங்கத்
திருத்தங்கித் தரிக்கும்பொற்
றிருச்செந்திற் பதிக்கந்தப் பெருமானே.

136. தந்தா தந்தா தந்தா தந்தா
தந்தா தந்தத்—தனதான.

வெங்கா ளம்பா ணஞ்சேர் கண்பால்
மென்பா கஞ்சொற் குயின்மாலை
மின்சே சந்தா னென்றே கொண்டா
ரென்றே வொன்றைப் பொருள்தேடி
வங்கா ளஞ்சோ ழஞ்சீ னம்போய்
வம்பே துன்பப் படலாமோ
வன்கா லன்றூ தெம்பால் வந்தால்
வந்தே யந்தப் பொழுதாள்வாய்
கொங்கார் பைந்தே னுண்டே வண்டார்
குன்றாள் கொங்கைக் குரியோனே
குன்றோ டஞ்சூ ரன்பா ருந்தாள்
குன்றா மண்டப் பொருவோனே
கங்கா ளஞ்சேர் மொய்ம்பா ரன்பார்
கன்றே யும்பர்க் கொருநாதா
கம்பூர் சிந்தூ ரன்பால் வந்தாய்
கந்தா செந்திற் பெருமாளே.

---

137. தனதான தந்த தனதான தந்த
தனதான தந்த—தனதான.

விதிபோலு மந்த விழியாலு மிந்து
நுதலாலு மவ்வென் றிளையோர்தம்
விரிவான சிந்தை யுருவாக நொந்து
விறல்வேறு சிந்தை வினையாலே
விதமாடி யின்ப மதுபோத வுண்டு
விருதாளு மென்று மூளமாத
ரிருளாய துன்ப மருண்மாய வந்து
வெறுமையிர் வதென்று மொழியாதோ

மதிசூடியண்டர் பதிவாழமண்டி
வருமாலமுண்டு மறமாரன்
வடிவாகமைந்து கணையோடுசிந்தும்
வகைநாடுமெந்தை பெருவாழ்வே
யதிமாயமொன்றி வருசூர்பொன்ற
வயில்வேல்கொடன்று பொரும்வீர
வழகானசெம்பொன் மயின்மேலமர்ந்து
வலைவாயுகந்த பெருமாளே.

---

138. தனதானதந்த தனதானதந்த
தனதானதந்த—தனதான.

பிறன்மாரனைந்து மலர்வாளிசிந்த
மிகவானலிந்து வெயில்காய
மிகவாடைவந்து புலவேலையென்ற
வினைமாதர்தந்தம் வசைகூறக்
குறவாணர்குன்றி லுறைபேதைகொண்ட
கொடிதானதுன்ப மயல்தீரக்
குளிர்மாலையின்க ணளிர்மாலைதந்து
குறைதீரவந்து குறுகாதோ
மறிமானுகந்த விறையோன்மகிழ்ந்து
வழிபாடுகந்த மதியாளா
மலைமார்புசிந்த வலைவேலையஞ்ச
வடிவேலையுந்து மதிகோபா
வறிவாலறிந்து னிருதாளிறைஞ்சு
மடியாரிடைஞ்சல் களைவோனே
யழகானசெம்பொன் மயில்மேலமர்ந்து
வலையாயுகந்த பெருமாளே.

139. தனதன தனன தனத்தத்தாதன
தனதன தனன தனத்தத்தாதன
தனதன தனன தனத்தத்தாதன—தந்ததான

இருள்விரி குழலை விரித்துத் தூற்றவு
மிருகிய துகிலை நெகிழ்த்துக் காட்டவு
மிருகடை விழியு முறுக்கிப் பார்க்கவு மைந்தரோடே

யிலைபிள வதனை மடித்துக் கேட்கவு
மறுமொழி பலவு மிசைத்துச் சாற்றவு [டே
மிடையிடை சிறிது நகைத்துக் காட்டவுந் தங்கள்வீ

வருகென வொருசொ லுரைத்துப் பூட்டவும்
விரிமல ரமளி யணைத்துச் சேர்க்கவும்
வருபொரு ளளவி லுருக்கித் தேற்றவு மிந்தையாலே

வளமையு மழகு மழித்துப் போக்கிடு
மொருதலை மருவு புணர்ச்சித் தூர்த்தனை [ளோ
வசைவிட நினது பதத்தைப் போற்றுவ தெக்நா

குருமணி வயிர மளித்துக் கோட்டிய
கழைமட வுருவில வெருத்துத் தோற்றிய
குளிரிசை யருவி கொழித்துத் தூற்றிய மண்டிநீருர்

குழிபடு கலுழி வயிற்றைத் தூர்த்தெழு
திடர்மணல் முழுது மருத்திக் காய்ப்பொதி
குளிர்நிழ லருவி கலக்கிப் பூப்பிணை வண்டலாட

முருகவிழ் திணைக ளுடுத்துக் காய்த்தினை
விளைநவை தனி விருப்பைக் காட்டிய [வே
முகில்முலை யினைய குறத்திக் காட்டடு செந்தில்வாழ்

முனைவின மதியை யெடுத்துச் சாத்திய
சடைமுடி யிறைவர் தமக்குச் சாத்திய [னே
ஞானதயருள் முருக தவத்தைக் காப்பவர் தம்பிரா

140. தந்ததந்த தந்ததந்த தந்ததந்த தந்ததந்த
தந்ததந்த தந்ததந்த—தனதான.

வந்துவந்து முன்றவழ்ந்து
வெஞ்சுகந்த யங்கிநின்று
கொஞ்சிமொஞ்சியென்றழைந்து முந்தைவோடு
மண்டலங்கு லுங்கவந்து
விண்டலம்பி ளந்தெரிந்து
செம்பொன்மண்ட லங்களும்ப யின்றவீடு
கொந்தலைந்து குந்தளைந்து
குங்குமந்த யங்குகொங்கை
வஞ்சிதஞ்ச மென்றவன்கண் மங்குகாலங்
கொங்கடம்பு கொங்குபொங்கு
பைங்கடம்பு தண்டைகொஞ்சு
செஞ்சுவஞ்சு தங்குபங்கு வந்துதாராய்
சந்தடர்ந்தெ ழுந்தரும்பு
மந்தரஞ்செ ழுங்கரும்பு
கந்தரம்பை மந்தரஞ்சொல் செந்தில்வாழ்வே
தண்டநின்க டந்துசென்று
பண்கடங்க டந்தவின்சொல்
திண்புனம்பு குந்துகண்டி றைஞ்சும்வேலா
வந்தகன்க லங்கவந்து
கந்தரங்க லந்துசிந்து
ரஞ்சிறந்து லந்தலம்பு ரிந்தகார்ப
லம்புனம்பு குந்தணைபர்
சம்புகம்பு ரந்தரந்த
ரம்பலங்கு மம்பரெங்கள் தம்பிரானே.

141. தனத்ததந்தன தனதனதந்தத்
தனத்ததந்தன தனதனதந்தத்
தனத்ததந்தன தனதனதந்தத்—தனதான.

உரைத்தசம்ப்ரம வடிவுசராங்கிக்
கழுத்தருஞ்சியும் வெளிறியபஞ்சிட் [டாகி
டெசலித்திடுஞ்செவி டெசவிடனவெங்கட் குரு
புரத்தவெண்பலு கழுவிம்தங்கெட்
டிரைத்தகிண்கிணெ னிருமலெழும்பித் [ண்
கிளைப்புடன்றலை கிறுகிறெனும்பித்தமுமேல்கொ
டரத்தவிஞ்சிய புழுவிலும்விஞ்சப்
பழுத்துளஞ்செயல் பவளவிரும்புக் [ரு
கடுத்தபெண்டிரு மெதிர்பொருநிந்தித் தனேவோ
மகத்தனென்றிட வுணர்வதுகுன்றித்
துடுப்பதுஞ்சில வுளதெனவுங்கட்
டவத்தைவைக் குயிரலம்வருமன்றைக் கருள்வாயே
திரித்திரிக்கிரி ரிரிரிரியென்றிட்
டுடுட்டுடுண்டுடு டுடுடுடுடுண்டிட்
டிகுட்டிகுண்டிகு டிகுடிகுவென்றிட் டடிபீதே
திகுத்திகுத்திகு திகுதிகுவென்றிட்
டிடக்கைதுந்துமி முரசுமுழங்கச்
செருக்களம்புகு நிருதர்தயங்கச் சிலபேய்கள்
தரித்துமண்டையி லுதிரமருந்தத்
திரட்பருந்துகள் குடர்கள்பிடுங்கத்
தருக்குசம்புவ கிணமதுசிந்தப் பொரும்வேலா
தழைச்சிகண்டினி யருளுடனபர்க்
கழைத்திடுக்குடை மயில்வரைசெம்பொற்
றழைத்தசெந்தியி லுறைதருகந்தப் பெருமாளே!

142. தானாதந்தத் தானாதந்தத்
தானாதந்தத்—தனதான.

ஓராதொன்றைப் பாராதந்தத்
தோடேவந்திட் டுயிர்சோரா
ஊடாரன்றற் றார்போல்நின்றெட்
டாமால்தந்திட் டுழன்மாதர்
கூராவன்பிற் சோராநின்றக்
கோயாநின்றுட் டுலையாதே
கோடார்செம்பொற் றோளாய்நின்சொற்
கோடாதென்கைக் கருள்தாராய்
தோராவென்றிப் போராய்மன்றற்
றோளாய்குன்றத் தொளையாடி
சூதாயெண்டிக் கேவாழ்வஞ்சச்
சூழ்மாவஞ்சப் பொரும்வேலா
சேர்கொன்றைத் தார்மார்பொன்றச்
சேவேறெந்தைக் கினியோனே
தேனேயன்பர்க் கோயாவின்சொற்
சேயேசெந்திற் பெருமானே.

திருவதிகை.

143. தனனதனத் தனனதனத் தனனதனத் தனனத [ணத்
தனனதனத் தனனதனத்—தனதான.

பாவுவரிக் கயல்குவிடக் குயில்கிளியொத் துவைபதற
பவளநிறத் ததரம்விளைத் தமுதூறல்
பருகிநிறத் தரளமணிக் களபமுலைக் குவடசையப்
படைமதனக் கலையடவிப் பொருமாதர்
சொரியுமழைகுழல்சரியத் தளர்வுறுசிற் றிடைதுவள
துகிலகலக் க்ருபைவிளைவித் துருகாமுன்

சொரிமலரமட்டறையணைபுக்கிதமதாக்கலவிதனிற்
சுழலுமனக் கவலையொழித் தருள்வாயே
கருகுநிறத் தசுரன்முடித் தலையொருபத்தறமுடுகிக்
கணைதொடுமச் சுதன்மருகக் குமரேசா
கயிலைமலைக் கிழவனிடக் குமரிவிருப் பொடுகளிதக்
கலைநிறையப் பெறும்வரிசைப் புலவோனே
திரள்கமுகிற் றலையிடறிப் பலகதலிக் குலைசிதறிச்
செழுவயனெற் கதிரலையத் திரைமோதித்
திமிதிமெனப் பறையறையப் பெருகுபுனற் கெடிலநதித், திருவதிகைப் பதிமுருகப் பெருமாளே.

தில்லை.

144. தனனதன தனனதந்தத்—தனதான.

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலுநெஞ்சத் தலையாலே
பரமகுரு வருணினைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையையென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவுசங்கப் புலவோனே
சிவனருளு முருகசெம்பொற் கழலோனே
கருணைநெறி புரியுமன்பர்க் கெளியோனே
கனகசபை மருவுகந்தப் பெருமாளே.

திருவாவினன்குடி.

145. தனதான தந்தனத்—தனதான:

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநா னினைந்தருட் பெறுவேனோ

இபமா கன்றனுக் இளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

---

146. தானன தானன தானன தானன
தானன தானன—தனதான.

ஏவினைநேர்விழி மாதரைமேவிய
வேதனை மூடனை நெறிபேணா
வினைவினை யேடெழுதாமுழு
வேழையை மோழையை யகலாநீள்
மாவினைமூடிய நோய்பிணியாளனை
வாய்மையி லாதனை யிகழாதே
மாமணிநூபுர மேவியதாளினை
வாழ்வுற ஈவது மொருநாளே
காவலர்பாடிய பாவிசையாண்மகிழ்
காரத னார்புகல் குறமாதை
காடியகானிடை கூடியசேவக
நாயக மாமயில் வருவோனே
தேவர்கள்நாயக னாகியவிசார்
சேயென வேவரு முருகேசா
தேனுறைசோலையி னீழலிலேதிகழ்
சீரலை வாயுறை பெருமாளே.

---

147. தனத்தந்தன தனத்தந்தன
தனத்தந்தன—தனதான.

தரிக்குங்கலை மரிக்கும்பர
தவிக்குங்கொடி தனைவிழ்

றகைக்குந்தனி திசைக்குஞ்சிர
தமிழ்த்தென்றலி   னுடனேநின்
றெரிக்கும்பிறை யெனப்புண்படு
மெனப்புன்கவி   சிலர்பாடி.
விரக்குஞ்சிலர் திருச்செந்திலை
யுரைத்துய்க்கிட   வறியாரே
யரிக்குஞ்சுரர் பதிக்கும்பிர
மனுக்கும்பரி   புரிசீத
வடிக்குஞ்சடை முடிக்குந்திரு
வரைக்குந்தவ   மிகமேவு
விதிக்கும்பணி தரிக்குங்குடை
வரைக்குங்குரு   பரவாழ்வே
கனக்குந்திற லரக்கன்கிளை
கெடக்கன்றிய   பெருமாளே.

---

* புள்ளிருக்கும் வேளூர்.

148. தானதத்தனத் தானதத்ததன
தானதத்தனத் தானதத்ததன
தானதத்தனத் தானதத்ததன—தனதான.

பாடகச்சிலம் போடுசெச்சைமணி
கோவெனக்கலந் தாடுபொற்சரண
பாவைசித்திரம் போலபட்டுடையி   னிடைநூலார்
பாரவொற்றளங் கோபுரச்சிகர
மாமெனப்படர்ந் தேமலுற்றெழுமிர
பாரகுசத்தரும் போடுசேர்க்கலையின்   மொழிமாதர்
ஏடகக்குலஞ் சோலைமக்குழலொ
டாடவிக்குலம் பாடகத்தெருவி
வேளிபுட்குலம் போலபற்பலசொ   விசையாடி

---

* புள்ளிருக்கும்வேளூரென்பது வைத்தீசுரர்கோவில்

ஏசியிச்சகம் பேசிவெத்திபகம்
வாருமுற்பணந் தாருமிட்டமென
வேணியொத்துலந் தேறவிட்டவர்க ளுறவாமோ

சேடனுக்கசண் டாளரக்கர்குல
மாளவிட்டுகுண் டேழுலக்கடல்கள்
சேரவற்றநின் றுடிவிற்கரமி ரகுதோண்மேற்

சேணிலத்தர்பொன் பூவைவிட்டிருடி
யோர்கள்கட்டியம் பாடவெட்டரசர்
சேசெயொத்துசெந் தாமலரக்கிழவி புகழ்வேலா

நாடகப்புனங் காவலுற்றசுக
மோகனத்திருந் ருதசித்ரவள்ளி
நாயகிக்கிதம் பாடிநித்தமணை புயவேளே

ஞானவெற்புகந் தாடுமத்தர்தைய
லையகிக்குநன் பாலகக்கணியு
காதர்மெச்சுவந் தாடிமுத்தமருள் பெருமாளே

---

149. தத்தனதானதான தத்தனதானதான
தத்தனதானதான—தனதானா.

எத்தனை கோடிகோடி விட்டுட லாடியாடி
யெத்தனை கோடிபோன தளவேதோ

இப்படி மோகபோக மிப்படி யாகியாகி
யிப்படி யாவதேது மினிமேலோர்

சித்திடர் சிசிசி குத்திர மாயமாயை
சிக்கினி லாயுமாயு மடியேனுஞ்

சித்தினி லாடலோடு முத்தமிழ் வாணரோது
சித்திர ஞானபாத மருள்வாயே

நித்தமு மோதுவார்கள் சித்தமெ வீடதாக
நிர்த்தம தாடுமாறு முகவோனே

நிட்கள ரூபர்பாதி பச்சிலை யாலமூணு
  கெட்டிலை சூலபாணி யருள்பாலா
பைத்தலை நீடுமாயி ரத்தலை மீதுபீற
  பத்திர பாதநீல மயில்வீரா
பச்சிள பூகபாளை செய்க்கயல் தாவுவேளூர்
  பற்றிய மூவர்தேவர் பெருமாளே.

---

150. தானனா தானன—தந்ததானா.

வாரிமீ தேயெழு திங்களாலே
  மாரவே ளேவிய வம்பினாலே
பாரெலா மேசிய பண்பினாலே
  பாவியே னாவிம யங்கலாமோ
சூரனீள் மார்புதொ ளைந்தவேலா
  சோதியே வேளூர மர்ந்தகோவே
மூரிமால் யானைய ணைந்தமார்பா
  மூவர்தே வாதிக டம்பிரானே.

வயலூர்.

151. தத்த தனதன தனன தனன
  தத்த தனதன தனன தனன
  தத்த தனதன தனன தனன—தனதான.

வெப்த்த சுரிகுழ லறலோ முகிலோ
பற்ப நறுநுதல் சிலையோ பிறையோ [ம்
கெட்டையிலைவிழி பிணையோ கணையோ இனிநாவு
செக்க வமிழ்திகழ் கனியோ துவரோ
கற்க மிடறது வளையோ கமுகோ
சித்ர மினமுலை குடமோ மலையோ வநவேதேய்ந்

தெய்த்த விடையது கொடியோ துடியோ
மிக்க திருவரை யரவோ ரதமோ
வெற்பொ னடியிணை மலரோ தனிரோளெனவேமால்

இச்சை விரகுடன் மடவா ருடனே
செப்ப மருளுட னவமே திரிவேன்
ரத்ன பரிபுர விருகா ளொருகான் மறவேனே

புத்தர் சமணர்கள் மிகவே கெடவே
தெற்கு நரபதி திருநீ றிடவே
புக்க வனல்புன றிருவே டெயவே யுமையாடன்

புத்ர னெனவுரை பகர்வோன் மறைநூல்
கற்ற தவமுனி பிரமா புரம்வாழ்
பொற்ப கவுணியர் பெருமா னுருவாய் வருவோனே

சத்த முடையசண் முகனே குகனே
வெற்பி லெறிசுட ரயிலா மயிலா
சத்தி கணபதி யிளையா யுளையாய் ஒளிகூரும்

சக்ர வரிஇரு மருகா முருகா
வக்ர விறையவர் புதல்வா முதல்வா
தட்ப முளதட வயலூ ரியலூர் பெருமானே.

திருப்புகழ்

முற்றிற்று.

உ

விஷயசூசிகை.

கூ

விஷய சூசிகை.

